# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

අමුදු

AMUDHU

ஊற்று 3
துளி 11
SEPTEMBER 2001



இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை செப்டம்பர் 2001 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

තිනකරන් THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத் தாங்கி வருகின்றது.

அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள் அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...

தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன் வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்தும் முன்னிலையில் நிற்கின்றது.

வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!

நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!

வாழ்வதற்காகவே வாசிப்போம்!




தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்!

தொலைக்காட்சி கையேட்டுடன்

வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும் அரவணைத்துச் செல்லும் ஒரு பல்சுவை விருந்து!

சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும், புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்


அமுத வாசல் .................... 2
ஜுராசிக் விலங்கு........................ 4
வாசலைத் தாண்டிய கடிதம் ......... 5
நெற்றிக்கண் ............................. 6
அரசியல் ................................. 7
தமிழ் அரசியல் ஐ.ஆர்.சி.கள்
பேட்டி:
பொ.ஐ.முன்னணியும் - ஐ.தே.கவும்
இணைந்து அரசமைத்தால் ......... 10
சிரிக்கிறதா நகரம்..? ................ 12
சிறுகதை:
இறுதி மரியாதை ................... 16
உதுவன்கந்த சரதியல் ............ 18
விடாக்கண்டன் ........................ 21
காதல் தொடர் ......................... 22
பரிசுக் கவிதை-1 ..................... 24
பரிசுக் கவிதை-2 ..................... 25
வானொலி நாடகங்கள் -2 .......... 26
பரிசுக் கதை:
நான் விழித்தெழுந்தபோது ......... 30
தலவாக் 'கொலை' ................... 33
சிறுகதை:
உண்மைகள் உறங்கும்போது ....... 38
ஈழத்தமிழிலக்கிய யானைக்கு.... ...... 40
சினிமா:
சம்பாதிக்கும் களமா? ............... 42
மருத்துவம்:
மகிழ்வைக்கெடுக்கும் மலச்சிக்கல் ... 47
நூல் அறிமுகம் ......................... 48


உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை
அமுது வரவேற்கிறது.


ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி: 429496,
ஃபக்ஸ்: 429270

E-Mail: webmgr@sri.lanka.net




07

தமிழ் பேசும்
கட்சிகளின்
நிலைப்பாடு

12

This is my Moon






18

உதுவன்கந்த
சரதியல்

33

தலவாக்'கொலை'





42

சாதனை மேடையா?
சம்பாதிக்கும் களமா?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மறைந்த முன்னாள் தமிழக முதல்வரும்! நடிக முதல்வரும்! ஆம், மக்கள் திலகமும்; நடிகர் திலகமும்'' சேர்ந்து சிரித்திருக்கும், 'அமுதளித்த' காணக்கிடைக்காத அரிதான காட்சிப்படம் 'பார்த்தாலே பரவசம்' '.'.ப்ரேம்' போட்டே வைக்கலாம்!! அமுதின் வித்தியாசமான வசீகரிக்கும் அட்டைப்பட வழங்கலுக்குப் பாராட்டுக்கள்!

**- கோட்டைமுனை 'முத்துமணி' பதுளை.**

எனது ''கடைசிச் சொட்டு உசிரில்'' கவிதைத் தொகுதிக்கு சிறியதானாலும் நல்லதோர் அறிமுகக் குறிப்பு எழுதியதோடு Over Load என்ற தலைப்பில் தொகுதியிலிருந்து ஒரு கவிதையினையும் தெரிவு செய்து பிரசுரித்திருந்தீர்கள் நன்றி!

**- நளீம் வாழைச்சேனை.**

அமுதக் கடலில் ஆழ்ந்திட்டேன்!
அச்சுப்பதிப்பை அதிசயித்தேன்!
அழகான ஆசிரியர் உரை
அறிவைத் தீட்டிடும்! அமுது
அகிலத்தில் ஆதவனாய் மிளிர்ந்திடட்டும்!

**- மதுராப்புர பைரூஸ் வெலிகம.**

பரிசுக் கதை 'பொறி' நன்றாகவே இருந்தது. இன்றைய எழுத்துக்களின் கரு மாறி வருகிறது. குண்டு வைக்க வருபவர்களின் மனப் போராட்டச் சித்தரிப்புகள் தமிழுக்குப் புதியவை. போட்டிக் கதைகளை நூலாக்கி வெளியிட்டால் மிக நல்லது.

**- த. பிரசாந்தன், வவுனியா.**

நான் 'அமுது'சஞ்சிகையின் வாசகன் மட்டுமல்ல. அதனால் ஒரு எழுத்தாளனாகவும் மாறிவருகிறேன். படைப்பாற்றல் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை, சிறுகதையையும் படித்தேன் மிக நன்று. 'நீங்கள் தூவிய மலர்கள்' கவிதைப் பகுதியில் எனது கவிதையையும் பிரசுரித்தமைக்கு என்ன நன்றிகளும் பாராட்டும்.

**- ஹிதாயா நபீர் கந்தளாய்.**

உன் ஒவ்வொரு மலர்வும் என்னை மாற்றுகிறது. உன் சஞ்சிகையின் சாரல்கள் தமிழ் பேசும் இதயங்களை இதமாக்குகின்றதென்னமோ உண்மை. என்போன்ற இளசுகளின் இதயங்களை குளிரவைக்கின்றது.

**- என். சுதாகர் பொத்துவில்-10.**




அருமையான ஆக்கங்களை சுமந்துவரும் அமுதே. யூன் மாத இதழில் வெளிவந்த கால ஒலி, ஆங்கில சிறுகதையான பத்தாவது நாளில் புலிகள், மாலன் பேட்டி என்பன அருமை.

தமிழில் வெளிவராத வேறு மொழி ஆக்கங்கள், கவிதைகளை இன்னும் அதிகமாக அமுதில் காண ஆசைப்படுகின்றேன்.

அறிவுசார்ந்த விடயங்களை அழகாக சொல்லிவரும் அமுதே! வரும் அன்னைத்து அம்சங்களும் அருமை.

''பூங்காவை செயலிழக்க செய்யும் தென்றல் பயனற்றது'' என்பது போல, பக்கச் சார்பு அரசியல் கட்டுரைகள் அமுதின் பெயருக்கும், அமுதில் வரும் சிறப்பான ஆக்கங்களுக்கும் கறையாக இருக்கிறது. நடுநிலைமையோடு நடந்தால் அமுதின் வளர்ச்சியும் பணியும் இன்னும் சிறப்படையும்.

**- எஸ்.சாந்தகுமார் யாழ். பல்கலைக்கழகம்.**




தற்போதைய எதிர்க்கட்சியின் ஆட்சிக் காலத்தில், 1977-1983ம் ஆண்டுவரை தமிழ்மக்களுக்கு நடந்த கொடூரம் மாவனல்லையில் முஸ்லிம்களுக்கு நடந்த கொடூரத்தை விட பலமடங்கு அதிகமாகும். அதனை ஆவணிமாத அமுதவாசலில் வெளிவந்த வாசகத்தை எழுதிய ''இதயநிலா'' அறியவில்லை போலும்...

பண்டாரவன்னியன் காலம் தொட்டு உண்மைகளை மறைக்கும் வழக்கமும் தமிழரிடையேயும் அவர்களின் தலைமைபீடத்திடையேயும் தொடர்கிறதே, இதுவும் தமிழினம் செய்த பாவமா? அதனை முறியடித்து உண்மைகளை வெளிவிடும் அமுதுவின் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

**- அமுத வாசகி, யாழ்ப்பாணம்.**

ஒழுங்காக இல்லையெனினும் 'அமுது' இதழை அடிக்கடிவாசிக்கிறேன். பல காத்திரமான படைப்பாளிகள். பற்றி அமுது அறிந்திருக்கிறது. மகிழ்ச்சி. சமகால அரசியல், இலக்கிய, விடயங்களில் 'அமுது' அக்கறை காட்டுகிறது. இவ்விடயங்களில் 'அமுது'வுக்குரிய தனித்த இடத்தைப்பெற வாழ்த்துகிறேன்

**- கல்லூரன் கல்முனை.**

'அமுது' இதழ் கண்டேன்! இணையற்ற இருபெரும் திலகங்கள் - நடிகர் திலகமும் மக்கள் திலகமும் இணைந்திருந்த காட்சியினை அட்டையிலே தந்திட்ட தங்களுக்கு முதற்கண் எனது நன்றி! அமைப்பிலும் விடயங்களிலும் 'அமுது' தமிழிலக்கியப் பரப்பில் தனியிடம் பெற்று வருகிறது!

படங்கள், கதை, கவிதை, தகவல்கள் என அதன் உள்ளடக்கம் வெகு நன்றாக உள்ளது. ''கலைக்குரிசில்'' பற்றிய கட்டுரை மிகவும் சிறப்பானதாக அமைந்திருந்தது. ஏனைய விடயதானங்களும் மிகவும் பயன் உடையன.

**- ப.மகேந்திரதாசன் நாயன்மார்கட்டு.**

ஜுலை மாத அமுது வாசித்தேன். மிக சுவாரஸ்யமாக இருந்தது. கணையாழி, தாமரை போன்ற சஞ்சிகைகளையும் விட நம் நாட்டு 'அமுது' அழகானது. அரசியல்வாதிகளின் படங்களை முன் அட்டையில் பிரசுரிப்பதை குறைத்துக்கொண்டு ஈழத்து இலக்கியவாதிகளின் படங்களையும் பிரசுரம் செய்தால் நன்றாக இருக்கும். கவிதைப்பக்கம் வித்தியாசம். இளங் கவிஞர்களின் கவிதைகள் புதுமையாக உள்ளன. இளம் கவிஞர்களை வளர்த்துவிட நம்நாட்டில் சஞ்சிகைகள் நப்பித்தனம் பிடிக்கின்றன. 'அமுது' ஈழத்தில் பல புதுமைகள் படைக்க என் ஒத்தாசை என்றும் உண்டு.

**- முகமட் அபார் கல்முனை.**

''அபத்த நாடகப் போக்குகள்'' மாவனல்லை விடயங்கள், பொது நீரோட்டமும்... கட்டுரை, ஆடை அலங்காரங்களுக்கு அடியில் எழுதப்பட்ட - வார்த்தைகள், வஸந்தின் காதல்..., முக்கியமாக 'மால்குடி' ஆர்.கே.நாராயண் பற்றிய குறிப்புகள், ஆசிரியர் கருத்து என்பன நான் ரசித்த பயன்மிக்க பகுதிகள். தவிர, விரிவாக ஒரு விடயத்தை எழுதுவதற்கு முடியாது போயினும் ஒரு கருத்தை மட்டும் கூறவிரும்புகிறேன். அதாவது 'பேரியல் பற்றிய தங்கள் தீர்மானங்களுக்கும் - ஹக்கீம் பற்றிய தங்கள் முடிவுகளுக்கும், என் பிரதேசமக்களின் அபிப்பிராயங்களுக்கும் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன...

வேறென்ன சொல்வது?

'அமுது'டன் நான் இணைந்திருப்பதிலும் - மக்களுடன் 'அமுது' இணைந்திருப்பதிலும் மகிழ்ச்சியடைகிறேன். நான் வேண்டுவதும் அதுவொன்றுதான்

**- அனார் சாய்ந்தமருது-16.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....



சுயநிர்ணய உரிமை!

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய சிந்தனைகளில் முக்கியத்துவம் பெற்றுள்ள இந்தச் சொல் பலராலும் அர்த்தம் புரியாமலே உச்சாடனம் செய்யப்படுவதாகவும் ஆகிவிட்டுள்ளது. அதனால் இதில் தீர்வுக்கான வழிவகையைக் காண்பதைவிட இதையும் போராட்டத்துக்கான ஆயுதமாக்கிக் கொள்ளும் முனைப்புடன்தான் இப் பதம் பல்வேறு தரப்பினரால் எடுத்தாளப்படுகிறது.

சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்கும் உரிமை என்பதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இங்கு, ஒரு பொது மொழி, ஒரு பொதுப் பிரதேசம், பொதுப் பொருளாதார வாழ்வு, பொதுக் கலாசார உணர்வு ஆகியவற்றை ஒருங்கே கொண்ட மக்கள் ஒரு தேசிய இனமாகக் கருதப்படலாமென்ற வரையறையை ஸ்டாலின் வகுத்திருந்தார். எவ்வாறாயினும், தேசிய இனமாகப் பரிணமித்திருக்கும் ஒரு சமூகம் தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்கக்கூடிய உரிமையையும் கொண்டுள்ளதாகிறது. இந்த உரிமையானது தேசிய இனப் பிரச்சினையொன்றை எதிர்கொள்கையில், பிரிந்து செல்வதற்கான உரிமையாக மறு அர்த்தம் கொள்ளப்படுகிறபோதே சில மயக்கங்கள் தோன்றுகின்றன. குடும்பமாக வாழ்கின்ற ஒரு தம்பதியின் கணவன் மனைவி ஒவ்வொருவருக்கும் பிரிந்து செல்வதற்கான உரிமை உண்டு எனினும் அவர்கள் பிரிந்து செல்வதற்காக குடும்ப வாழ்க்கை வாழவில்லை. ஒவ்வொரு சிறு பிணக்கின்போதும் அவர்களில் எவரும் பிரிந்து செல்லும் உரிமையை உயர்த்திப் பிடிக்க விழைவதில்லை. உண்மையில் பிரிந்து செல்லவும் முடியுமென்ற அங்கீகாரம்தான் அவர்களைச் சேர்ந்து வாழ வைத்ததும்கூட. அதனால் ஒரு திருமணமென்பதைப் பிரிந்து செல்வதற்கான உரிமையாக அர்த்தப்படுத்துவது எவ்வளவு அபத்தமோ அதேபோல் சுயநிர்ணய உரிமையையும் பிரிவினைக்கான உரிமையாக அர்த்தப்படுத்துவதும் அபத்தமானது. உண்மையில் சேர்ந்து வாழ்வதை உத்தரவாதப்படுத்தும் ஒரு சமூக மனப்பாங்குக்கான ஏற்பாடாகவே சுயநிர்ணய உரிமை பேணப்படல் வேண்டும். இதேவேளை சுயநிர்ணய உரிமை என்பதே இனப்பிரச்சினையின் தீர்வு ஆகிவிடாது. மாறாக ஒரு தீர்வில் சுயநிர்ணய உரிமை எவ்வாறு அர்த்தப்பட்டு இருக்கிறதென்பதே பிரதானமாகப் பார்க்கப்பட வேண்டியதாகும். அதாவது பரிமாறப்பட்ட உணவில் உப்பு போதுமா எனப் பார்ப்பதைப்போல. மாறாக உவர்ப்பே ஒரு உணவாகிவிட மாட்டாதல்லவா?

நாம் எம் நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வை உருவாக்குவதன் மூலம்தான் சுயநிர்ணய உரிமையையும் அனுபவிக்க முடியும். தீர்வு இன்றிச் சுயநிர்ணய உரிமையைத் தனித்ததாக ஒருபோதும் அடையாளம் காண முடியாது. நாம் எதையும் சுலோகங்களாக்கிக் கொள்வதைவிட அவற்றை அர்த்தபூர்வமானதாக்கும் சாத்தியங்களைச் சிந்திப்பதே அவசியம்.




ஆ-ர்.

ஆசிரியர்:
எஸ். மனோரஞ்சன்
பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒ.்.ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Phone: 429496, Fax: 429270
E-Mail: webmgr@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டைனோசர் என்றவுடனே இப்போது எம் மனக் கண் முன் தோன்றுவது உலகெங்கும் திரையிடப்பட்டு, வசூலில் சாதனை படைத்து வெற்றிக் கொடிகட்டிய ஸ்டீவன் ஸ்பீல்பேர்கின் 'ஜுராசிக் பார்க்' படமே.

வேறு வகையில் சொன்னால் டைனோசர் என்ற கனவை - கற்பனையை நனவில் காணக்கிடைத்ததே இந்தப் படத்தில்தான்.

ஒருகாலத்தில் டைனோசர் என்பது வெறும் கற்பனைதான். பறக்கும் மனிதன், பேசும் கொரில்லா போன்றதுதான் இதுவும் என்று எண்ணிக் கொண்டிருந்தோம்.

ஆனால் டைனோசர் என்ற ஒரு மிருகம் இருந்திருக்கிறது. உலகில் ஏற்பட்ட திடீர் கால மாற்றங்கள், யுகமாற்றங்கள், பிரளயங்கள் காரணமாக அவை அழிந்து போயின என்று உயிரியல் விஞ்ஞானிகள் ஆதாரபூர்வமாக கண்டு பிடித்து தெரிவித்துள்ளனர்.

டைனோசர்கள் உண்மையில் பல்லி இனங்களுடன்தான் சேர்த்தி. பறக்கும் டைனோசர்களும் இருந்திருக்கின்றன. டைனோசர் டெர்ரிபன் லிஸார்ட்ஸ் (அசுரப்பல்லிகள் என்று பொருள்) ஊர்வன இனத்தைச் சேர்ந்ததே.

ஜுராசிக் பார்க் படம் வந்த பின்னர்தான் டைனோசர்கள் பற்றிய தகவல்கள் முதன்முதலாக வந்ததாகவும் சிலர் கருதக்கூடும்.

அப்படியில்லை. 1825களிலேயே டைனோசர் பற்றிய செய்திகளும் அது பற்றிய சர்ச்சைகளும் இதை யொட்டிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. அந்த செய்திகளைக் கேட்டு முழு உலகமுமே மூக்கின் மேல் விரலை வைத்தது.

யானையைவிட மூன்று மடங்கு பெரிய இராட்சதப் பல்லி ஒன்றின் பற்களும் இடுப்பு எலும்புகளும் மண்டையோடுகளும் கிடைத்துள்ளன என்ற தகவலே அது.

1841இல் உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் டைனோசரின் எலும்புக் கூடுகள் அதன் பகுதிகள் கிடைக்க ஆரம்பித்தன. ரிச்சட் ஒவென் (Richard Owen) என்ற பிரிட்டிஷ் உடற்கூற்றியலாளர்தான் டைனோசர் என்ற பெயரைச் சூட்டியவர்.





இது ஊர்வனவற்றில் தலைசிறந்தவை என்றும் பாலூட்டிகளின் நெருங்கிய உறவினர் என்றும் கூறப்படுகின்றது.

டைனோசர்கள் 320 லட்சம் வருடங்களுக்கு முன் உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்து வந்துள்ளன என்பது இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகின்றது.

இதிலுள்ள இன்னுமொரு ஆச்சரியமான செய்தி, இவை இலங்கையிலும் வாழ்ந்திருக்கின்றன என்பதுதான். சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னிய குடியரசின் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனமே டைனோசரை முதன் முதலில் கண்டுபிடித்ததுடன் அது பற்றி ஆய்வு செய்வதிலும் முன்னணி வகிக்கின்றது.

1983இல் சிகாகோ பல்கலைக்கழகத்தில் உடற்கூற்றியல் ஆராய்ச்சியாளர்களான டேவிட் ரவுப், ஜோர்ஜ் செப் கோஸ்கி ஆகியோர் 26 மில்லியன் வருடங்களுக்கு முன் ஏற்பட்ட யுகப்பிரளயத்தில் இவை அழிந்து போயிருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர்.

டைனோசரின் முட்டை 6 அங்குலம் இருக்கும். முட்டை உடைந்ததும் உள்ளே உள்ள டைனோசர் நன்றாக கொழுத்து வளர்ந்த ஓணானின் அளவில் 15 அங்குல அளவில் இருக்கும்.

இதன் கழுத்தும் வாலும் மிக நீண்டு காணப்படுவதுடன் கால்கள் யானையின் கால்களை ஒத்திருக்கும்.

**யானையை விட மூன்று மடங்கு பெரிய இராட்சதப் பல்லி ஒன்றின் பற்களும் இடுப்பு எலும்புகளும் மண்டையோடுகளும் கிடைத்துள்ளன...**

பிறந்தவுடன் ஓணானைப் போலவே காணப்பட்டாலும் இது 45 அடி வரை வளரக்கூடியது.

சீனா, மொங்கோலியா, இந்தியாவில் குஜராத் மாநிலங்களில் இதன் முட்டைகள் கிடைத்துள்ளன.

குஜராத் மாநிலத்தில் மக்கள் இந்த முட்டைகளை சிவனின் அற்புதப் படைப்பாகக் கருதி சாம்பிராணி காட்டி, தேங்காய் உடைத்து வணங்குகிறார்கள். தமது வாழ்வு வளம்பெற வேண்டும் என்று பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பலவகையான டைனோசர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 20 வகைகள் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. குஜராத் பகுதியில் இதன் முட்டை ஒன்று 1000 அமெரிக்க டொலர் வரை விற்கப்படுகின்றது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசலைத் தாண்டிய கடிதங்கள்

## எங்கள் பிள்ளைகளைச் சுதந்திரமாகப் படிக்க விடுங்கள்! உங்கள் போதனைகள் - மூளைச்சலவை எங்களுக்கு வேண்டாம் பிள்ளைகளே!!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சிகள் செய்தி ஊடகங்களாலும், 'பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்' என்ற பெயரில் ஒளித்துக்கொண்டு செயல்படுகின்ற நிழல் அமைப்பு வெளியிடுகின்ற அறிக்கைகளாலும் அதற்கு "சிஞ்சிஞ்சா" போடுகின்ற ஊடகங்களினாலும் உண்மை முற்றுமுழுதாக மறைக்கப்பட்டு ஒரு மாயத்தோற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

2.7.2001 இரவு சுமார் எட்டு மணியளவில் திவ்வியன் என்ற யாழ். பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பிரிவு (கணிதம்) 3ம் ஆண்டு இறுதிப்பரீட்சை எடுத்த மாணவன், இணுவில்-கோண்டாவில்-உரும்பிராய் சந்திக்கும் பற்றைகளும் தோட்டவெளிகளும் நிறைந்த சனநெருக்கம் அற்ற பகுதியில் இராணுவத்திடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

4.7.2001- இவர் கைது பற்றி மனித உரிமைப் பிரிவு அறிவித்தது. அன்றே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பல்கலைக் கழக வாயில்கள் பூட்டு போட்டுப் பூட்டப்பட்டன. உள்ளுக்குள் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த மாணவ மாணவிகள் விரிவுரையாளர்கள், உபவேந்தர் உட்பட யாபேரும் இந்த நிழல் குழுவினால் அடைக்கப்பட்டனர்.

'உதயன்' பத்திரிகையில்கூட பூட்டுக்குள் இருந்தவாறே உபவேந்தர் கேற்றுக்கு வெளியே நின்ற இராணுவ பொலீஸ் அதிகாரிகளுடன் உரையாடினார் என்று செய்தி வெளியிடப்பட்டது. இந்தக் கதவடைப்பு பல்கலைக்கழக மானியக்குழுத் தலைவரின் பல்கலைக்கழகத்தை மூடும் உத்தரவுடன் முடிவடைந்தது.



இதற்கிடையில் இக்கும்பல் பாடசாலைகளுக்குச் சென்று உயர்தர மாணவர்களைச் சந்தித்து பாடசாலையை பகிஸ்கரிக்கும்படியும் கீழ்வகுப்பு மாணவர்களை அடித்து துரத்தும்படியும் கூறியது.

பாடசாலைக்குச் சென்ற கீழ்வகுப்பு மாணவர்கள் வெள்ளை நீளக்காற் சட்டையும் வெள்ளைச் சேட்டும் போட்ட கும்பல்களினால் அடித்தும் குட்டியும் தெருவெங்கும் கலைத்த காட்சியும் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் உள்ளே நுழைந்த கும்பல்களினால் விரட்டப்பட்ட காட்சியும் 6ம் திகதி வெள்ளிக்கிழமை இங்குள்ள எல்லோராலும் காணக்கூடியதாக இருந்தது. இதைவிட வன்முறைக்கும்பல்கள் பாடசாலைக்கு, அல்லது பொலீசுக்கு சிறுவர்கள் மூலம் கல் எறிந்த சம்பவங்களும் காணக்கூடியதாக இருந்தது.

இறுதியாக யாழ்ப்பாணப் பெற்றோர்கள் என்ற ரீதியில், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தை மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் எம்போன்ற பெற்றோர்கள் நாளும் பொழுதும் எவ்வளவோ கஷ்டப்பட்டு உங்களைப் படிப்பித்து உயர்கல்வி பெறத்தான் உங்களைப் பல்கலைக்கழகம் அனுப்பியுள்ளார்கள். நீங்களும் கவனமாகப் படியுங்கள். மற்றவர்களையும் கல்விகற்க அனுமதியுங்கள். வாழ்வில் உங்கள் லட்சியத்தில் உயருங்கள்.

யாழ்ப்பாண மக்களாகிய எங்கள் பாதுகாப்பு எங்கள் உரிமை எங்கள் நலன்கள்... நாங்கள் வயது முதிர்ந்தவர்கள் எல்லா விடயங்களிலும் எங்களுக்கு அனுபவம் ஆற்றல் உண்டு. எங்கள் விடயங்களை நாங்கள் கவனிக்கின்றோம். எங்கள் பாதுகாப்பு எங்கள் உரிமை போன்றவற்றை நீங்கள் கட்டுக் குத்தகைக்கு எடுக்காதீர்கள்.

தயவுசெய்து எங்களை அமைதியாக வாழவிடுங்கள்.

எங்கள் பிள்ளைகளைச் சுதந்திரமாகப் படிக்க விடுங்கள்.

உங்கள் போதனைகள் - மூளைச்சலவைகள் எங்களுக்கு வேண்டாம் பிள்ளைகளே!.

**- யாழ் குடா நாட்டில் வசிக்கும் வேதனையுறும் பெற்றோர்.**

*வாசலைத் தாண்டிய பகுதிக்கு கடிதங்கள் அனுப்புவோர் தவறாது தங்கள் பெயர் முகவரி குறிப்பிட வேண்டும். அவர்களின் பாதுகாப்பு கருதி விபரங்கள் வெளியிடப்படமாட்டா என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*- ஆசிரியர்*

# இப்ப விளங்குகிறதல்லவா?

நாட்டில் கடந்த சில தினங்களாக நடந்தேறிவரும் அரசியல் நிகழ்வுகளில் இரண்டு விஷயங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒன்று ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழ்கட்சிகள் சிஹல உறுமய, முஸ்லிம் மத அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் ஆகியனவும் அரசியல் அமைப்பு மாற்றம் குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பை கைவிடச் சொல்லி அரசாங்கத்திடம் ஏகோபித்து வலியுறுத்துவது. இதன் அர்த்தம் என்னவென்றால் நாட்டில் இனப்பிரச்சினை தீர்வதோ ஜனநாயக தேர்தல் முறை வருவதோ கூடாது என்பதுதான். தமிழ் கட்சிகள் இந்த கருத்தில் சேர்ந்து நிற்பது சுத்த அயோக்கியத்தனம்.

அதுதவிர ஒரு பிரச்சினையில் நாட்டின் அதி உயர்ந்த ஜனநாயக சபையான மக்களிடம் அபிப்பிராயம் கேட்பதை அனைவரும் எதிர்ப்பதில் இருந்தே அவர்கள் கூறும் ஜனநாயகம் புரிகிறது. அரசுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்று பதவி விலகக் கோருபவர்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை எதிர்கொண்டு அரசைத் தோற்கடித்திருக்கலாம் தானே? இதிலிருந்து மக்கள் ஆதரவு யாருக்கு உண்டு, யாருக்கு இல்லை என்பது புலனாகிறது.

இரண்டாவது, ஜே.வி.பி ஆதரவுடன் தற்போதைய அரசாங்கம் ஆட்சியை நீடிப்பதை வர்த்தக சமூகத்தினரும் மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளும் விரும்பவில்லை என்ற விஷயம். ஜே.வி.பி.யின் சிங்கள இனவாதத்தைப் பற்றி மூச்சும் விடாமல் இருக்கும் இவர்கள், அக்கட்சியின் ஏகாதிபத்தியவிரோத, முதலாளித்துவ விரோத பொருளாதார கொள்கையைக் கண்டு அச்சத்தால் ஆரவாரப்படுகின்றனர். அதனால் பொ.ஐ.மு - ஐ.தே.க கூட்டு அரசுக்கு ஏற்பாடு செய்ய திரைமறைவு முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

மொத்தத்தில் என்ன? நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் மக்களின் கருத்தைக் கேட்கக் கூடாது; முதலாளித்துவ நலன்களால் பாதிக்கும் வகையில் அரசியல் கூட்டு ஏற்படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்ப விளங்குகிறது அல்லவா, ஐ.தே.க தலைமையிலான எதிர்க் கட்சிக் கூட்டணியினதும், சமூகத்தின் சமய, சமூக பெரியார்களினதும் நோக்கம்?

**- க.ஆறுமுகத்தம்பி**
**தாமரைக்கேணி, மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் ஆணைப் பசி




நக்கீரன்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மைக்கும் பொருளாதார சீரழிவுக்கும் பரிகாரம் காணுமுகமாக ஆளும் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நடைபெற்ற மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்தத் தோல்வி சில தரப்புகளால் எதிர்பார்க்கப்பட்டும் இன்னும் சில தரப்புகளால் விரும்பப்பட்டும் இருந்தபோதிலும், நாட்டின் பெரும்பாலான மக்கள் ஏதாவது நல்லது நடக்கக்கூடும் என நம்பினர்.

இரண்டு பிரதான கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வந்து ஒரு அரசு அமையுமானால் அவ்வரசு ஒரு தீவிர முதலாளித்துவ வலதுசாரி அரசாக அமையும் என இடதுசாரிகள் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் இருந்தனர்.

அதேபோல அவ்வரசு சிறுபான்மை இன மக்களான தமிழ்-முஸ்லிம் மக்களை புறந்தள்ளும் அரசாக இருக்கும் என அம்மக்களால் (தமிழ் கட்சிகளால் அல்ல) விசனமும் தெரிவிக்கப்பட்டு வந்தது.

ஆனால் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா ஐ.தே.கவுக்கு விடுத்த பேச்சுவார்த்தை அழைப்பில், சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வுகண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், தேர்தல் முறையில் சீர்திருத்தம் செய்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும் கொடுத்த முன்னுரிமை மக்களுக்குத் தெம்பூட்டியது.

ஐ.தே.க. பிரதமரின் யோசனைகளை நிராகரித்து தனது வழமையான கட்சி சார்ந்த கோரிக்கைகளான பாராளுமன்றத்தை மீளக்கூட்டுதல், அபிப்பிராய வாக்கெடுப்பை ரத்துச் செய்தல், ஐந்து ஆணைக்குழுக்களை நிறுவுதல் என்ற பல்லவியைப் பாடினாலும் அரசின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டது மக்களுக்கு சற்று மகிழ்ச்சியளித்தது.

இருதரப்பும் மூன்று நாட்களாக பலமணி நேரங்களைச் செலவிட்டுப் பேசிய பின்னர் வந்தடைந்த முடிவு தோல்வியாக இருப்பதைக் காணும்போது மக்களின் நம்பிக்கைகள் சிதறிப் போயுள்ளன. இதில் கவலைக்குரிய விஷயம் என்னவென்றால் இத் தோல்விக்கான பிரதானமான உடனடிக் காரணிகள் கொள்கை சார்ந்தவை அல்ல என்பதே.

பொ.ஐ.மு. இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்ற அடிப்படையிலிருந்தே பேச்சுவார்த்தையை அணுகியது. பாராளுமன்றத்தில் ஐ.தே.கவை விட அதிகமாக 20 உறுப்பினர்களையும், அதைவிட 5 லட்சத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற தகுதியையும், நிறைவேற்று அதிகாரமுள்ள தனது கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியையும் தன்னிடத்தே கொண்டுள்ள பொ.ஐ.மு நாட்டு நலன்கருதி சில விட்டுக் கொடுப்புகளையும் தியாகங்களையும் செய்ய முன்வந்தது.

ஆனால் அரசியல் சந்தர்ப்பவாதத்தையும் பதவி மோகத்தையும் மட்டுமின்றி விடுதலைப் புலிகளின் தேசவிரோத திட்டங்களையும் கொண்டுள்ள சில உதிரிக் கட்சிகளை அணைத்து வைத்திருக்கின்ற ஐ.தே.க எப்படியும் ஆட்சியதிகாரத்தைத் தனது கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்தே பேச்சுவார்த்தையை அணுகியது.

அதன் காரணமாக பேச்சுவார்த்தை மேசையில் அரசாங்கம் ஏற்கமுடியாத கோரிக்கைகளை முன்வைத்து ஐ.தே.க விதண்டாவாதம் செய்தது. பிரதமர் பதவியை தமது கட்சிக்குத் தரவேண்டும் என்று கோரியது மட்டுமின்றி ஜனாதிபதியிடமிருக்கின்ற முக்கிய அதிகாரங்களில் அரைவாசிக்கு மேற்பட்டதை தனது பிரதமரிடம் தரவேண்டும் என்றும் கோரியது.

அதுமட்டுமின்றி மந்திரிசபையை தானே அமைக்க வேண்டும் என்றும் அதில் இடம் பெறும் பொ.ஐ.மு அமைச்சர்கள் யார் யார் என்பதைக் கூடத் தானே தீர்மானிக்க வேண்டும் என்றும் கோரியது.

அதேவேளையில் தற்போதைய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கென சம்பிரதாயபூர்வமாக ஒரு உப ஜனாதிபதி பதவியை உருவாக்கும் பொ.ஐ.மு ஆலோசனையையும் ஒரேயடியாக நிராகரித்தது.

ஐ.தே.கவின் இந்தப் போக்கு அதிகார ஆசைவெறியின் வெளிப்பாடு மட்டுமின்றி, நீண்டகாலம் இந்நாட்டில் அரசியல் கட்சிகள் பின்பற்றி வருகின்ற அரசியல் நாகரிக நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட சின்னத்தனமுமாகும். பொ.ஐ.மு அரசிடமிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக சில கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு இயக்கம் நடாத்திய ஐ.தே.க இறுதியில் நாட்டையும் மக்களையும்விட தனது அதிகார ஆசை மேலானது என்பதைக் காட்டிவிட்டது.

ஐ.தே.கவின் இந்த அதிகாரப் போராட்டநாடகத்தில் சில கோமாளிகளும் நடிக்கத் தவறவில்லை.

ஏற்கனவே அக்கட்சியின் தலைமையில் அமைந்த கூட்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எவ்வித திட்டமும் இன்றி இணைந்த சில தமிழ் - முஸ்லிம் கட்சிகள், பின்னர் ஐ.தே.க, பொ.ஐ.மு. உடன் சேர்ந்து அரசமைப்பதற்காக அக்கட்சிகளைக் கைவிட்டு ஓடியபோதும் அலட்டிக்கொள்ளாமல் அதே சூடு சுரணையற்ற கோமாளிகளாகவே வலம் வருகின்றனர். (துரோகிகள் என்ற சொல்லை இவர்களுக்குச்சொல்லி நாமும் அலுத்து அவர்களும் அலுத்துவிட்டதால் இந்த பெயர் மாற்றம் செய்துள்ளோம்!)


எனவே இன்றைய சூழ்நிலையில் நாட்டைக் காக்கும் முயற்சியில் ஐ.தே.கவோ ஏனைய எதிர்க்கட்சிகளோ உருப்படியாக எதையும் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதைவிட பொ.ஐ.மு அரசு தீர்க்கமாக ஆலோசித்து நாட்டு மக்களின் தீர்ப்பையும் அவர்களது ஒன்று திரண்ட நடைமுறைப் பங்களிப்பையும் நாடுவதே சிறந்த தீர்வாகும். அதைவிடுத்து ஐ.தே.கவின் அதிகார ஆனைப்பசிக்கு தீனிபோட அரசாலோ நாட்டு மக்களாலோ எக்காலத்திலும் முடியப் போவதில்லை என்பதே இன்றுள்ள நிலைமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் ஐ. ஆர். சிகள்..!

நமது நாட்டுத் தமிழ் கட்சிகள் சிலவற்றுக்கும் அதன் தலைவர்கள் சிலருக்கும் திடீரென இந்த நாட்டின் ஜன பாதுகாப்பதற்கான ஆவல் எழுந்துள்ளது.

சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக தமிழர்களின் இனவிடுதலை பற்றியே ஓயாமல் வாய்கிழிய பேசிவந்த தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சியினரும், இனவிடுதலைக்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் குதித்த ரெலோ இயக்கத்தினரும் இன்று தங்களது பழைய இலட்சியங்களை எல்லாம் மூட்டைகட்டிப் பரணில் ஏற்றிவிட்டு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான போர்க்களத்தில் இறங்கியுள்ளனர்.




இந்த ஜனநாயகப் போராட்டத்தில் இவர்களுக்கு தலைமைவகிக்கும் பொறுப்பை அதிகார ஆசை கொஞ்சம்கூட இல்லாத ஐக்கிய தேசியக்கட்சி பொறுப்பேற்றுள்ளது.

இந்தப் போரில் இன்னும் சில தளபதிகளும் இணைந்துள்ளனர். அவர்கள் வேறுயாருமல்ல. கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு மக்களால் விரட்டியடிக்கப்பட்ட வாசுதேவ நாணயக்கார, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஹரிச்சந்திர விஜேயதுங்க என்போர்...

சமதர்மமும் இனசமத்துவமும் பேசிய வாசுதேவ நாணயக்கார கடந்தவருடம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்தபோது அதற்கெதிராக அந்தர் பல்டி அடித்து ஐ. தே. கவுடனும் சிங்கள இனவாதிகளுடனும் இணைந்து அதை எதிர்த்ததை நாட்டு மக்கள் குறிப்பாக தமிழ்மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை.

அவரது மார்க்ஸிசத் தந்தை பிலிப் குணவர்த்தனா செய்தது போல 'மார்க்ஸிசச் சிங்கமாக' கர்ச்சனை செய்துவிட்டு பின்னர் பதவி மோகத்தால் 'மேரியின் ஆட்டிக் குட்டி'யாக மாறி ஐ. தே. க யானையின் வாலில் தொங்கியதுபோல வாசுதேவாவும் இறுதியில் ஐ.தே.க மேடையில் தனது இறுதி மூச்சைவிடத்தான் விரும்பினார். ஆனால் பதவி மோகத்தால் ஜே. வி. பி தம்பிமாரின் தயவை இன்று நாடி நிற்கின்றார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் இன்று புலிகளிடம் பெற்றுள்ள 'ஞான ஸ்தானம்' அவரை ஐ. தே. கவின் ஜனநாயக மேடையில் கொண்டுபோய் இருத்தியுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபாவையும் இதர தலைவர்கள் தொண்டர்களையும் படுகொலை செய்த புலிகளுக்கு அவர் வக்காலத்துவாங்கித்திரிவதை தமிழ் மக்கள் தமது துரோக அத்தியாயங்களில் குறித்து வெகு காலமாகிப்போய்விட்டது.

சிங்கள பூமிபுத்திரக்கட்சியின் தலைவர் ஹரிஸ்சந்திர விஜேதுங்க கடைந்தெடுத்த சிங்கள இனவாதியென்றபடியால் அவர் தனது பெரியண்ணன் வீடான ஐ. தே. க கூட்டில் இருப்பதை நாம் குறை கூறமுடியாது.


ஆனால் எமது கேள்வியெல்லாம் ஐ.தே.க தலைமையிலான இந்த சிங்கள இனவாதிகளின் கூட்டில் முன்னாள் சமஷ்டிவாதிகள், ஐம்பதுக்கு ஐம்பதுக்காரர்கள், தமிழ்ஈழம் வாதிகள், ஈழம் வாதிகள், சமதர்மவாதிகள் என்ற ஐம்பக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து என்னவகையான ஜனநாயகத்தைக் காப்பாற்றப்போகிறார்கள் என்பதே.

இந்தத் தமிழ் கட்சிகள், ஐ. தே. கவுக்கும் ஜனநாயகத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை தமிழ் மக்களுக்கு விளக்குவது அவசியமானது.

ஏனெனில் ஐ.தே.க அதனுடைய முதலாவது ஆட்சிக்காலமான 1947 - 56 வரையான காலத்திலும் பின்னர் 1965 - 70 வரையான காலத்திலும் இறுதியாக 17 ஆண்டுகள் நீடித்த 1977 - 94 வரையான காலத்திலும் இந்த நாட்டில் ஜனநாயகத்தை எவ்வாறு பாதுகாத்தது என்பதை சிங்கள மக்களும் அரசியல் ஞானமுள்ள தமிழ் முஸ்லிம் மக்களும் நன்கறிவர்.

அதனால்தான் 1994லிருந்து நடைபெற்ற 10 தேர்தல்களிலும் பொதுமக்கள் ஐ. தே. க வைத் தோற்கடித்து வருகின்றனர் என்பதையும் அறிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமது கட்சியின் முன்னாளைய தலைவர் 1978ல் கொண்டுவந்து இன்று நடைமுறையில் இருக்கின்ற ஜனநாயகவிரோத விகிதாசார தேர்தல் முறை காரணமாகவே கடந்த பொதுத்தேர்தலில் ஐ. தே. கவுக்கு 89 ஆசனங்கள் கிடைத்தது.

பொதுசன ஐக்கிய முன்னணி ஐ.தே.க.வை விட 5 இலட்சத்திற்கும் அதிகமான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தொகுதி அடிப்படையில் மூன்றிலிரண்டுக்கு மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெற்ற போதும் நாட்டு மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்து குறிப்பாக தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கமுடியாதபடி ஜே. ஆரின் விகிதாசாரமுறை அரசியலமைப்பு தடையாக இருக்கின்றது.

இது அடிப்படையில் ஒரு ஜனநாயக விரோத நிலைமை. இந்த நிலைமையை மாற்றி உண்மையான ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதானால் இன்றைய அரசியல் அமைப்பு மாற்றப்படுவது அவசியமானது.

அரசியல் அமைப்பை மாற்றுவதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான அம்சங்களை உள்ளடக்கிய புதிய ஜனநாயக அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க முடியும். எவராலும் மறுக்க முடியாத இந்த யதார்த்தபூர்வமான நிலையைக் கணக்கில் எடுத்தே அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளடங்கிய புதிய அரசியலமைப்பு யோசனைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தது.

ஐ.தே.க புதிய அரசியலமைப்பை ஆதரிப்பதாகக் கூறிவிட்டு பின்னர் அதில் தமிழ்மக்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படுவதாகக் கூறி கிழித்தெறிந்து நிராகரித்து விட்டது.

இந்த இடத்தில் அரசின் பக்கம் நின்று அதன் கரங்களைப் பலப்படுத்த வேண்டிய தமிழ்க் கட்சிகள் மிகவும் இரண்டகமாக செயல்ப்பட்டு தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்தன. தீர்வுயோசனைகளுக்கு எதிராக ஐ.தே.க.வுடன் சேர்ந்து செயற்பட்டு வரலாற்று கறையைப் பூசிக்கொண்டன.

தமிழ் கட்சிகள் தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கப் போதாது என்ற காரணத்தாலேயே அவ்வாறு நடந்து கொண்டதாக அவர்களது ஆதரவாளர்கள் அப்பொழுது சமாதானம் கூறினர். ஆனால் அந்தத் துரோகச் செயல் முடிவதற்கு முன்னரே இப்பொழுது அடுத்த துரோக நாடகத்தில் அக்கட்சிகள் இறங்கியுள்ளன.

ஜனநாயக முறையில் நடைபெறுகின்ற தேர்தல் மூலம் இனிமேலும் ஆட்சிக்கு வரமுடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்ட ஐ.தே.க, மக்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியையும் பொ.ஐ.மு அரசாங்கத்தையும் என்னவிதமான சூழ்ச்சிகளைப் பாவித்தேனும் கவிழ்த்துவிடுவது என கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது.

விகிதாசார முறையால் ஜனநாயகவிரோத முறையில் தனது கட்சிக்கு கிடைத்த ஆசனங்களையும், அந்த முறையில் பாராளுமன்றம் வந்த தமிழ்க் கட்சிகளையும், பதவி வெறி மேலோங்கியதால் கட்சி மாறிய முஸ்லிம் காங்கிரசையும் தனது ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டத்திற்கு இன்று ஐ.தே.க வெகு லாவகமாகப் பயன்படுத்துகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையான வாக்காளப் பெருமக்களின் தீர்வுக்கெதிரான தனது சூழ்ச்சி நடவடிக்கைகளை ஐ.தே.க 'ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான இயக்கம்' என பெயர் சூட்டியுள்ளது.

இந்த சூழ்ச்சி நடவடிக்கைகளில் த.வி. கூட்டணி, ரெலோ, தமிழ்காங்கிரஸ் கட்சிகளும் ரவூப் ஹக்கீம், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றோரும் இணைந்து நிற்கின்றனர்.

இவ்வளவிற்கும் இந்தக் கூட்டின் தலைமைக் கட்சியான ஐ.தே.கவோ அல்லது கூட்டோ இனப்பிரச்சினைத் தீர்வுபற்றி ஒரு திட்டத்தை முன்வைக்கவோ குறைந்தபட்சம் பேசவோ இல்லை. அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் கூட இனப்பிரச்சினை விடயம் பேசப்படக்கூடாது என ஐ.தே.க நிபந்தனை விதித்துள்ளது.

முதலில் பொ.ஜ.மு அரசைக் கவிழ்த்து ஐ.தே.கவை ஆட்சி பீடமேற்றி ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என வீ. ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்த்தி, ஜோசப் பரராஜசிங்கம், என்.சிறிகாந்தா போன்ற கூட்டணி, காங்கிரஸ், ரெலோ தலைவர்கள் விளக்கம் அளித்து வருகின்றனர்.

அப்படியானால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் ஜனநாயகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையா?

உண்மையில் 1977ல் ஐ.தே.க ஆட்சிக்கு வந்த பின்னரே இந்த நாட்டில் ஜனநாயகம் முற்றுமுழுதாகக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது.

1977, 1981, 1983 என பல இனவன்செயல்களை தமிழ் மக்களுக்கு எதிராக ஐ.தே.க அரசு நடாத்தியது.

யாழ் மாவட்ட சபைத் தேர்தலில் மோசடி செய்து யாழ் நகரைத் தீயிட்டுக் கொளுத்தியது.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததுடன், தமிழ் எம்.பிக்களைப் பாராளுமன்றத்தை விட்டு வெளியேற்றியது.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், பாஸ் முறைகள், வீதித்தடைகள், பொருளாதாரத் தடை, தணிக்கை முறை போன்ற சட்டங்களை கொண்டுவந்ததும் ஐ.தே.க தான்.

இதன் காரணமாகவே ஏராளமான தமிழ்மக்கள் கைதுசெய்து விசாரணையின்றி தடுத்துவைக்கப்படவும் சித்திரவதை செய்யப்படவும் தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகவும் வழிபிறந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக யுத்தத்தை முழுஅளவில் ஆரம்பித்து அயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்ததுடன் கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்களையும் அழித்தது.

இவ்வளவு நடந்த பின்னரும் ஐ.தே.க தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் என தமிழ் கட்சிகள் நியாயம் சொல்வது கேலிக்கூத்தாக இருப்பதுடன், இனப்பிரச்சினையைப் பற்றிப் பேசாமல் அதைத் தீர்க்காமல் ஜனநாய கத்தைப் பாதுகாக்க முடியும் என வாதிடுவது அயோக்கியத்தனமாகவும் இருக்கின்றது.



**"நான் என்ன சொல்ல வாறன் என்டா? இதற்கு என்ன அர்த்தம்"**

இனப்பிரச்சினையும் அதனால் எழுந்த யுத்தமுமே இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மைக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் ஜனநாயக விரோதச் சூழலுக்கும் காரணம் என்பது ஒரு சிறுபிள்ளைக்குக் கூடத் தெரியும். இந்த மிக எளிய உண்மை தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், ரெலோ தலைவர்களுக்கு விளங்கவில்லை என்பது சுத்த மோசடித்தனம் மட்டுமின்றி தமிழினத்திற்கு எதிரான கிரிமினல் குற்றமுமாகும்.

தமிழ் மக்களிடம் அழுது குழறி, கெஞ்சிக் கூத்தாடி வாக்குகள் பெற்றுப் பாராளுமன்றம் வந்த இவர்கள் தொடர்ந்து அம்மக்களுக்கெதிராகவே செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு சங்கிலியன் படை எச்சரிக்கை விடுத்ததும் தமது பாராளுமன்றப் பதவிகளைத் தூக்கி எறியத் தயார் என்று கூறும் இவர்கள் மறைமுகமாகத் தெரிவிப்பதென்ன? பாராளுமன்றம் செல்வது தமிழ் மக்களுக்குச் சேவையாற்றத்தான் என்று சொல்வது பொய் என்பதைத் தானே?

உண்மையில் பாராளுமன்றம் மூலம்தான் சேவையாற்ற முடியும் என்றால் சங்கிலியன் படையின் எச்சரிக்கையைப் புறந்தள்ளிவிட்டுச் செயல்படலாம் தானே?

அல்லாமல் அவர்களது சொல்லுக்கு கீழ் படிவது என்றால்...

அந்த அமைப்பின் சொற்படிதான் தேர்தலில் நின்றதாக பகிரங்கமாகச் சொல்லிவிட வேண்டும். சொல்வார்களா?

அந்த நாணயமாவது இவர்களுக்கு இருக்கிறதா?

உண்மை அதுவல்ல. இந்தக் கட்சிகளின் தலைவர்களும் எம்.பிக்களும் சுத்த மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்பதே உண்மை. தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் சர்வதேச சமூகத்தையும். ஏமாற்றி பாராளுமன்ற சொகுசை அனுபவிப்பதும் சந்தர்ப்பம் கிடைத்தால் பதவிகள், பட்டங்கள் பெறுவதும் அவற்றை மூடி மறைக்க தமிழின விடுதலை பற்றிப் பேசுவதுமே இவர்களது தொழிலாகப் போய்விட்டது.

**பெரும்பாலும் கிரிமினல் அப்புக்காத்துகளாக உள்ள இவர்கள் தமிழினத்தின் வாழ்க்கையுடனும் கிரிமினல் விளையாட்டு விளையாடுகின்றனர். திரும்பத்திரும்ப அதையே செய்கின்றனர். இவர்களை 'தமிழ் அரசியல் ஐ.ஆர்.சி.கள்' என்று அழைப்பதே பொருத்தமாகும்.**

**ஏனெனில் ஐ.ஆர்.சி. (I.R.C என்ற சொல் Island Registered Criminal) அதாவது 'தீவு தழுவிய அடையாளம் காணப்பட்ட பதிவுசெய்யப்பட்ட குற்றவாளி' என்ற பொருள் படும்) என்று அழைக்கப்படுபவர்கள் ஒரு கிரிமினல் குற்றத்தை ஒன்றுக்கு மேற்பட்ட தரம் செய்பவர்களே.**

**எமது தமிழ் கட்சித் தலைவர்கள் சிலரும் அவ்வாறான அரசியல் குற்றங்களைத் திரும்பத் திரும்பச் செய்யும் அரசியல் குற்றவாளிகளே.** ●



இனப்பிரச்சினையும் அதனால் எழுந்த யுத்தமுமே இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மைக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் ஜனநாயக விரோதச் சூழலுக்கும் காரணம் என்பது ஒரு சிறுபிள்ளைக்குக் கூடத் தெரியும். இந்த மிக எளிய உண்மை த.வி.கூ., காங்கிரஸ், ரெலோ தலைவர்களுக்கு விளங்கவில்லை என்பது சுத்த மோசடித்தனம் மட்டுமின்றி தமிழினத்திற்கு எதிரான கிரிமினல் குற்றமுமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொ.ஐ. முன்னணியும் ஐ. தே. கட்சியும் இணைந்து அரசமைத்தால்



**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா:**

அரசாங்கத்துடன் ஐக்கியதேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தியது ஒரு நாடகமே. ஏற்றுக்கொள்ளமுடியாத கோரிக்கைகளை முன்வைத்து தம்மில் தவறு எதுவுமில்லாதவாறு ஐ.தே.க தப்பித்துக் கொண்டது. ஆனால் இந்த நாடகம் பற்றி மக்களுக்கு நன்கு புரிந்திருக்கும்.

இன்று அரசுடன் நடத்திய கபட நாடகத்தினையே ஐ.தே.க நாளை தமிழ் கட்சிகளுடன் நடத்தும். இதை உணராது இத் தமிழ் கட்சிகள் இன்று கூப்பாடு போட்டு வருவது வேடிக்கை தருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காகவே தாம் ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாகக் கூறும் தமிழ்க் கட்சிகளால் ஏன் இந்த அரசு எடுத்த இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க முடியவில்லை. இன்று அரசுக்குக் காட்டிய இதே எதிர்ப்பைத் தான் நாளை ஐ.தே.கவுக்கும் காட்டுவர். அது ஒத்துவரவில்லை, இது ஒத்துவரவில்லை என்று காரணமும் கூறுவர்.

இன்றுகூட ஒன்றும் காலம்தாழ்ந்துவிடவில்லை. நல்லதொரு முடிவை எடுத்து இவர்கள் கூப்பாடுபோடும் இந்த இனப்பிரச்சினைக்கு இந்த அரசு மூலமே நல்ல தீர்வுகாணலாம். எனவே இவர்கள் மற்றவர்களைக் குறைகூறுவதை விடுத்து தாம் நல்லதொரு பாதையைக் கண்டுபிடித்து அதில் பயணம்செய்யப் பார்க்க வேண்டும்.

**த. சித்தார்த்தன் (தலைவர் - புளொட்):**

ஐ.தே.க - பொ.ஐ.மு. இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைத்தால் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் எனும் நிலைப்பாட்டிலிருந்து நழுவ முடியாது. நாட்டில் பிரச்சினை இல்லாமலிருந்தால்தான் எந்த அரசு வந்தாலும் சிறந்த ஆட்சியை நடத்த முடியும். தேசியஅரசு வந்துவிட்டால் மட்டும் யுத்தம் நின்றுவிடுமா? புலிகள் ஒதுங்கி விடுவார்களா? இல்லை. எனவே பேச்சுவார்த்தை மூலம் இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

ஒருவேளை தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் அது பேரினவாத அரசாங்கமாகவே இருக்கும். எனவே முதலாவதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இன்று தெற்கில் நடப்பது அதிகாரப் போட்டியாகவே உள்ளது. ஆட்சிபீடமேறுவதற்காக ஐ.தே.கவும் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக சந்திரிகா அரசும் கடும் போட்டி போடுகின்றன. இதன் முடிவை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



இந்த அதிகாரப் போட்டியில் யாருடைய வெற்றி தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதிலேயே தமிழ்க் கட்சிகள் கவ னம் செலுத்த வேண்டும்.



**செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ எம்.பி):** அமைச்சர் பதவி கிடைக்குமென நினைத்தோ அல்லது வேறு வழிகளில் சுகபோகங்களை அனுபவிக்கலாம் என்றோ நாம் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கவில்லை. இன்றைய சூழலில் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் மாற்றம் தேவை என்பதனாலேயே நாம் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கினோம்.

இன்று ஐ.தே.க, அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அதில் வெற்றி காணவில்லை. வெற்றி கண்டு தேசிய அரசாங்கம் அமைத்தால் கூட எமக்கு அதனால் பாதிப்பு இல்லை. எமது இன்றைய முதன்மைத் தேவை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே. இதை மறந்து செயற்பட்டால் நாடு மேலும் பேரழிவையே எதிர்கொள்ளும். அதனால் எந்த அரசு ஆட்சிசெய்தாலும் பரவாயில்லை. எமக்குத் தேவை இனப்பிரச்சினைக்குத் தீர்வு. தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவேண்டும். இதுவே எமது கோரிக்கை. இந்த அரசு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக பதவிக்கு வந்து அதனை நிறைவேற்றத் தவறிவிட்டது. இன்றுகூட இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழி காணப்பட்டால் எமது ஆதரவு நிச்சயம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஏழு வருடங்களாக நாம் இந்தத் தீர்வினை எதிர்பார்த்து களைத்துப் போனதாலேயே ஒரு அரசியல் மாற்றத்தை காண விரும்பினோம். ஐ.தே.கவிடம் எமது ஒரே ஒரு கோரிக்கையாகவும் இனப்பிரச்சினைத் தீர்வே முன்வைக்கப்பட்டது.

இதனை மறந்து ஐ.தே.க செயற்பட்டால் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே கருத வேண்டும்.

**அ.விநாயகமூர்த்தி (தலைவர் அ. இ. தமிழ் காங்கிரஸ்):**

இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வுகாண வேண்டும், பயங்கரவாத, அவசரகால சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை எம்மால் முன்வைக்கப்பட்டு அதற்கு உறுதிமொழி வழங்கப்பட்ட ஒரு நிலையில்தான் ஐ.தே.கவுடன் நாம் கூட்டுச்சேர்ந்தோம்.

ஐ.தே.க இன்று எம்மை ஒன்றும் நடுக்கடலில் விட்டுவிடவில்லை. அரசுடன் அவர்கள் கூட்டுச் சேர்வதற்காகப் பேசவில்லை. பொருளாதார ரீதியாக நாடு எதிர்கொண்டுள்ள சில சிக்கல்களை களைவது தொடர்பாகவே பேச்சுவார்த்தை. ஆனால் நடந்தது என்ன? தேசிய அரசு, கூட்டு அரசு என்பதெல்லாம் வெறும் கதைகளே.

எமது காங்கிரஸைப் பொறுத்தவரை நாம் ஐ.தே.கவுடன் எவ்வித உடன்படிக்கையும் செய்து கூட்டுச்சேரவில்லை. எம்மை ஐ.தே.க கட்டுப்படுத்தவும் முடியாது. நாம் தனித்தே இயங்கி வருகிறோம். இனப்பிரச்சினைத் தீர்வில் இன்றைய அரசு அசிரத்தை காட்டி வருவதாலேயே ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த நாம் ஐ.தே.கவுக்கு துணைபோகிறோம். அத்துடன் ஐ.தே.க, தந்த உறுதிமொழிகளைக் காப்பாற்றுமென நாம் நம்புகிறோம்.



ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்தவரை தேசிய அரசாங்கமொன்றை அமைக்க அரசிற்கு ஒருபோதும் ஆதரவு வழங்க மாட்டார்கள். ஐ.தே.க தலைவர்களுடன் மிக நெருக்கமாக உறவுகொண்டிருப்பதன் காரணமாக இதனை என்னால் உறுதிபடக் கூறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் கட்சிகளின் நிலைப்பாடு...?

**அ. வரதராஜப்பெருமாள் (முன்னாள் வ.கி. மாகாண முதல்வர்):**

ஐக்கிய தேசியக்கட்சியுடன் கைகோர்த்து நின்று அரசாங்கத்தை வீழ்த்துவதாக கங்கணம் கட்டிக்கொண்டு நின்ற தமிழ்க்கட்சிகள் இன்று அதே ஐ.தே.கவினால் அம்போ என கைவிடப்பட்டுள்ளன. ஐ.தே.கட்சி இவ்வளவு குறுகிய காலத்திலேயே தனது சுயரூபத்தைக் காட்டி விட்டது.

வெறுமனே தத்தமது தேவைகளை நிறைவேற்றத்தான் இத்தமிழ்க் கட்சித்தலைவர்கள் ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்ததாகவே நான் கருதுவேன். ஏனெனில் தமிழினத்திற்காக, தமிழ் சமுதாய விடிவுக்காக என்றெல்லாம் கூப்பாடு போடும் இவர்கள் எவ்வித கோரிக்கைகளையும் முன்வைக்காது ஐ.தே.கவுடன் கூட்டு வைத்தமை மாபெரும் தவறு.

இத்தமிழ்க்கட்சிகளின் நடவடிக்கையால் ஜனாதிபதி சந்திரிகா அரசின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் தடைப்பட்டன. தமிழ் மக்களின் இருளான காலம் களைய ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் மக்களது ஆதரவில்லாத இக்கட்சிகளின் தலைவர்கள் எடுத்த முடிவினால் நீண்டு செல்லப் போகிறது. இதற்கு இந்த தமிழ்க் கட்சிப் பிரமுகர்களே முழுக்காரணம்.



ஜே.வி.பி ஒவ்வொரு விடயத்திலும் ஐ.தே.கவுடன் பேசும்போது கோரிக்கைகளை முன்வைக்கும், ஐ.தே.கவும் அதற்கு செவி மடுக்கும். அவ்வாறு ஏன் இந்த தமிழ்க் கட்சிகளுக்குச் செய்ய முடியவில்லை.

இன்று ஐ.தே.க தனது சுயரூபத்தைக் காட்டியவுடன் இவர்கள் திணறிப்போய் செய்வதறியாது நிற்கின்றனர். பொருத்தமில்லாத காரணங்களைக் கூறி மக்களை ஏமாற்றவும் பார்க்கின்றனர். ஆனால் மக்கள் எல்லாவற்றையும் நன்கு அறிவர்.



**அமைச்சர் பேரியல் அஷ்ரப் :**

ஐ.தே.கட்சி, அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வந்தமை வரவேற்கத்தக்க ஒருவிடயம். ஆனால் நடந்தது என்ன? வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு இரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் நல்லதொரு தீர்வினைக் காணலாம் என மக்களிடையே இருந்த நம்பிக்கை ஐ.தே.க - பொ.ஐ.மு பேச்சுவார்த்தை முறிந்ததனால் வீண்போயுள்ளது.

கடந்தகால அரசியல் வரலாற்றைப் பார்க்கையில் இன்றைய அரசாங்கம் முஸ்லிம் சமுதாயத்திற்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது. அதேபோன்று முஸ்லிம் மக்களும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், அவர் கட்சிக்கும் ஆதரவினை வழங்கி வருகின்றனர். இந்நிலையில் அரசியலில் போதிய அனுபவமின்மையினால் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பிச் சென்றவர்கள் அக்கட்சியுடன் எவ்விதமான உடன்பாடுகளையும் செய்யாமல் வெறுமனே அவர்களுடன் உலாவித் திரிந்ததனால் தமது எதிர்காலத்தை இழக்கவுள்ளனர். எப்போதும் நாம், தலைவர் அஷ்ரப் அவர்களின் அரசியல் சாணக்கிய அனுபவத்தைப் பின்பற்றி நடந்து வெற்றி காண்போம். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் தனித்துவத்துடன் இயங்கும் அதேவேளை பெரும்பான்மைக்கட்சியுடன் இணைந்திருந்து செயற்படுவதே அதிக பலனைத் தரும் என நான் கருதுகிறேன். இன்றைய காலகட்டத்தில் அரசாங்கக் கட்சியே அதற்குச் சரியான தெரிவாக நான் எண்ணுகிறேன்.

**பெ. சந்திரசேகரன் எம்.பி (தலைவர் ம. ம. முன்னணி):**

ஐக்கிய தேசியக் கட்சி மூலமாக நாட்டில் ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம். பொ.ஐ.மு. அரசில் 4 வருடங்களுக்கு மேலாக நான் பிரதி அமைச்சராகப் பதவி வகித்தேன். என்னால் அப்பதவியைக் கொண்டு நான் சார்ந்த மலையக மக்களுக்கு முழுமையான சேவையை ஆற்றமுடியவில்லை. இதனால் அப்பதவியை நான் துறந்தேன்.

இன்று ஒரு ஆட்சிமாற்றம் தேவை. வடக்கு, கிழக்கு பிரச்சினை, மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடி நிலைமை... என்று தீர்வுகாண வேண்டிய விடயங்கள் பல உண்டு. தீர்வுகாண இந்த அரசு தவறிவிட்டது.

ஐக்கியதேசியக்கட்சி மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சில யோசனைகளை முன்வைத்தது. அவை எமக்குச் சரியானவை எனத் தென்பட்டது. அதனால் அக்கட்சியுடன் நாம் கூட்டு வைத்தோம்.



இன்று ஐக்கிய தேசிய கட்சியானது, அரசுடன் இணைந்து செயற்பட முன்வந்தாலும் நாம் வரவேற்கிறோம். கட்சிகள் இணைந்தால் எமக்கென்ன, எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டால் நாம் வரவேற்போம். குறிப்பாக இரு பிரதான கட்சிகளும் இணைந்து வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகண்டு விட்டால் நாட்டில் நிலவும் ஏனைய பிரச்சினைகள் இல்லாது போய்விடும்.



**இரா. சம்பந்தன் (செய. நாயகம், TULF):**

ஐ.தே.கவுக்கு நாம் எவ்வகையிலும் ஆதரவு வழங்குவதாக வாக்குறுதி எதனையும் அளிக்கவில்லை. அதேபோல் அவர்களும் எமக்கு எவ்விதமான வாக்குறுதிகளையும் வழங்கவில்லை. எமது உறுப்பினர்கள் ஐ.தே.கவின் சில கூட்டங்கள், ஊர்வலங்களில் கலந்துகொள்வதை வைத்து நீங்கள் தப்பாக எண்ணக்கூடாது.

இன்று நாட்டில் ஒரு அரசியல் மாற்றம் தேவை. இதற்காக நாம் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்க முன்வந்தோம். ஆனால் ஐ.தே.கவுடன் எவ்விதமான கூட்டும் வைத்துக்கொள்ளவில்லை. எமது கட்சி அப்படியான எந்த முடிவையும் எடுக்கவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வில் இழுத்தடிப்பு நிலை காணப்பட்டதால் தமிழ்மக்களின் துன்பமான வாழ்க்கை நிலை தொடர்வதைக் கருத்திற்கொண்டு ஆட்சி மாற்றம் மூலமாக இதற்குத் தீர்வுகாண முற்பட்டோம். அதனால் அடுத்து ஆட்சி அமைக்கத் தகுதியுள்ள பெரிய கட்சியான ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கினோம்.

ஐ.தே.கவுடன் கூட்டுச்சேர்வதால் எமது தலைவர்களுக்கு அமைச்சர் பதவி பிறசலுகைகள் கிடைக்குமென நாம் ஒருபோதும் எண்ணியது கிடையாது. எமது கட்சி தனித்துவமானது. எமது தலைமைப்பீடம் கூட்டாக எடுக்கும் முடிவுகளின்படியே அது செயல்படும். சுயநலத்திற்காக ஈடுபடுபவர்கள் எம்மில் எவரும் இல்லை. ஆட்சி மாற்றம் தேவை. அதன்மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என தீர்மானம் எடுத்தபோது ஐ.தே.கவின் செயற்பாடுகளும் அதற்குச் சாதகமாக இருந்ததனால் நாம் ஐ.தே.கவை ஆதரிக்க நேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமத்தைப் பார்த்துச் சிரிக்கிறதா நகரம்?



சிங்கள, தமிழ் ரசிகர்களின் ஏகோபித்த விசனத்துக்கு உள்ளாகியிருக்கும் சர்ச்சைக்குரிய திரைப்படம் This is my moon.

அசோக்க ஹந்தகமவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்டிருக்கும் இத் திரைப்படமானது, இன்றைய யுத்த சூழலின் பிரதிபலிப்பை - பின்விளைவுகளைப் படம் பிடிக்க முயற்சித்திருக்கிறது.

பொதுவாகவே இலக்கியத்திலும் சினிமாவிலும் தமிழ் சிங்கள இன உறவை வலியுறுத்த, இளைஞன் - யுவதி காதல், அதன் மூலமான உறவு - இன உறவாக பரிணமிப்பதாகவே காட்டப்பட்டுவந்திருக்கிறது. ஆனால் 'சரோஜா'வில் அது இரு சிறுமிகளுக்கூடாக மனிதத்துவத்தை வலியுறுத்தியது. இவ்வாறான ஒரு சில படைப்புக்கள் வெளிவருவதும் உண்மை. அண்மையில் பலத்த சலசலப்பை உண்டுபண்ணிய 'அமாவாசை இருட்டு' (புறஹந்த களுவர) இது இன உறவை வலியுத்தாவிட்டாலும், இந்த யுத்தத்தால் ஏற்படும் அவலத்தைச் சொல்லுகிறது.

'இது என் நிலா'வில் (மே மகே சந்தய்) யுத்தப் பிரதேசத்தில் பதுங்குழிக்குள்ளிருந்து சண்டை பிடித்துக்கொண்டிருக்கும் இராணுவ சிப்பாய் ஒருவனிடம், வழி தவறியோ அல்லது போக்கிடம் இன்றி தமிழ் யுவதி ஒருத்தி போய்ச்சேருகிறாள். அவளைக் கண்டதும் துப்பாக்கியால் சுட எத்தனிக்கிறபோது அவள் தனது கழுத்திலிருக்கும் சங்கிலியைக் கழட்டிக் கொடுக்க முயற்சிக்கிறாள். அவன் மீண்டும் சுட முயற்சிக்க கட்டியிருக்கும் பாவாடையைத் தூக்குகிறாள். தன் முகத்தையும் மூடிக் கொள்கிறாள்.

பிறகு அவன் புணருகிறான். காலையில் சண்டை ஓய்ந்தபின் அவன் பதுங்குழியிலிருந்து வெளியேறி துவக்கையும் போட்டுவிட்டு நடையைக் கட்டுகிறான். அவளும் அவனைப் பின் தொடருகிறாள். இவ்வாறே படம் தொடங்குகிறது.

இராணுவச் சிப்பாய் தனது கிராமத்தை அடைகிறான். அங்கு அவனை எதிர்பார்த்திருக்கும் உறவுப் பெண். அவள் அவனை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. மற்றும் வயதான தாய், தந்தை, தங்கை, அண்ணன். கிராமத்து பிக்கு, கடைச்சிப் பந்தி, இரு பாடசாலை மாணவர்கள் இவ்வாறு பாத்திரங்கள் உருவகிக்கப்பட்டு திரைக்கதை நகர்கிறது.

உலகமயமாக்கல் கிராமத்தையும் ஊடுருவிவிட்டதை, அண்ணன் 'குதிரைப்பந்தய நிலையம்' (Sporting Centre) நடாத்துவதன் மூலமும், அக்கிராமத்துக் கடையில் 'சுவிங்கம்', 'சிகரெட்' விற்பனை செய்வதையும் காட்சிப்படுத்தலின் மூலம் உணர்த்த முற்படுகிறது படம்.

'மனிதனுடைய இயங்குதளத்தை தீர்மானிப்பதில் அடிப்படையாக அமைவது பாலுறவு' என்கிறார் சிக்மன் ஃப்றயிட். அதன் அடிப்படையிலேயோ என்னவோ பாலியல் தொடர்பான காட்சிகள் தாராளம். ஆனால் அதிகாரத்தின் ஆரம்பப்புள்ளிதான் பாலியல் உறவு. ராதாகிருஷ்ணன் என்கிற பிரபல எழுத்தாளர் சொல்வது போல் அது ஒன்றும் மெய்சிலிர்க்க வைக்கும் சமாச்சாரம் இல்லை என்கிறார் அசோக்க ஹந்தகம.

சமூகம் பாலியல் இச்சையை தீர்த்துக் கொள்ள திணறி நோய்வாய்ப்பட்டுள்ளது என்பதை பலர் மறுக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் வாழ்வின் வெறுமையின் எல்லைகளை அடைகின்றபோது அவ்வாறுதான் நடந்துகொள்கிறான் என்கிறார் மேலும்.

திரைப்படம் காட்சி (Visual) அமைப்புக்களால் கதையை நகர்த்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான படங்கள் தமிழுக்கு அருமை. ஆனாலும் சிங்களத்தில் அவ்வப்போது எடுக்கப்பட்டுவருகிறது.

ஒரு படத்தின் திரைக்கதையைச் சொல்வது மிகவும் கடினமாக இருந்தால், அவ்வாறான படமே மிகச் சிறந்த திரைப்படம் எனச் சொல்லப்படுவதுண்டு. அந்தவகையில் இந்தப் படம் சிறப்புப் பெறுகிறது. தொழில் நுட்ப ரீதியாகவும் வேறு சில பிரத்தியேக காட்சி அமைப்புக்கள் ஊடாகவும் கதையை நகர்த்த முடியும் என்பதை பரீட்சித்துப்பார்க்க துணிந்திருக்கிறார் ஹந்தகம.

மேலும் திடீர் திடீரென மாறும் காட்சி அமைப்புக்கள் மூலம் கதையம்சத்தின் புதிய பரிமாணத்தைக் கொணர்வதற்கு முயற்சித்திருக்கிறார்.

இவ்வாறான நுட்பங்களை இலகுவில் பார்வையாளர்கள் புரிந்துகொள்வதற்காகத்தான் இத் திரைப்படம் ஆரம்பிப்பதற்கு முதலில், படத்தை எப்படிப் பார்க்க வேண்டும் என்பது குறித்து விளக்கும் செய்திப்படம் ஒன்றை சிங்களமொழி மூலம் தயாரித்து அதைப் பார்வைக்குத் தந்திருக்கிறார்.

இது அசையும் பல படங்களைக் கொண்ட கோவை ஒன்றிலிருந்து எவ்வாறான பொருள் கோடலை மனம் கொள்ளலாம் என்பதை விளக்குவதாக அமைந்திருந்தது. மறுபக்கத்தில், இது பலரையும் ஒரு சட்டத்துக்குள்ளால் பாருங்கள் என்று நிர்ப்பந்திக்கப்பட்டதாகவே இருந்தது.

தொழில் நுட்பத்தில் மட்டுமல்ல, கதை சொல்வதிலும் ஒரு வேகம், உத்தி நிறைந்திருக்கிறது.

பிக்குவின் பாத்திரப்படைப்பு தொடர்பாக அதிருப்தியே பார்வையாளர்கள் மத்தியில் நிலவியது தெரிந்தது. அவருடைய பேச்சு தமிழ்ப் பெண்ணின் கண்ணையும் அவளுடைய பார்வையின் தீட்சண்யத்தை வியந்து புலம்புவதாகவும் அமைந்திருந்து.

அதுமட்டுமல்ல படத்தின் இறுதிக் கட்டத்தில், இரவு வேளை தமிழ்ப் பெண் அக்கிராமத்து மாணவனால் போதையில் பலவந்தப்படுத்தப்படுகிறாள். அதன்பின்னர் அவள் பன்சலையில் தஞ்சம் அடைகிறாள். கடவுளை வேண்டிப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும்போது பிக்கு 'இங்கு நீ வந்ததை யாரும் காணவில்லையா?' என்கிறார். விடிந்ததும் பிக்குவைக் காணவில்லை அவருடை காவியுடை அநாதரவாகக் காணப்படுகிறது.

இதன் மூலம் கிராமம், பாலியல் வெறியுள்ளவர்களைக் கொண்டது என்றும் (ஏனெனில் ஏற்கன்வே சிப்பாயின் அண்ணனாலும் அப்பெண் பலாத்காரப்படுத்தப்படுகிறாள்), ... நாகரிகம் என்ற போர்வையில் இவர்களுடைய உறவுகள் கொச்சையானவையே என்றும் சொல்கிறதா படம்?

இளைய சமூகத்தைப் பொறுத்தவரையில் இவ்வாறான இழிவானநிலை எமது சமூகத்தில் இருக்கிறது என்பதை அங்கீகரிக்கிறார்கள். ஆனால் இதற்கு மாறுபாடான கருத்துக்களும் மேலெழுகிறது. இது ஒரு வகையில் கிராமத்தை பின்தங்கியதான, காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து விடுபடவில்லை என்பதான மிகைப்படுத்தலையும், அவர்களிடையே உள்ள பாலியல் ரீதியான வக்கிரத்தையுமே காட்டுவதாகவே அமைந்திருக்கிறது என்பதே அக்கருத்து.

இது மறுபக்கத்தில், நகரம் நாகரிகமானது என்றும், முன்னேற்றமான சமூகமாகவும், பாலியல் இச்சையைப் பொறுத்தவரை தெளிவுடன் நடப்பவர்கள் என்பதாகவும், சுருக்கமாக சொன்னால் கிராமத்தைவிட நகரம் எவ்வளவோ மேலானது என்றும் உணர்த்துவதாகக் கொள்ள இடமிருக்கிறது.



கிராமத்து மாணவன் ஒருவன் இராணுவத்துக்குச் சென்று இறந்துவிடுகிறான். அவனது அடக்கத்தில் பங்குகொண்டிருக்கும் பாதிப்புக்குள்ளான தமிழ்ப் பெண், கையில் பெண் குழந்தையுடன் காணப்படுகிறாள். பிடித்துச் செல்லப்பட்ட பிரதான பாத்திரமான இராணுவசிப்பாய் ஊர் திரும்புகிறான். அவன் அச் சிறுகுழந்தையை செல்லம் கொஞ்சும் போது 'This is my moon' நிறைவுறுகிறது.

இது தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் மிகுந்த விசனத்துக்குரியதாகிறது.




ஏனெனில் தொடர்ந்து பலாத்காரமாக்கப்படுகிறாள். அதன் மூலம் உருவாகும் குழந்தை சொந்தம் கொண்டாடப்படுகிறது. தமிழ்ப் பெண் சிங்கள சமூகத்துடன் ஒன்றிவிடுவது. இதன் மூலம் தமிழர்கள் எல்லோரும் சிங்களவர்களாக மாறிவிடுவதுதான் தீர்வா?

இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்க்கமான தீர்வையோ அல்லது இன்று கொழுந்துவிட்டெரியும் இனப்பிரச்சினையின் மூலங்களையோ படம் சொல்லவில்லை. அப்படியிருக்க இது இனப்பிரச்சினை தொடர்பான படம் என்று சொல்வதற்கில்லை. இது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தத்தின் பிரதிபலிப்புக்களையே சுட்டிநிற்கிறது. இன்றைய சூழலின் பின்விளைவுகளைச் சொல்லும் வகையில் அசோக்க ஹந்தகம ஒரு கல்லை எடுத்து வைத்திருக்கிறார்.

**அவன் மீண்டும் சுட முயற்சிக்க, அவள் கட்டியிருக்கும் பாவாடையைத் தூக்குகிறாள். தன் முகத்தையும் மூடிக் கொள்கிறாள். பிறகு அவன் புணருகிறான். காலையில் சண்டை ஓய்ந்தபின் அவன் பதுங்குழியிலிருந்து வெளியேறி துவக்கையும் போட்டுவிட்டு நடையைக் கட்டுகிறான். அவளும் அவனைப் பின் தொடருகிறாள். இவ்வாறே படம் தொடங்குகிறது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசோக்க ஹந்தகம

*1962இல் பிறந்தவர். தென்மாகாணத்தைச் சேர்ந்தவர். கணக்கியலில் முதல் தரப் பட்டதாரியாகவும், லண்டன் வார்விக் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறையிலும் பட்டம்பெற்று தற்போது இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றுகிறார்.*

*இலங்கையில் இனப்பிரச்சினை முளைவிடத் தொடங்கிய காலகட்டத்தில் 'பூமிகா' என்ற நாடகத்தை அரங்கேற்றினார். அது 1985இல் சிறந்த இயக்குநர் விருதைப் பெற்றுக்கொடுத்தது.*

*அரச நாடகவிழாவில் சிறந்த வசனகர்த்தாவிற்கான விருது 1987இல் இவரது 'தண்டர்' நாடகத்திற்கு கிடைத்தது.*

*இலங்கை கொலைக் கலாச்சாரத்தில் இருந்த காலகட்டத்தில் மூன்றாவது நாடகமான 'மஹாத்தா' பல எதிர்ப்பு, விமர்சனங்களை மீறி மூடிய அரங்குகளில் மட்டுமல்ல வயல்வெளி மற்றும் வேலைத்தளங்களிலும் நிகழ்த்திக்காண்பிக்கப்பட்டு, பலராலும் பேசப்பட்டது. 1989இல் சிறந்த தயாரிப்பு, சிறந்த வசனகர்த்தா ஆகிய விருதுகளை பெற்றது.*

*'துங்கிந்த ஆதர' நாடகம் அசோக்கவை மிகவும் பிரபலமாக்கியது. 1994இல் சிறந்த வசனம், தயாரிப்பு உட்பட ஒன்பது விருதுகளை அள்ளியது.*

*'சந்த கின்னரே' என்ற படத்தோடு சினிமாவுக்கு வந்தார். இப்படத்திற்காகவும் பல விருதுகளைப் பெற்றார்.*

*அவரது இரண்டாவது திரைப்படமான 'மூன் ஹன்ட்' 2000ம் ஆண்டில் 6 விருதுகள் பெற்றது.*

*அசோக்க ஹந்தகமவின் மூன்றாவது படம் 'This is my moon'.*

**பார்வையாளன்தான் என்ன செய்தி என்பதை தீர்மானிக்கின்றான். இத்திரைப்படத்தை பார்த்த பின்பு அவர்களுக்குள் நடைபெறும் உரையாடல்கள், இத்திரைப்படத்தை பார்த்து அவர்கள் வெளிப்படுத்தும் முரண்பாடுகள், ஏற்றுக்கொள்ளல்கள், எதிர்ப்புகள் இவை எல்லாவற்றையும் கொண்டதுதான் நான் கூறவந்த செய்தியேயொழிய ஒரு குறிப்பிட்ட செய்தி என்று வேறு எதுவும் கிடையாது.**

**அமுது:** உங்களுடைய Target Audience யார்?

**அசோக்க ஹந்தகம:** சாதாரண மக்கள்தான். இலங்கையில் சினிமா பொழுதுபோக்கு (Entertainment) சாதனமாகவே அறியப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆழமான, கலைத்தரமான மாற்று சினிமாக்களைக் காணமுடிவதில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக மாற்றுச்சினிமா வெளிப்பட்டாலும் கலையம்சம் நலிவான சினிமாக்களே பார்வையாளர்கள் மீது திணிக்கப்படுகிறது.

80களுக்குப் பின்பு பொழுதுபோக்கு அம்சங்களில் மாறுதல் ஏற்பட்டது. தொலைக் காட்சி மற்றும் தனியார் வானொலிகளின் வருகையுடன் பொழுதுபோக்கிற்காக சினிமாவைத்தான் நாடவேண்டிய நிலை என்பது மாறி தொலைக்காட்சி, வானொலி என்பவற்றை பொழுதுபோக்குக்கான சாதனமாக பெரும்பாலான மக்கள் மாற்றிக் கொண்டனர்.

எனது இந்த திரைப்படத்தின் பார்வையாளர்களும் சாதாரண மக்கள்தான். ஆனால் அவர்களை ஒரு வித்தியாசமான முறையில் எனது சினிமாவைப் பார்க்க வைக்க வேண்டும் என்று முயற்சித்தேன். எனவே இத்திரைப்படத்தைத் தயாரிக்க ஆரம்பித்ததிலிருந்து அது திரையிடப்பட்டது வரை ஒரு வித்தியாசமான முறையைக் கையாண்டு பார்வையாளர்களை புதிய முறையில் ஒன்றுதிரட்ட முயன்றேன். சாதாரண திரைப்படத்தைப் பார்க்கிற பார்வையாளர்களே ஒரு புதுவிதமான பார்வையாளர் கூட்டமாக மாறும் என்று எதிர்பார்த்தேன்.

**அமுது:** நீங்கள் சொல்ல வந்த செய்தி என்ன? அதில் வெற்றி பெற்றதாக உணர்கிறீர்களா?

**அ.ஹந்தகம:** ஒரு கூட்டத்தில் அல்லது கருத்தரங்கில், ஒரு கட்டுரையில் ஒரு குறிப்பிட்ட செய்தியை நேரடியாக சொல்லிவிட முடியும். அல்லது ஒரு பத்திரிகைத் தகவலில் ஏதோ ஒரு செய்தி இருக்கும். ஆனால் சினிமா அப்படியல்ல.

சினிமாவின் மூலம் பார்வையாளர்களுக்கு எனது சில எண்ணங்களை வழங்கினேன். அதன் மூலம் பார்வையாளன்தான் என்ன செய்தி என்பதை தீர்மானிக்கின்றான். இத்திரைப்படத்தை பார்த்த பின்பு அவர்களுக்குள் நடைபெறும் உரையாடல்கள், இத்திரைப்படத்தை பார்த்து அவர்கள் வெளிப்படுத்தும் முரண்பாடுகள், ஏற்றுக்கொள்ளல்கள், எதிர்ப்புகள் இவை எல்லாவற்றையும் கொண்டதுதான் நான் கூறவந்த செய்தியேயொழிய ஒரு குறிப்பிட்ட செய்தி என்று வேறு எதுவும் கிடையாது.

ஒரு குறிப்பிட்ட செய்தியை நேரடியாகவே வெளிப்படுத்திய திரைப்படங்கள் பல வெளிவந்துள்ளன. ஆனால் அத்திரைப்படங்கள் சமூகத்தில் என்னவிதமான பாதிப்புக்களை ஏற்படுத்தின என்பது கேள்விக்குறிதான்.



**அமுது:** உங்கள் திரைப்படத்தில் கிராமம் பின்தங்கியுள்ளதாக சொல்லும் அதேவேளை கிராம உறவுகள் அழித்து சீரழிக்கப்படுவதாகவும் நீங்கள் ஆதங்கப்படுவதுபோல் தெரிகிறதே அது பற்றி...?

**அ.ஹந்தகம:** ஆம்... கிராமம் பின்தங்கித்தான் இருக்கிறது. மூலதனம் என்பது நகர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புறங்களை இன்று ஆக்கிரமித்திருக்கிறது. அதன் விளைவாகவே நகரம் முன்னேறிச் செல்கிறது. அதே மூலதனம் கிராமங்களை நோக்கித் தன் ஆக்கிரமிப்புக் கரங்களை பரப்ப வேண்டும் அப்போதுதான் கிராமமும் முன்னேற்றமடையும். இதுபற்றி எல்லாம் கார்ல்மார்க்ஸ் சொல்லியிருக்கிறார்.

இன்றைக்குப் பலர் கிராமங்களைப் பற்றி வாய் நிறைய புகழ்வதும் நகரத்தில் சேரிப் புறத்தில் முடங்கி வாழும் தொழிலாளி கூட கிராமப்புறங்களில் சென்று வாழ் விரும்புவதில்லை. எமக்கு காண்பிக்கப்படுகின்ற பல சினிமாக்களில் கிராமமும் கிராமத்து உறவுகளும் மிக உயர்வானவையாகவும் புனிதமானவையாகவும் காண்பிக்கப்படுகின்றதேயொழிய உண்மை அதுவல்ல.

**அமுது:** இனப்பிரச்சினையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் என்று கூறப்படுகிறது. ஆனால் அப்பிரச்சினை சரியான முறையில் ஆராயப்படவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறதே..?

**அ.ஹந்தகம:** இனப்பிரச்சினையால் ஏற்பட்டுள்ள யுத்தம். அதனுடைய பாதிப்பு, எமது கிராமப்புறங்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையே காட்ட முயற்சித்தேனேயொழிய இனப்பிரச்சினை, அதன் மூலவேர் என்ன? என்பதனை நான் ஆராய முயலவில்லை.

யுத்தம், இராணுவத்தின் தியாகம் என்பன தேசத்துக்காக, நாட்டு மக்களுக்காக என்ற அரசியல் பூச்சுக் கோஷங்களை கேள்விக் குள்ளாக்குகிறேன். வேறு தொழில் இல்லாமையும், வாழ்க்கையைக் கொண்டு நடத்த



வுமே இராணுவத்தில் பலர் சேருகின்றனர் என்பதைக் காட்ட முயற்சித்தேன். அவன் எதிரியிடமிருந்து போராடிக் கைப்பற்றுவதாகச்சொல்லப்படும் அந்த நிலப்பரப்பில் அவனுக்கு எந்தவித ஆர்வமோ அக்கறையோ இல்லை என்பதைக் காட்டுகிறேன். அரசியல் மேடைகளில் தீவிரமாகப் பேசப்படுகிற தேசியம், தேசபக்த ராணுவம் என்கின்ற கதையாடல்களின் பொய்மையைச் சொல்லியிருக்கிறேன்.




**அமுது:** பிக்குவின் பாத்திரத்தின் மூலம் எதை உணர்த்துகிறீர்களா?

**அ.ஹந்தகம:** எமது நாட்டின் மதநிறுவனங்கள் சமூகத்தில் என்ன பங்களிப்பைச் செய்கின்றன? அது ஒரு உயர்ந்த அந்தஸ்தில் வைத்தே பார்க்கப்படுகின்றது. அதனால் சமூகத்திற்குப் பயனுள்ள எந்தப் பாதிப்பையுமே செலுத்த முடியவில்லை. எவ்வாறு ஒருவன் தன் வாழ்க்கை இருப்புக்காக இராணுவத்தில் போய்ச் சேருகிறானோ அதை விட்டு ஓடுகிறானோ அதுபோலத்தான் பிக்குவாகச் சேர்வதும் அதைவிட்டு விலகி ஓடுவதும். எல்லாம் மனிதர்களின் இருப்புச் சம்பந்தமானது.

**அமுது:** இத்திரைப்படத்தில் விரவியிருக்கும் பாலியல் காட்சிகள் மூலம் எதை உணர்த்த முற்படுகிறீர்கள்? கிராமங்களில் உள்ளோருக்கு காம இச்சை அதிகம் என்பதையா?

**அ.ஹந்தகம:** கிராமத்திலும் நகரத்திலும் பாலியல் இச்சையில் வேறுபாடில்லை. அதை சுதந்திரமாக அனுபவிப்பதற்குத் தேவையான வாய்ப்பு என்பதில் கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே வேறுபாடு உண்டு. நகரத்தில் பாலியல் தொடர்பான கல்வி, சினிமா, தொலைக்காட்சிப் படங்களின் மூலமும் நகரங்களில் இருக்கின்ற ஓரளவு சுதந்திரமான நிலைமைகள் மூலமும் இவ்வகையான இச்சைகள் தீர்க்கப்படுகின்றன.
ஆனால் கிராமங்களில் அவை அமுக்கப்படுகிறது. அதனால் ஏற்படும் ஆக்ரோஷ வெளிப்பாட்டையே நான் இத்திரைப்படத்தில் காட்டுகிறேன்.

**அமுது:** இத்திரைப்படத்தில் வரும் தமிழ்ப் பெண்ணைச் சிங்களப் பெண்ணாக்கி, சிங்கள சமூகத்தை தமிழ் சமூகமாக்கி கதை அமைத்திருந்தால்...?

**அ.ஹந்தகம:** எந்தப் பிரச்சினையும் இல்லை. அப்படியும் பார்க்கப்பட வேண்டும். இக்கதையை இலங்கையில் இரண்டு சமூகங்களுக்கு இடையே பொருத்தியும் பார்க்கலாம். அல்லது சர்வதேச ரீதியாக உலகத்தில் எங்கேயோ ஒரு மூலையில் இரண்டு சமூகங்களுக்கு இடையே நடப்பதாகவும் சிந்திக்கலாம். பிரச்சினையே இல்லை.

**அமுது:** திரைப்படம் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு செய்திப்படம் காட்டப்பட்டதே. அதாவது இந்தப் படம் எப்படிப் பார்க்கப்பட வேண்டும் என்று விளக்கும் வகையில்... இது இந்தப் படத்தை இப்படித்தான் பாருங்கள் என பார்வையாளர்களைக் கட்டாயப்படுத்தியதாக அமையாதா?

**அ.ஹந்தகம:** ஒரு திரைப்படத்தை எவ்வாறு பார்ப்பது என்பது பற்றி எமது நாட்டில் ஒரு பழக்கம் உண்டு. அதில் இருந்து வித்தியாசமாக இத்திரைப்படத்தை பார்க்க வைக்க வேண்டும் என்று கருதினேன். அதனால் தான் அந்த முயற்சி. படத்தில் வரும் காட்சிகளை ஒன்றோடொன்று பொருத்தி ஒரு மொத்தப் பார்வையை பார்வையாளர்கள் பெற வேண்டும் என விரும்பினேன். சில வேளைகளில் படம் தொடங்கி சில காட்சிகளைப் பார்த்துவிட்டு புரியவில்லை என்ற கோதாவில் பார்வையாளர்கள் எழுந்துபோய் விடக்கூடும். பயிற்சி இல்லாத பார்வையாளருக்கு இவ்வாறான ஒரு பயிற்சி தேவைப் படுவதாக நான் கருதுகிறேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



– குமார்மூர்த்தி

# இறுதி மரியாதை

நிலைக் கண்ணாடியில் மீண்டும் ஒருமுறை பார்த்தாள் சுமதி. முகம் லேசாக உப்பி, கண்களுக்குக் கீழாக கருவளையமிட்டு கறுத்திருந்தது. முகத்தைப் பார்க்க சகிக்க முடியாமல், வெடுக்கென்று திரும்பிவிட்டாள்.

என்னவென்று விளக்க முடியாத ஒரு சோகமும் படபடப்பும் முகிலின் நிழல் போல் கடந்து போனதை அவளால் உணர முடிந்தது. இரவு நெடுநேரம் வரையில் கண் முழித்திருந்தது காரணமாயிருக்கலாம் என மனதுக்குள் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இரவு முழுவதும் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்த வேட்டுச்சத்தங்கள் ஓய்ந்து காலைச் சூரியனின் கணகணப்புடன், வெறும் காக்கை குருவிகளின் கீச்சிடல் மட்டும் கேட்டது.

இந்த அமைதி ஒரு வித்தியாசமான பிரக்ஞையை மனதில் ஏற்படுத்தியதும், பழக்கப்பட்டுப் போன வாழ்க்கையில் இருந்து விலகி வந்துவிட்டது மாதிரி ஒரு உணர்வு வந்து உடல் சிலிர்த்துக்கொண்டது.

'சே! என்ன விபரீதம் இது. இடையில் வந்த இந்தச் சம்பவம் உணர்வோடும் உடலோடும் ஒட்டிக்கொண்டு விட்டதா? மனிதன் ஒரு இசைவாக்கப் பிராணி என்பது எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கிறது. 'திணிக்கப்படும் சம்பவங்களே பின் நியதியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன' என்பதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும். சூழல் மனிதனுக்காகவா அல்லது மனிதன் சூழலுக்காகவா?..'

உற்சாகமான காலைப்பொழுதே களைப்பாக இருந்தது அவளுக்கு.

நேற்றிரவு வந்த நினைவு திடீரென மறுபடியும் வந்து மையமிட்டது. எதன்அடிப்படையில் அந்தக் கருத்து தோன்றியிருக்கக் கூடும் என்பதைப் பல முறை யோசித்துப் பார்த்தும் பதில் குழப்பமாகவே இருந்தது.

ஆனால் காரண காரியமில்லாமல் அந்த நினைவு உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில் பதிந்து கிடந்ததை மட்டும் அவளால் தட்டிக் கழித்துவிட முடியவில்லை.

ஒருவேளை வீதியில் கிடந்த அந்த உடலைக் கண்ட நாளில் இருந்து வந்ததாக இருக்கலாம்.

இல்லை அதை வீசிவிட்டுப் போன மனிதர்களைப் பார்த்ததில் இருந்து இருக்கலாம்.

அல்லது எந்த உணர்ச்சி பாவமும் இல்லாமல் அந்த உடலைக் கடந்துபோன மனிதர்களைப் பார்த்ததில் இருந்து இருக்கலாம்.

இல்லை, அதை வீசிவிட்டுப் போன மனிதர்களின் உணர்வுகளைப் பற்றியதாக இருக்கலாம்.

எது எப்படியோ மரணம் என்பது நிச்சயமானது. உண்மையானது, இறுதியானது. முடிவானதும் அதுதான். பஞ்சுப் பெட்டியில் வைத்துப் பூட்டினால் என்ன, புழுதியில் வீசியெறிந்தால் என்ன? இதயத்துடிப்பு நிற்பதுதான் இறுதியானது.

அவளையும் அறியாமல் உள்ளங்கை நெஞ்சை அழுத்தியது. நெஞ்சுக்கூடு லேசாகப் படபடத்தது. மறுபடியும் மனதின் உள்ளார்ந்த மூலையில் இருந்து ஏதோ ஒரு அழுத்த உணர்வு படிப்படியாகப் பெருகி, சர்வாங்கமும் வியாபித்தது. மயிர்க்கால்களைக் குத்திடவைத்து திடீரென சுருங்கிக் கொண்டது. இவையெல்லாம் மருத்துவப் பட்டதாரியான அவள் ஸ்தூல அறிவுக்கு ஒவ்வாது முரண்பாடாகி, முறிந்து, பின் தொடர்ந்தது.

மரணம் என்பது உடலின் இறுதி வடிவமாக இருக்கலாம் அல்லது எண்ணத்தின் முற்றுப் புள்ளியாக இருக்கலாம்.

ஆனால் இது நிகழ்வது ஒன்றுதான் சத்தியமானது, நிச்சயமானது. அது இன்றாகவும் இருக்கலாம். என்றாகவும் இருக்கலாம். ஆனால் இல்லாமல் இருக்க முடியாது.

அதை நிர்ணயிப்பது யார்? அருவமான அப்பாற்பட்ட சக்தியா? உருவமான கண்ணுக்குத் தெரிந்த...

திடீரென குழந்தை வீரிட்டுக் கத்தியது. அரக்கப் பரக்க எழுந்து குழந்தையை வாரிஅணைத்துக் கொண்டாள்.

குழந்தைக்கு லேசாக உடம்பு தகித்துக்கொண்டிருந்தது.

'வேண்டாம்! இன்று எங்கும் போக வேண்டாம். குழந்தைகளுடனேயே இருக்க வேண்டும். என் குழந்தைகள், என் செல்வங்கள். அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்து கண்களில் பனித்தது.

குழந்தைகளைக் கவனித்து எத்தனை நாளாகிவிட்டது.

நினைத்துப் பார்த்தாள். ஏக்கம் பெருமூச்சாக வெளிவந்தது. இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாளில் இருந்துதான் இப்படி என்பது மட்டும் அழியாமல் நினைவில் வந்தது. அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது கூட ஒரு தற்செயல் சம்பவம் தான்.

'இன்று எமது சமூகம் குழம்பிப் போயுள்ளது. சரி எது? தவறு எது? என்று பிரித்துணர முடியாதபடி சகலதும் தாறுமாறாக்கப்பட்டுள்ளது. நாங்களும் அப்படித்தான். இப்போது நம் முன் உள்ள முக்கிய கடமை நிகழ்வுகளை உள்ளபடி பதிய வைத்து அடுத்த தலைமுறைக்கு அறியத் தருவதுதான்' என்று அவள் கூறிய கருத்தைச் சக ஆசிரியர்களில் சிலர் ஏற்றுக் கொண்டு, அவளையே பொறுப்பேற்க வைத்து செயல்பட்டனர். இப்போது அது இறுதி அத்தியாயத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. அதன் தயாரிப்பில் தான் இரவு நெடுநேரம்வரையில் இருந்தாள்.

அந்த முக்கியத்துவமெல்லாம் இப்போது குழந்தையின் அழுகையில் கரைந்துபோயிற்று.

அவளின் அணைப்பில் குழந்தை மீண்டும் தூங்கத் தொடங்கியதும் மகன் படுத்திருந்த இடத்தைப் பார்த்தாள். அது காலியாக இருந்தது. எங்கு போயிருப்பான். கூப்பிட்டபடியே வெளியில் வந்து பார்த்தாள். முற்றத்துப் பதுங்குகுழிக்குள் கையில் ஒரு பொம்மைத் துப்பாக்கியை வைத்து கவனமாக விளையாடிக்கொண்டிருந்தான் அவன்.

முதலில் அதைப்பறித்து முறித்து எறிந்துவிடவேண்டும் என்று கைகள் குறுகுறுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நிதானித்துக் கொண்டாள். இது ஒரு சூழ்நிலையின் தாக்கம், வெளிப்புறக் கவர்ச்சி. இவனைக் கண்டிப்பதால்மட்டும் இந்தப் பிரச்சினைக்கு முடிவு வந்து விடப்போவதில்லை. இன்று இது இளம் சமுதாயத்தின் மனதில் ஆழப்பதிந்துவிட்ட நோயாகிவிட்டது. ஆண்டவனே! இது எங்கு போய் முடியப் போகிறது. ஒரு கணம் கண்களை இறுக மூடிக் கொண்டாள். உலகம் தலை கீழாகச் சுற்றியது.

**இந்த நேரத்தில் படையினர் வந்தால்... நினைத்தவுடன் நெஞ்சு பகீரென்றது. அவர்களுக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாதே என்று மனம் பிரார்த்தித்துக் கொண்டது. பிள்ளைகளே சீக்கிரமாக வீட்டுக்குப் போய்ச் சேருங்கள் என்று சொல்ல வேண்டும் என எண்ணியவளாய் நடையைத் தளர்த்தி, அவர்கள் அருகில் வரும் வரை காத்திருந்தாள்.**

அவனை மெதுவாக அணைத்துவந்து படிப்பு மேசையின் முன் இருத்தி புத்தகத்தை எடுத்துக் கொடுத்தாள்.

அவளுக்குத் தலை, பெரும் பாரமாய்க் கனத்தது. புருவத்தை மேலும் கீழும் நீவி விட்டுக் கொண்டாள். சுற்றிவர எரியும் நெருப்புக்கு நடுவில் நிற்பது போன்ற தவிப்பு அவள் உணர்வில் இருந்தது. தாய் கொண்டு வந்து கொடுத்த தேநீரை 'சடக்' கென்று வாங்கி ஒரு வாய் உறிஞ்சியதும் எல்லாமே நிதானத்துக்கு வந்தது மாதிரியிருந்தது.

தனது தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அது நிர்மலமாக பளிச்சென்றிருந்தது.

என்னை உருவாக்க இவள் எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள். இவளின் சொல்லமுடியாத தியாகமும் அர்ப்பணிப்பும், வெற்றி பெற்றுவிட்டதென்ற இறுமாப்பில் நிமிர்ந்து நிற்கிறாள். தனது கடமை முற்றுப்பெற்று விட்டதென்று சொல்லாமல் சொல்கிறது அவள் முகம்.

ஆனால் நான்....

மகனைப் பார்த்தாள். அவன் பார்வை, பதுங்குகுழிப் பக்கமாக வெறித்துக்கிடந்தது, அவளுக்கு சுரீர் என்று நெஞ்சில் குத்தியது மாதிரி இருந்தது. என்னுடைய தியாகமும் அர்ப்பணிப்பும் இவனை எந்தளவுக்கு மனிதனாக்கப் போகிறது?

அவள் மனம் ஆராய்ச்சியில் இறங்கியது. எல்லாவற்றிற்கும் மேலாக சமூகம் நலமாக இருந்தால்தான் என் பிள்ளைகளும் நலமாக இருப்பார்கள். இதில் எந்தக் கோணத்தில் பார்த்தாலும் சமுதாயம் எனக்குத் தேவையானது. நான் சமுதாயத்துக்குத் தேவையானவள்.

இப்போது அவளுக்கு கல்லூரிக்குப் போக வேண்டும், இறுதி அத்தியாயத்தைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வலுத்துவிட்டது.

அவசர அவசரமாக உடையை மாற்றிக்கொண்டு, வாசல் வரை நடந்தவள், ஏதோ சிந்தித்தவளாய் லேசாக கால்கள் தளர திரும்பி வந்தாள்.

இந்தச் செய்கை தாய்க்கு வழக்கத்துக்கு மாறாக இருந்தது. மகளைக் கலக்கத்தோடு பார்த்தது அந்தத் தாயுள்ளம். சுமதியின் கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன. முகத்திலும் ஒரு சோகம் அப்பிக் கிடந்தது. மிகவும் சிரமப்பட்டு, 'குழந்தைகள் கவனம்' என்று சொல்லும் போதே குரல் கரகரத்து தொண்டையை அடைத்துக் கொண்டு விட்டது அவளுக்கு.

கல்லூரியை விட்டு வெளியில் வரும்போதே சூரியன் களைத்து தென்னை மரங்களுக்குள் இறங்கியிருந்தான். வீதிகளெல்லாம் ஆள் அரவமற்று, சூனியமாக இருந்தது. தூரத்தில் கேட்கும் வேட்டுச் சத்தத்துக்கு நாய்கள் மட்டும் ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

'அமைதியும்' தனிமையும் ஒரு பயத்தைக் கொடுத்தாலும், குழந்தைகளைக் காண வேண்டும் என்ற ஆவல் அவளை எட்டி நடைபோட வைத்தது. வீதியோரங்களில் நிற்கும் மரங்கள் அசைவதுகூட ஒரு கணம் மனத்தின் தைரியத்தைப் பரிசோதித்துப் பார்த்தது. அரக்கத்தனமாக இருட்டு சர்வமும் வியாபித்து அவளை முந்திவிடத் துடித்தது: இல்லை தான் முந்த வேண்டும் என எண்ணம் துடித்தது.

காலடி அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். இரண்டு சிறுவர்கள் அவளைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் மெலிந்த தோற்றமும், இறுகிப் போன முகமும், அவளுக்கு சொல்ல முடியாத வேதனையாக இருந்தது.

இன்னும் ஓரிரண்டு வருடங்களில் என் மகனும் இவர்களைப் போல் வளர்ந்து விடுவான். மகனின் உருவத்தை அவர்களோடு நிறுத்திப் பார்த்தாள். நீளமுக்கும், சுருள் முடியும் நிழலாகத் தோன்றி மறைந்தது.

பாவம்! இந்தப் பிள்ளைகளுக்கு என்ன துன்பமோ! சே.... சின்னஞ் சிறுசுகள்கூட எவ்வளவு துயரங்களைத் தாங்கிகொள்ள வேண்டியிருக்கிறது. முடிவில்லாத துயரங்களுக்கு எப்போதுதான் முடிவுவரப் போகின்றதோ!

இந்த நேரத்தில் படையினர் வந்தால்...

நினைத்தவுடன் நெஞ்சு பகீரென்றது. அவர்களுக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாதே என்று மனம் பிரார்த்தித்துக் கொண்டது. பிள்ளைகளே சீக்கிரமாக வீட்டுக்குப் போய்ச் சேருங்கள் என்று சொல்ல வேண்டும் என எண்ணியவளாய் நடையைத் தளர்த்தி, அவர்கள் அருகில் வரும் வரை காத்திருந்தாள்.

அவர்கள் அண்மித்ததும், சிநேகமான புன்சிரிப்போடு சொல்ல வேண்டியதைச் சொல்ல வாயெடுத்தவள், மிரண்டு போனவளாய் வார்த்தைகள் வெளிவராமலே துவண்டு நிலத்தில் விழுந்தாள். பிடரித் துவாரத்தினூடாக குருதி கூந்தலை நனைத்து மண்ணில் இறங்கியது. கண்கள் அவர்கள் போகும் திசையைப் பார்க்க எத்தனித்தது. ஆனால் பார்க்கமுடியாமல், இருள் முழுவதுமாக அவளை முந்திக்கொண்டது. ●



## குமார்மூர்த்தி

*யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவிலிருந்து 1987ல் கனடாவுக்கு புலம் பெயர்ந்து சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு 27 ஜூலை 2001ல் சென்னை மருத்துவமனையொன்றில் காலமான 45 வயதேயான திரு. குமார்மூர்த்தி நினைவாக அவரது சிறுகதைத் தொகுப்பான 'முகம் தேடும் மனிதன்' தொகுதியிலிருந்து இச் சிறுகதையைப் பிரசுரிக்கின்றோம்.*

*குமார்மூர்த்தி பத்தோடு பதினொன்றான வெறும் புலம்பெயர் படைப்பாளி அல்ல. அவர் தனது சொந்த ஈழத்தமிழ் மக்களின் விடுதலையும் ஜனநாயகமும் இழைந்த குரல். மிகவும் வீச்சான அதேவேளையில் தமிழ் மக்களின் காற்றுப் புகாத இடைவெளிகளிலும் மானசீகமாக ஊடுருவிப் பார்த்த குரல். இதனால்தானோ என்னவோ, இவர் பற்றிய பேச்சு எமது நாட்டுப் புத்திஜீவிகளுக்கிடையோ, இலக்கியக்காரர்களிடையோ, ஏன் தமிழ்த் தேசியப் பத்திரிகைகளிலேயோ காணோம்.*

*தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் அதிகாரப் போட்டியால் திசைமாறி உருக்குலைந்து மோதலாக மாறியபோது ஒதுங்கி ஓடாதவர். தேசிய விடுதலை தமிழ்ப் பாஸிசமாகி, தமிழ் மக்களின் மேல் சிங்களப் பேரினவாதத்தின் மறுபக்கமாக இரட்டை நுகத்தடியாகப் பூட்டப்பட்ட பொழுது, மந்தைகளாக்கப்பட்ட அந்த மக்களுக்காக இலக்கிய தளத்தில் துணிச்சலுடன் குரல் கொடுத்தவர்.*

*புதிய மில்லேனியத்தின் முதலாவது தசாப்தத்தின் இலக்கிய வானில் தமிழ் பாஸிசத்தின் இருளைக் கிழித்து புதிய வசந்தத்தின் வருகைக்கான ஜனநாயக மின்னல் கீற்றுகளில் குமார்மூர்த்தியும் ஒருவர். அதற்காக 90களிலேயே தனது பேனாவில் தமிழ் மக்களின் புதிய இரத்தத்தை தோய்த்து எழுதிய இந்த தமிழிலக்கியப் போராளிக்கு சிரம் தாழ்த்துகிறோம்.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**1819.**

இலங்கை அன்னியர் ஆட்சியில் மாறி மாறி சிக்கித் தவித்த காலம் அது. அதுவும் பிரிட்டிஷார் இலங்கையை கடைசியாக கைப்பற்றி தமது காலனியாக - காலடியில் வைத்திருந்த சமயம்.

19ம் நூற்றாண்டில் இலங்கை 9 மாகாணங்களாக பிரிக்கப் படுவதற்கு முன்னர் இருந்தது துன்சிங்கள எனும் மாயரட்ட, ருஹுணு ரட்ட, பஹத்த ரட்ட என்ற பிரிவுகளே.

சிங்கள மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்த போது நாடு இப்படித்தான் மூன்று மாநிலங்களாக இருந்தன. அதனை நாடு என்றுதான் அழைத்தார்கள்.

இக்காலகட்டத்தில் ஒருநாள்... சிலாபத்திலுள்ள ஹால்தண்டுவன கிராமத்திற்கு வெளியூரிலிருந்து ஒரு குடும்பம் வருகிறது என்ற செய்தி கிராமம் எங்கும் பரவியது.

அப்போதெல்லாம் கிராமத்தில் ஒரு சின்ன விஷயம் நடந்தாலும் அது மிகவேகமாக சகல இடங்களிலும் பரவிவிடும். பத்திரிகைகள் இல்லாத காலத்தில் கதைகளுக்கு அப்படி ஒரு வேகம்.

அதுமட்டுமல்ல இப்படி யாரும் ஊர்விட்டு ஊர் மாறி வருவதும் அபூர்வம்.

அதைவிட வருகின்றவர்கள் ஹால்தண்டுவன பெய்யப்பு விதானையின் (பேதுரு கல்தேரா கிராமத் தலைமைக்காரர்) பாட்டனாருக்குச் சொந்தமான வீட்டுக்கே வருகிறார்கள் என்ற விஷயமும் இந்த விடயம் செய்தியாவதற்கு காரண மாகியது.

பெய்யப்பு விதானையாரின் குடும்பமே ஹால்தண்டுவன கிராமத்தின் ஆதிக்குடிகள். புகழ்பூத்த பரம்பரையினர். இமி ஹாமி வம்சம், ராஜபக்ஷ வம்சம், சிங்கபாஹு வம்சம், அபயவிக்ரம வம்சம் என்பன கிராமத்தில் பிரபலமான செல்வாக்கு மிக்க குடும்பங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தானை ஹபுகொட பிரதேசத்திலிருந்து வந்த கல்தேரா வம்சத்தைச் சேர்ந்தவர்களும் ஊர் கோடியில்தான் குடியிருந்தனர். இந்த கல்தேரா வம்சத்திலுள்ள ஒருவரின் வீட்டுக்குத்தான் அந்த வெளியூர் குடும்பம் வருவதாகத் தகவல்.

வரப்போகின்றவர் தீகிரி கேவகே அதாசி அப்பு என்பவர். இவரை அவருடைய ஆட்கள் அப்புரால, அப்பு அய்யா என்றும் அழைப்பதுண்டு.

ஜா எல-கந்தானைக்கு அண் மையிலுள்ள மத்துமகமையில் பிறந்தவர்தான் அதாசி அப்பு. அவர் ஒரு வண்டில்காரர். அவரிடம் இரு காளைமாடுகள் கட்டும் மாட்டு வண்டியும், திருக்கன் வண்டியும் சொந்தமாக இருந்தன.

அக்காலத்தில் மக்கள் போக்குவரத்துக்கு மட்டுமல்ல பொருட்களை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கும் பஸ், லொறி, கார் போன்ற வாகனங்கள் இருக்கவில்லை. வண்டிகள் மூலமே போக்கு வரத்துகள் நடைபெற்றன.

என்றாலும் அக்காலத்தில் இப்படி மாட்டு வைத்திருப்பது அதுவும் திருக்கன் வண்டி வைத்திருப்பது கார் வைத்தி ருப்பதற்குச் சமமாகவே கருதப்பட்டது. வசதியுள்ள வர்கள் பெரிய குடும்பத்தவர் கள் மட்டுமே மாட்டு வண்டிகளில் செல்வார்கள். திருக்கன் வண்டியில் திரைச்சீலை போட்டு மூடி மறைத்துக் கொண்ட வண்ணமும் பெரிய இடத்துப் பெண்கள் செல்வதுண்டு.

அக்காலத்தில் புகையிலைச் செய்கைக்கு சிலாபம் பெயர் பெற்றது. இன்றும் சிலாபத்தின் சில பகுதிகளில் புகையிலைச் செய்கை சிறப்பாக நடை-பெற்று வருகின்றது.

அதாசி அப்பு புகையிலையை வாங்கி கொழும்பு, புத்தளம், கண்டி போன்ற பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று விற்றுவருவதை தொழிலாகச் செய்து வந்தார்.

ஆனால் சிறிது காலம் புகையிலைச் செய்கை படுத்து விட்டது. விளைச்சல் குறைந்து விட்டது. இனியும் அங்கு இருந்தால் ஒருநேரக் கஞ்சிக்கே வழியில்லாமல் போகும் என்று அஞ்சினார் அதாசி அப்பு.

அதனால்தான் அந்த ஊரிலிருந்து ஹால்தண்டுவன பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்வது என்ற முடிவுக்கு வந்தார்.
அந்த வண்டியில் அவரோடு கூடவருகிற அழகே உருவான பெண்தான் பிச்சோஹாமி. அவள் நிறைமாதக் கர்ப்பிணி.

அதாசி அப்பு கண்டிக்கு புகையிலை எடுத்துச் செல்லும்போது கடுகண்ணாவ மலையடிவாரத்திலுள்ள மொல்லிகொட கிராமத்தில் வீதியோரத்திலுள்ள ஒரு தேநீர் கடையில் நின்று களைப்பாறிச் செல்வது வழக்கம்.

அக்காலத்தில் மாட்டுவண்டி களில் இவ்வாறு பயணங்கள் செல்பவர்கள் தங்குவதற்கு, சாப்பிடுவதற்கு, குளிப்பதற்கு, மாடுகளை குளிப்பாட்டுவதற்கு ஆறு, புல்வெளிகள், உள்ள இடங்களில் சிறுசிறு தேநீர் கடைகள் ஆங்காங்கே நடத்தப்பட்டு வந்தன.

கால் நடையாகச் செல்பவர் களுக்கு வீதியோரங்களில் அம்பலங்கள் அமைக்கப்பட்டி ருக்கும். அங்கே சுமைதாங்கி கல் நடப்பட்டிருக்கும். தமது சுமைகளை இறக்கி வைத்து விட்டு எவருடைய துணையுமின்றி தலையில் தூக்குவதற்கு சுமைதாங்கிக் கற்கள் உதவும்.

கடுகண்ணாவை மலையடிவாரத்தில் இருந்த இந்தக் கடை வெகு பிரபலம். காரணம் தொலைதூரங்களி லிருந்து வருபவர்கள் இவ்வாறு மலையடிவாரத்தை ஓட்டி ஓரிடத்தில் இளைப்பாறினால் மீண்டும் பயணத்தை ஆரம்பிக் கும்போது சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் புது உற்சாகத்தோடும் மலையேற முடியும் என்பதனாலேயே.

வீட்டு முற்றத்தில் அமர்ந்து கொண்டு வெறும் மேலோடும் வெற்றிலைத் தட்டில் வெற்றிலை பாக்கை வைத்துக் குதப்பியவாறே பேசிக்கொண்டு பொழுதை போக்குவார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை எல்லாவற்றையும் வெற்றிலை உரலில் இடித்துச் சாப்பிடுவதே குஷிதான்.

அதாசி அப்பு இவ்வழியால் செல்லும்போது இந்த தேநீர் கடையிலேயே தங்கி இளைப்பாறிச் செல்வது வழக்கம். அதற்கு இன்னொரு வசீகரமான காரணமும் இருந்தது. அதுதான் இந்தக் கடை முதலாளியின் ஒரே ஒரு மகள் பிச்சோஹாமி.

**மாட்டு வண்டியே பிரதான வாகனமாக இருந்த காலம் அது. மனிதர்களே மனிதர்களைக் காவிச் சென்ற 'பல்லக்குத் தூக்கிகள்' காலம் போய், மிருகங்களில் சவாரி செய்த காலம். குதிரை வண்டிகள் வைத்திருப்போர் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துடையவர்களாக மதிக்கப்பட்டனர். அரசர்கள், நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள் குதிரை வண்டிச் சொந்தக்காரர்களாய் இருந்தனர். அதற்கு அடுத்த படிநிலையில் மாட்டு வண்டிச் சவாரிக்காரர்கள் இருந்தனர். அதுவும் திருக்கன் வண்டி வைத்திருப்பவர்கள் இன்று கார் வைத்திருப்பவர்களுக்குச் சமமான மரியாதையை அக்காலத்தில் பெற்றுக்கொண்டனர்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சோஹாமி துறுதுறு வென்றிருப்பாள். பொல்லாத வாயாடி. கடையில் கறார் பேர்வழியாக காணப்பட்டாலும் பழகுவதற்கு இனிமையானவள். எவரையும் தன் பேச்சால் கவர்ந்து விடுவாள்.

அதாசி அப்பு வாட்டசாட்டமான இளைஞன். ஒருநாள் அதாசி அப்பு வரும்போது பிச்சோ ஹாமியின் தந்தை இருக்க வில்லை. வாடிக்கையாளர் களை கவனிக்க வேண்டியது அவளின் கடமையல்லவா?

அன்று ஏற்பட்ட நெருக்கம்தான் இன்று அவளை ஒரு பிள்ளைக்கு தாயாக்கியுள்ளது.

பிச்சோஹாமியின் தாய் அன்றைக்கு, 17 வருடங்க ளுக்கு முன் ஆங்கிலேயரி



னால் பிடிக்கப்பட்டு மலபாருக்கு நாடு கடத்தப்பட்ட ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் அந்தப்புர அழகியாக இருந்து விடுதலை பெற்றவராவார்.

பிச்சோஹாமியின் தந்தையிடம் பெண் கேட்டபோது அவர் எந்த மறுப்பும் இன்றிச் சம்மதித் தார். 'இவளின் தாய் அந்தப்புர அழகியாக இருந்தாலும் இவள் என்னுடையவள்' என்பதை அவர் தெளிவாகவே எடுத்துச் சொன்னார் நேர்மையாக- வெளிப்படையாக.

பிச்சோஹாமியை கரம்பற்றிய அதாசி அப்பு புதுமணப் பெண்ணை தனது பெற்றோர் வாழும் சிலாபத்திற்கே அழைத்து வந்து விட்டார்.

ஆனாலும் என்ன செய்யலாம் அவளுக்கு சிலாபத்தில் அதாசி அப்புவின் குடும்பத் தாரோடு நீண்டகாலம் வாழ கொடுத்து வைக்கவில்லை. புகையிலை வியாபாரம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து ஹால்தண்டுவன கிராமத்திற்கு இடம் பெயர்ந்தார்கள்.

ஒரு கட்டில், நீண்ட வாங்கு கள் இரண்டு, சட்டி பானைகள் சில, உரல், உலக்கை, அம்மி, குளவி, வெற்றிலை உரல், சுளகு, பாய்கள் சில, கத்தி, கோடரி, மண்வெட்டி, அலவாங்கு போன்ற குறிப்பிட்ட சில தட்டுமுட்டுச் சாமான்களே இருந்தன. இதற்கு மத்தியில்தான் பிச்சோஹாமியும் அமர்ந்து கொண்டிருந்தாள்...

வீடு வந்துவிட்டது. மாட்டு வண்டியை நிறுத்துவிட்டு அதாசி அப்புவும் பிச்சோஹாமி யும் கீழே இறங்கினர்.

இந்த ஊருக்கு வந்த சில நாட்களிலேயே எல்லோருக்கும் நன்கு அறிமுகமான மனிதராகிவிட்டார் அதாசி அப்பு. எல்லோருடைய மனங்களையும் கவர்ந்து அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி விட்டார்.

பெரிய குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் தமது பயணங்களுக்கு அதாசி அப்புவையே அழைத் துச் சென்றனர். மனைவி, பெண் குழந்தைகளை தனியாக அதாசி அப்புவுடன் நம்பி அனுப்பும் அளவுக்கு அவர் நம்பிக்கையையும் வென்றிருந்தார்.

பெரும்பாலும் அதாசி அப்பு வுக்கு வண்டிக்கு கூலியாக கிடைத்தது அரிசி, தேங்காய், மரக்கறி போன்ற பொருட்களே. எனவே முடை இல்லாமல் நிம்மதியாக அவரால் வாழ முடிந்தது.

**1820 மார்ச் 25ம் திகதி.**

அன்று அதிகாலையிலிருந்தே அதாசி அப்புவின் வீட்டில் ஒரே களேபரம். அக்கம் பக்கத்தவர் வீட்டு முற்றத்தில் கூடியிருந்தனர். அவர்களுக்கு வெற்றிலை கொடுத்து உப சரிக்கும் மன நிலையில் அதாசி அப்பு இருக்கவில்லை. பெண்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். மற்றும் பலர் முகங்களில் எத்தகைய உணர்ச்சிகளையும் வெளிக் காட்டாது அமர்ந்திருந்தனர், எதையோ எதிர்பார்த்தவர்களாக.

வீட்டினுள் ஒரு பெண் முக்கிமுனங்குவது கேட்டது. அது வேறு யாருமல்ல அதாசி அப்புவின் மனைவி பிச்சோஹாமதிதான். பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள். தலைப் பிரசவமல்லவா!

ஊரில் பிரபல வைத்தியரான பொடிசிஞ்ஞப்பு பரியாரியார் நாற்காலியில் அமர்ந்து வெற்றிலையை வாயில் போட்டுக் குதப்பியவாறே புராணக் கதையொன்றை கூறிக்கொண்டிருந்தார்.

வீட்டு விறாந்தையில் வாழை இலை ஒன்றை வைத்து அதன் மேல் பல மலர்களை யும் வைத்து சாம்பிராணி, குங்கிலியம் புகைபிடித்தவாறே மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு சாத்திரி.

வீட்டின் உள்ளே முனங்கல் சத்தம் வரவர அதிகரித்தது. எல்லோருடைய முகங்களும் பொறுமையின்றி பயம்கலந்த கவலையோடு காணப்பட்டன.

திடீர் என்று முனங்கல் அழுகையாக மாறியது. வீரிட்டு அழுவது கேட்டது. சாத்திரி தனது சத்தத்தை அதிகரித்தார். வைத்தியர் மட்டும் நிதானமாக நின்று கொண்டிருந்தார். அப்போது... உள்ளே இருந்து...

(தொடரும்)

## துப்பாக்கி சுடவும்... தோசை சுடவும்...

விளையாட்டுச் சாமான்கள் வாங்கும்போதே ஆண் குழந்தை என்றால் துப்பாக்கி, ரேஸ் கார் என வாங்கித் தருகிறோம். பெண் குழந்தை என்றால் விளையாட்டுச் சமையல் பாத்திரங்கள், ஆடை அலங்காரம் செய்யக்கூடிய பொம்மைகளை வாங்கித் தருகிறோம். துப்பாக்கி மூலம் அதிகாரம், வன்முறை எல்லாம் அவனுடைய உலகமாகிறது. ரேஸ் கார் போட்டி, பொறாமை, வெற்றி இவற்றை அவன் இலக்குகள் ஆக்குகிறது. சமையல் செய்து விளையாடும் பெண்ணுக்கு வீட்டில் சமையலறையே உலகமாகிறது. பொம்மைக்கு சிறுவயதில் செய்த அழகை விதவித மாக தான் செய்துகொண்டு பெண் என்றால் அழகு என்று அர்த்தப்படுத்திக் கொள்கிறாள். அதேமாதிரி ஆண் குழந்தைகளுக்கான உடலைக் கவ்விப் பிடிக்காத ஆடைகள், அவன் சுலபமாக சுற்றித் திரிய ஆடி ஓடி விளையாட ஏற்றதாக இருக்கிறது. பட்டுப் பாவாடை, விதவிதமான சட்டைகள் எல்லாம் பெண் குழந்தைகளை அழகாகக் காட்டுகின்றன. ஆனால், அந்தக் குழந்தையின் இயல்பான ஓட்டத்தை அது தடை செய்கிறது. இன்னமும் இந்த மாதிரியான பேதங்களை சுமந்து திரியும் நாம் ஆண், பெண் குழந்தைகளை பேதமில்லாமல் சமமாக வளர்த்து விட்டோம் என்று சொல்லிக் கொள்ள முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விடாக்கண்டன்:** வணக்கம் சங்கரியாரே!

**ஆ.சா.சங்கரி:** வணக்கத்துக்கு முந்தி.. நீர் அரசு சார்பு பத்திரிகையாளரா? எதிர்க்கட்சியாளரா என்று சொல்லும்.

**வி.க:** நான் ஒரு சுதந்திரப் பத்திரிகையாளன்.

**ஆ.ச:** அப்படியென்றால் சரி, நீங்கள் எங்கள் பக்கம்தான் இருப்பீர்கள்!

**வி.க:** 'வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்கக்கூடாது!' என்று அரசுக்கெதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆரம்பத்தில் கூட்டணி ஆதரிக்காததிற்கு காரணம் சொன்ன நீங்கள் இப்பொழுது தலைகீழாக மாறி அரசைக் கவிழ்ப்பதில் துடிப்பாய் நிற்கிறீர்களே, ஏன் அப்படி?

**ஆ.ச:** எதிரிகளின் துர்ப்பிரச்சாரத்தால் நீர் பாதிக்கப்பட்டிருப்பது தெரிகிறது. இருந்தாலும் சொல்கிறேன். யோகாசன முறைப்படி ஒரு மனிதன் தலைகீழாக நிற்பது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. அதைவிடச் சிறந்தது அரசியலில் இடைக்கிடை தலைகீழாக நிற்பது... விளங்குதா?

**வி.க:** உங்கள் தத்துவம் சரியாக விளங்கவில்லை. உதாரணங்கள் மூலம் விளக்கினால் நல்லது.

**ஆ.ச:** என்னையே பாரும். நான் முதலில் கம்யூனிஸ்ட் கட்சியில் கொழும்பு மாநகர சபையில் போட்டியிட்டுத் தோற்றேன். பிறகு, லங்கா சமசமாஜக் கட்சியில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டிபோட்டுத் தோற்றேன். பின் தமிழ் காங்கிரசுக்குத் தாவி வென்றேன். பின்னர் த.வி.கூட்டணியில் ஐக்கியமாகி எம்.பியாகவும் சிரேஷ்ட உபதலைவராகவும் வந்தேன்... இப்பொழுது புலிகளுடனும் ஐ.தே.கவுடனும் ஐக்கியமாகியுள்ளேன். என்னைப் பொறுத்தவரை இது வளர்ச்சியா இல்லையா?

**வி.க:** உங்களுக்கு புலிகள் மட்டக்களப்புப் பிரமுகர் ஒருவர் ஊடாக பயமுறுத்தல் விட்ட பின்தான் நீங்கள் உங்கள் நிலையை பயத்தினால் மாற்றியதாகச் சொல்கிறார்களே?

**ஆ.ச:** அவ்வளவுக்கு நான் சில்லறை அல்ல. புலிகள் எனக்குப் பல தடவை வன்னியிலிருந்து நேரடியாக எச்சரிக்கை விட்டுள்ளார்களே தவிர சுற்றிவளைத்து மட்டக்களப்பு மன்னாருக்குள்ளேயெல்லாம் விடவில்லை.

**வி.க:** வினாயகமூர்த்தி திரும்பவும் தமிழ் காங்கிரசுக்கு புத்துயிர் அளிக்கிறாரே. நீங்களும் அவருடன் இணைவீர்களா?

**ஆ.ச:** நான் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் ஜூனியர். விநாயகமூர்த்தி ஜூனியர் பொன்னம்பலத்தின் சட்ட ஜூனியர். இந்த கற்றுக்குட்டிகளுடன் சேர நான் என்ன அரசியல் தெரியாத கோணங்கியா? ஆனால் தம்பி என்ன நினைக்கிறார் என்று அறியவேண்டும். அவர் விருப்பத்துக்கு எதிராக என் தனிப்பட்ட மான ரோசங்களைப் பார்க்குமளவுக்கு நான் முட்டாளல்ல. தம்பி பேச்சைத் தட்டி நடக்க நான் தலைக்கொழுப்பெடுத்தவனுமல்ல.

**வி.க.:** உங்கள் பத்திரிகை அறிக்கைகளும் பேச்சுக்களும் ஒரு தெருச்சண்டியர் மாதிரித் தானே மற்றவர்களை எண்ண வைக்கின்றன?

**ஆ.ச.:** உது நேற்றைக்கு அரசியலுக்கு வந்த சில தறுதலையள் பரப்பும் வப்புக் கதை. ஆயுதத்தை வைச்சுக்கொண்டு மிரட்டுறவைக்கெல்லாம் நான் பயப்பிட மாட்டன். ஆயுதக்காரரோட எந்தக் காலத்திலையும் எங்களுக்குச் சகவாசம் இருந்ததில்லை. அவைக்கெல்லாம் நான் ஆரெண்டு காட்டுவன்... (கோபத்தில் மூச்சிரைக்கிறது...)

**வி.க.:** மன்னிக்கவும். நீங்கள் வன்னிக்குள்ளிருப்பவர்கள் பற்றியா சொல்கிறீர்கள்?

**ஆ.ச.:** அச்சச்சாரோ... என்ன நீர் டக்ளஸ் அனுப்பி வந்த ஆளே? விசர்க் கதையெல்லே கதைக்கிறீர். அவை வைச்சிருக்கிறதும் இந்தச் சிப்பிலியள் வைச்சிருக்கிறதும் ஒண்டே? அவை வைச்சிருக்கத்தானே வேணும். அப்பத்தானே நாங்கள் எங்கடை இந்த அரசியலைத் தொடரேலும். அவை எவ்வளவு நல்ல காரியத்துக்காக ஆயுதத்தை வைச்சிருக்கினம்....

**வி.க.:** எதைச் சொல்கிறீர்கள், அமிர், யோகேஸ், சரோஜினி, சிவபாலன் ஆகியோரைப் போட்டதையா?

**ஆ.ச.:** இதுக்குத்தான் நான் பத்திரிகைக்காரங்களை அண்டிறேல்லை. உங்கள் ஒருத்தருக்கும் எங்கடை நிலைமை விளங்கிறேல்லை... வாயைக் கிளறிக் கொல்லக் குடுக்கத்தான் பார்க்கிறியள். அவையள் ஒருத்தரும் கொல்லப் படேல்லை, இயற்கை மரணம்தான் எண்டு எத்தனைமுறை எங்கடை நிலைப்பாட்டை அறிவிச்சுப் போட்டம்...

**வி.க:** சரி சரி, உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

**ஆ.ச:** அடிமைத் தீவாக இருக்கும் நெடுந்தீவை விடுவிப்பது. சந்தர்ப்பம் கிடைத்தால், இந்து மதத்திற்கும் தமிழுக்கும் புனர்வாழ்வுக்கும் பணியாற்ற ஜே.ஆரின் மருமகன் ஒரு சந்தர்ப்பம் தந்தால் டக்ளசை விட சூப்பராக செய்து காட்டுவேன். (தலையைச் சொறிகிறார்) வேறு ஏதும் நினைவுக்கு வந்தால் பின்னர் சொல்கிறேன்.

**வி.க:** தலைவர் சிவசிதம்பரம் எப்படி இருக்கிறார்? என்ன சொல்கிறார்?

**ஆ.ச:** மெல்லப் பேசும். இப்ப எங்கடை தலைவர் அவரில்லை. வன்னியிலும் கொழும்பிலுமாக இரட்டைத் தலைமைத்துவம். சிவசிதம்பரமும் தன்னைச் சந்திக்கப்போற ஆக்களிட்டை டக்ளசைத்தான் புளுகித் தள்ளுகிறாராம். மனுசனுக்கு வயதும் போட்டுது...

**வி.க:** நன்றி சிரேஷ்ட உப தலைவரே! தங்களைப் போன்ற தலைவர்கள் தமிழர் அரசியலில் பல்கிப்பெருகி தமிழினத்துக்கு சவக்குழி...ச்சே.. விடியலைக் காட்ட வாழ்த்துகிறேன். வணக்கம்.

**ஆ.ச:** வணக்கம் நிருபரே. அடிக்கடி இந்தப் பக்கம் வாரும். (மெதுவான குரலில் அடிக்கடி பேச்சுவார்த்தை எண்டு எதிர்க்கட்சிக்காரங்கள் இரவுப் 'பார்ட்டியள்' போடுறதாலை மண்டை வலிக்குது. நான் கொஞ்சம் ஓய்வெடுக்க வேணும். (தலையைத் தடவுகிறார்). ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலாக நீ உன் மார்பில் அலையாக நான்...!

காதலை வெளிப்படையாக அங்கீகரித்து கொண்டாடும் பரவலான வாசகர்களுக்கும், 'காதல் அப்படி ஒன்றும் முக்கியமல்ல' என்று பொய்யாகச் சொல்லிக்கொண்டு வீண் பிடிவாதம் பிடிக்கும் வாசகர்களுக்கும் என் இனிய வணக்கம்!

காதலைப் பற்றி நான் என்ன எழுதப்போகிறேன் என்கிற கேள்வி உங்கள் தலைக்கு மேலே கார்ட்டூனில் வருவது போல ஊசலாடுவது எனக்குத் தெரிகிறது! என்ன எழுதப்போகிறேன் என்று எனக்கே தெரிய வில்லை என்பதுதான் உண்மை. மற்ற விஷயங்களைப்போல் அல்லாமல், காதலைப் பற்றி எழுத நிறைய 'காதல் முன் அனுபவங்கள்' தேவையில்லை என்பதுதான் எனக்குத் துணிச்சலைத் தந்திருக்கிறது! நிறைய அனுபவங்கள் காதல் அல்ல! 'ஒவ்வொரு மனிதனையும் வாழ்நாளில் ஒரே ஒரு முறை தூக்கத்திலிருந்து எழுப்புகிறது காதல்' என்று ஓர் ஆங்கிலக் கவிதை கூட உண்டு.

**என்னை உயிருக்கு உயிராக நேசிக்கிற ஒருத்தி இந்தப் பூமியில் இருக்கிறாள் என்ற உண்மை புலப்படும்போது, ஆழ் மனதில் அமுழ்ந்திக் கிடக்கும் மகிழ்ச்சி ஒருசேர பிறிட்டுக் கிளம்புகிறது. அவளோடு சேர்ந்து வாழ்க்கையை புத்தம் புதுசாக எதிர்கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் பலமடங்கு அதிகரிக்கிறது. கூடவே, எதிர்ப்படும் அத்தனை பேரிடமும் என் காதலைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று ஒரு துடிப்பு!**

ஆக மொத்தம், ஒரு குன்றின் மீது நின்று கொண்டு கடலுக்குள் குதிக்கும் உணர்வு மட்டுமே எனக்கு! ஆழ் கடலுக்குள் சென்று அங்கேயுள்ள அத்தனை ஆச்சர்யங்களைப் பற்றியும் எப்படி ஒரு மனிதனால் விவரிக்கமுடியாதோ, அதே போலத்தான் காதல் பற்றி எல்லாவற்றையும் எழுத நினைப்பதும்!

இந்த என் முயற்சியில் 'பாஸ் மார்க்' வாங்க அகண்ட அண்டத்தில் உள்ள அத்தனை காதல் கடவுள்களும் எனக்குத் துணை நிற்பார்கள் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கிறது!

- ஓர் உற்சாகமான உண்மை! உங்களைக் காதலிக்கப் பிறந்தவர்கள் இந்த பூமியில் ஐம்பதினாயிரம் பேர் இருக்கிறார்கள் என்று ஓர் ஆராய்ச்சியில் மனோதத்துவ நிபுணர்கள் உடன்பட்டு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்!

அதாவது, நீங்களும் அவரும் சந்தித்துப் பழகினால் இருவரும் காதலிக்க ஆரம்பித்துவிடுவீர்கள் என்று அர்த்தம்! ஆனால், நடைமுறையில் இது சாத்தியமல்ல. பூகோளமும், கலாசாரமும், வாழ்க்கையும், வசதியும் உங்களை சென்னைக்குள், மதுரைக்குள், அல்லது கானாடுகாத்தானுக்குள் கட்டிப் போட்டிருக்கிறது. பேச்சுக்கு நீங்கள் அத்தனை 'காதலர்களையும்' சந்திக்க முடியும் என்றாலும் காதலிக்கக் கூடியவர்களை உங்களால் 'லிஸ்ட்' எடுக்க முடியாது. முதல் காதல் உங்களை மேற்கொண்டு நகராமல் கட்டிப் போட்டுவிடும் என்பதுதான் காரணம்!

சுமார் இரண்டரை கோடி ஆண்டுகளுக்கு முன், மையோஸீன் யுகத்தில், பூமி குளிர்ந்து, பிரமாண்டமான காடுகள் வளர்ந்த காலகட்டத்தில் ஏராளமான புதிய உயிரினங்கள் தோன்றின. அதில் முக்கியமானவை குரங்கு வகைகள், சுமார் எழுபது வகைக் குரங்குகள். இவற்றில் ஒரு பிரிவாக, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் Apes என்று அழைக்கப்படும் குரங்குகளில் மட்டும் இருபது பிரிவுகள் வளைய வந்தன. இன்று மிச்சமிருக்கும் Apes வகை - சிம்பன்ஸி, கொரில்லா, கிப்பன், உராங் உடான் என்ற நான்கு மட்டுமே.

இதில் சிம்பன்ஸிக்கும், மனிதனுக்கும் மட்டும் பொதுவான ஒரு மூதாதையர் உண்டு. குரங்கும் அல்லாத, மனிதனும் அல்லாத 'அவரிடமிருந்து' கிளம்பிய இரண்டு கிளைகளில் ஒன்று நம்முடைய பங்காளி சிம்பன்ஸி. இன்னொன்றுதான் நாம் - Homo Sapiens! இந்தப் புதிய 'மனித இனம்' பரிணாம வளர்ச்சி பெற்று இன்றைய மனிதனாக ஆக இன்னொரு 40 லட்சம் ஆண்டுகள் ஆனது. காதல், கலாசாரம், குடும்பமெல்லாம் வந்தது சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான். ஒட்டுமொத்தமான காலத்தை எடுத்துக் கொண்டால் காதல் ஒரு நிகழ்கால ஆச்சர்யம்தான்! ஆனால், எப்படிப்பட்ட பேராச்சர்யம்! மற்றவை மாறினாலும் காதல் மட்டும் மாறாமல் பிராண வாயுவுக்கு அடுத்தபடியாக அல்லவா மனிதனைச் சூழ்ந்துவிட்டது.

'எனக்குத் தெரிந்து ஒரே ஒரு கடமைதான் இருக்கிறது - காதலிப்பது!' என்றார் காம்யு.

'காதல் - நரகத்தின் அவலத்துக்கு நடுவிலும் சொர்க்கத்தை நிர்மாணிக்கிறது' என்றார் வில்லியம் பிளேக்.

'நான் உன்னைக் காதலிக்கிறேன்!
சூரியன் கிழடு தட்டிப் போகலாம்
நட்சத்திரங்கள் ஜில்லிட்டுப் போகலாம்
என் காதலுக்கு மரணம் கிடையாது'
- என்று உருகுகிறார் ஒரு கவிஞர்.

'என் இதயத்துக்குள் உன்னைப் பூட்டி வைத்து சாவியை எப்போதோ வீசி எறிந்துவிட்டேன்!'
என்கிறார் முடிவாக இன்னொருவர்.

செக்ஸ் அவ்வப்போது வந்து போகும். காதல் உங்களை விடாப்பிடியாக பிடித்து வைத்துக் கொள்ளும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்!

லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், மனிதன் குரங்கு வகையறாக்களிலிருந்து பிரிந்து 'என் வழி - தனி வழி' என்று பரிணாம வளர்ச்சி பெறுவதற்கு முன்பு அவனுக்குக் காதல் தெரியாது. உடலுறவு மட்டுமே தெரியும். மற்ற எல்லா உயிரினங்களைப் போலவே, அவனுடைய 'செல்'களில் அமைந்திருந்த டி.என்.ஏ.வும் 'உடலுறவு கொள்' என்று அவனுக்கு ஆணையிட்டது. பாம்பு, பறவை, பூனை, மீன்... எல்லாவற்றையும் இணையச் சொல்லி இயக்குவதும் அந்த 'டி.என்.ஏ. ஆணை'தான். அத்தோடு ஏன் நாம் திருப்திப்பட்டுக் கொள்ளவில்லை என்பது ஒரு ஆச்சர்யமே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எத்தனையோ விஷயங்களில் காரண காரியங்களை தெளிவாக ஆராய்ந்து அலசும் விஞ்ஞானிகளால் காதலின் சக்தியையும், மர்மங்களையும் இன்றுவரை திட்டவட்டமாக விளக்க முடியவில்லை. காதல் விவரிக்க முடியாத ஒரு 'மேஜிக்'காகவே இருந்து வருகிறது. வெறுத்துப்போன சில சிந்தனையாளர்கள் காதலை ஒரு 'நோய்' என்றும் 'ஏமாற்று வேலை' என்றும் தாக்கினார்கள். ஆனால், பூமியைச் சுற்றிலும் 10 கி.மீ. உயரத்துக்குப் படிந்திருக்கும் 'ட்ரோபோஸ் பியர்' என்னும் காற்றுமண்டலத்துக்கு ஒரு படி கீழே புகுந்து, அத்தனை விஞ்ஞான மேதைகளுக்கும் 'டேக்கா' கொடுத்து விட்டு படர்ந்துவிட்டது காதல் மண்டலம்!

அதிலிருந்து மனிதகுலம் - காதலிக்க முடிந்தவர்கள், காதலிக்க விரும்புகிற வர்கள், காதலிக்கிறவர்கள் என்று மூன்று வகையில் லேசாகப் பிரிந்தது. கட்சி மாற்றங்கள் சர்வ சாதாரணம்! காதலிக்க விரும்பாதவர்களும் காதலிக்க முடிந்தவர்களே!

காதல் ஒரு மகா சக்தி. அறுதிப் பெரும்பான்மை வோட்டுகள் எப்போதோ கிடைத்துவிட்டன. மனித குணநலன்களில் மிகச்சிறந்த உணர்வு காதல் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். கடவுள் ஸ்பெஷலாக மனித இனத்துக்கு மட்டுமே தந்த ஒரு நேரடிப் பரிசுதான் காதல் என்கிறார்கள். ஆனால், மனிதனை மற்ற விலங்குகளிலிருந்து இனம் பிரித்து மேம்படுத்தும் ஓர் உன்னதமான பெரும் சக்தி காதல் என்பதில் சந்தேகமில்லை. சுருக்கமாக, வாழ்க்கையின் ஒரே அர்த்தம் - காதல் என்று கூட முடியும்!

'நீ தாமரையாக இருப்பின்
நான் உனக்குள் மகரந்தமாக இருந்து
கணப்பொழுதும் பிரியாமல்
ஒன்றாகவே வாழ்ந்து மடிவோம்,
நீ கடலாக இருப்பின்,
நான் உன் மார்பின் மீது
அலையாக மாறுவேன்
நிரந்தரமாக தழுவிக் கொண்டும்
முத்தமிட்டுக் கொண்டும்...'
- ஷரீன் என்னும் பங்களாதேஷ் பெண் கவிஞரின் வரிகள் சிலிர்ப்பூட்டுகின்றன.

'இந்தப் பூமியின் கூட்ட நெரிசலில், வெகுநாட்கள் ஏங்கித் துடிக்கும் இரு ஆன்மாக்கள் சந்திக்கும் முதல் தருணத்தில் ஒரு ஆவேசமான, புனிதமான சங்கமம் நிகழ்ந்தேறுகிறது. சும்மா இல்லை - பூமியில் உருப்பெறும் அந்தச் சங்கமம் பிறகு சொர்க்கத்திலும் கூட நிரந்தரமாகத் தொடர்கிறது. இந்த ஆச்சர்ய உணர்வுதான் காதல். அந்த உணர்வுக்காக நிகழ்த்தப்படும் மிகக் கடினமான, திகைப்பூட்டும் தியாகங்கள் கூட இனிமையான குதூகலங்களே!' என்றார் உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர் விக்டர் ஹ்யூகோ.

'காதல் என்பது பைத்தியக்காரத்தனம்!' என்று விடாப்பிடியாகச் சொல்பவர்களுக்கு ஒரே பதில் - 'இருக்கலாம். ஆனால் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரே பைத்தியக்காரத்தனம் அதுதான்!'



மனித இனத்துக்கு களங்கமில்லாத, சுயநலமில்லாத பரவசத்தைத் தரக்கூடியது காதல். அது ஏற்படுத்தும் மயக்கம் அற்புதமானது. உலகத்திலிருந்து விடுபட வைத்து இருவருக்கிடையே ஒரு சுகமான தனிமையை காதல் என்பது ஏற்படுத்துகிறது! காதலர்களின் முதல் சந்திப்பின்போது உலகமே புத்தம் புது மலர்களால் கிரீடம் சூட்டிக்கொள்கிறது!

'நான் உன்னைக் காதலிக்கிறேன் - ஏன் என்று கூட புரியாமல்! எதுவும் தெரி யாமல் புரியாமல் மிக நேரிடையாக, துளியும் கர்வமில்லாமல் உன்னைக் காதலிக்கிறேன். உன்னைக் காதலிப்பதை விட வேறு வழி எதுவுமே எனக்குத் தெரியவில்லை. இந்தக் காதலில் 'நான்' இல்லை. 'நீ'யும் இல்லை. இரண்டையும் இழந்து ஒருங்கிணைந்து விட்டோம். என் மார்பின் மீது உள்ள உன் கரம் என் கையைப்போல நான் உணரும் அளவுக்கு. நான் தூங்கும்போது உன் இமைகள் மூடும் அளவுக்கு!' என்கிறார் கவிஞர் பாப்லோ நெருடா.

'காதலர்கள் ஏதோ அவ்வப்போது சந்திக்கிறார்கள் என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அவர்கள் எப்போ துமே ஒருவரிடத்தில் ஒருவர் இருக்கிறவர் கள்!' என்று திட்டவட்டமாக சொன்னவர் ஒரு சூ.ஃபி ஞானி - ஜலாலுதீன் ரூமி.



உங்களுக்கும் சமுதாயத்துக்கும் நடுவே உணர்வுபூர்வமாக பாலங்கள் கட்டுதல் தான் வாழ்க்கை! அதில் தனிச்சிறப்புப் பெற்ற மிக ஆச்சர்யமான ஒரு பாலம்தான் காதல்!
வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களுக்குத்தான் காதலின் சக்தி புரியும். ஒருவருக்கொருவர் உடமை யாவதும் உரிமை கொண்டாடுவதும் ஆளுமை செலுத்துவதும் அல்ல காதல். இரு உலகங்களே சங்கமிக்கும் நிகழ்ச்சி அது. சுருக்கமாக சொல்ல வேண்டுமா னால் இரண்டு 'I's ஒரு பாலத்தின் மூலம் இணைந்தால்தான் 'us' - US!

*- நன்றி: 'விண் நாயகன்'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIPU அமுது

படைப்பாற்றல் போட்டி!

# விடைதான் என்ன?

ஆழ்ந் துறங்குகையில் அதிர்ந் தெழும்ப வைக்கும்
ட்ரவுசர ணிந்த அந்த பூட்ஸ் கால்கள்
''அல்லாஹ் எம்புள்ளய கொண்டு போறாங்களே''
அந்தகாரத்தைக் கிழித்த மாமியின் அவல ஓலம்
அள்ளிக் கொண்...டு... சென்ற
அந்தக் கறுப்பு நாற்சில்லு எமன்
மயானமாய் மரித்து நின்ற அந்த பசும் நிலம்
மங்கிய தேய்பிறை வெம்பனிக் காலம்
நெஞ்சின் நடுக்கம் இன்னும் தேகத்தில்
தடக் தடக்கென - இதயம் விழுந்திடுமோ?

அடுக்கடுக்காய் கடிதங்கள், கேம்ப் வாசல் காத்திருப்புகள்
''சின்னப்பெண் நீ கைப்பிள்ளையுடன் அலையாதே
காலம் உன் கணவனை மீட்டுத் தரலாம் - இல்லை
மீண்டும் நீ மணமுடிக்கலாம் - இப்போது
மகனை வளர்த்தலே உன் கடமை''
கீதோபதேசம் பண்ணி, கூடவே ''அவர்
கடத்தப்பட்டார் - இனந்தெரியாதோரால்'' என
கனத்த பைலை மூடினர்.

கண்ணீரும், கைக்குழந்தையும் காலத்தை ஓட்ட
''வாப்பாவ ஆர் கொண்டு போனாங்கள்''?
மூன்று வயது மழலையின் கேள்வி.
''சமாதானம் வரப் போகுதாம் - அப்ப
வாப்பாவும் வந்திடுவாங்களா?''
பத்து வயதுப் பையனின் கேள்வி.
விம்மியழுதலே விதியாய் போன
விதவை சொல்ல விடைதான் என்ன?



இரண்டாம் பரிசுக் கவிதை 1

ரூபா 2,000/=

மிப்ஹறம்,
புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையறையப்பட்ட மனிதத்துவப் பாடல்

எந்த வேதனையில் இருந்து
தொடங்குவது...
தோல்வியின் பாடலை?

எல்லாவித நாசங்களும் புகுந்தாடும்
இருப்பின் கடைசி வலிகளிலிருந்தா?

கரையற்று நீந்துகின்ற தெம்துயர்!

கண்ணீரால் முழ்கடிக்கப்பட்ட...
காலப் புதையலுக்குள்
எத்தனை உயிர்களின்
கனவுகள் மாண்டனவோ?

பிசாசுகளின் கசாப்புக் களத்திற்கு
இழுத்து வரப்பட்ட பிராணிகளின்
வாக்குமூலங்கள் பற்றி
ஆயுதங்கள் கவலையுறுவதில்லை!

அந்தோ -
போதியின் நிழலில்
புதைகுழிகள்;
பூசைத் தட்டுக்களில்
தலைமுறையின் தலைகள்!

மலர் கொண்டு வழிபடும்
பக்தர்களின் நிலத்தில்...
அசைவற்ற இரவுகளின் பாதாளத்தில்
கசக்கப் படுகின்றன
'பேடுகளின்' வனப்பும்... வாழ்வும்...!!

ஒளி காய்ந்து, முதிர்ந்த விழிகளின்
பிரார்த்தனைகள்...
தோட்டாக்களைத் தின்று வளர்ந்த
புறாக்களுக்குப் புரிவதில்லை!

சயனைட் குப்பியில்...
பீரங்கிச் சக்கரங்களில்...
மனித விடுதலை நிச்சயிக்கப்படவில்லை!

ஈவிரக்கமற்ற ஆயுதங்களால்
கட்டியெழுப்பிய
வழிதவறிய வரலாற்றை
யார் உடைத்து வீசுவது?

ஓயாது கொந்தளித்துக் கிடக்குமெங்கள்
போர் நிலத்தின் மேலாக...,
சிதைந்த நம் கூரைகளின் மேலாக...
நிம்மதி பூத்துப் புலர்ந்திடும்
ஒளிச் சிறகு விரித்து விடியல்
எழுந்திடுதல் எப்பொழுது?

விழிக்க முடியாத வேதனைகளோடு
உறைந்து கிடக்கிறது வாழ்க்கை;
உற்சாகமாய்...
சுற்றிக் கொண்டிருக்கிறது மரணம்!



NIPU அமுது
படைப்பாற்றல் போட்டி!

இரண்டாம் பரிசுக் கவிதை 2

ரூபா 2000/=

அனார்,
சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எம். வாசகருக்குப் பின் 80களின் ஆரம்பத்தில் P. விக்னேஸ்வரனின் கைகளில் நாடகத்தயாரிப்பு ஒப்படைக்கப்பட்டது. இவரது காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் குறைவானவையாக இருப்பினும் காத்திரமானவையாக இருந்தன. இவர் 79-81 களில் தம்மால் தயாரிக்கப்பட்ட நாடகங்களிற் தரமானவற்றைத் தெரிந்து வானொலி நிலைய ஒலிப்பேழைக்காப்பகத்தில் களஞ்சியப்படுத்தியுள்ளமையானது ஒரு நல்ல முன்னுதாரணம்.

அவ்வாறாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நாடகங்கள் -

கண்ணாடி வார்ப்புகள் (பாலேந்திரா), ஒத்தெல்லோ (இ.ரத்தினம்), இன்ஸ்பெக்டர் துரை (இ.ரத்தினம்), பாலையில் மலரும் பூக்கள் (செங்கை ஆழியான்), கற்பனைகள் கலைவதில்லை (கே.ஜெயமோகன்), பட்டங்கள் தாமாகப் பறப்பதில்லை (ஞானசக்தி கந்தையா), நினைவுகள் சாவதில்லை (ஜீ.பீ.வேதநாயகம்), சோகங்கள் வெல்லப்படும் (எம். திருநாவுக்கரசு), பலவீனம் (P.விக்னேஸ்வரன்) என்பனவாம்.

இவரது காலகட்டத்தில் 1980 இல் நடாத்தப்பட்ட நடிகர்களுக்கான குரல்தெரிவு பரிசோதனை மூலம் பழையவர்களும் புதியவர்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் தெரிவாகியிருந்தனர். இவர்களுள் 25 பேர் மட்டில் பழையவர்கள். 30பேர் மட்டில் வெளி மாகாணத்தவர்கள் அதனால் அவ்வளவாக வானொலியில் சந்தர்ப்பம் பெறாதவர்கள்.

ஏனையவர்களுள் S.கணேஸ்வரன், பாலசிங்கம் பிரபாகரன், ஜீ.பீ.வேதநாயகம், M.வரகுணன், R.ராஜரட்ணம், கோபால்சங்கர், றோச்அருளப்பு, S.நாகேந்திரன், S.தேவராஜா, நாகேசு தர்மலிங்கம், P.C.தர்மலிங்கம், அருணாசெல்லத்துரை, S.S.அச்சுதன்பிள்ளை, S.வாசுதேவன், ஆனந்தராணி ராஜரட்ணம், வனஜா ஸ்ரீநிவாசன், ஷாமினி ஜெயசிங்கம், A.M.C.ஜெயஜோதி, செல்வநாயகி தியாகராஜா, சசிபரம், சாந்தி சச்சிதானந்தம், கலிஸ்ரா திருச்செல்வம், திலகா ரட்ணம், திலகா தில்லைநாதன், சகுந்தலா சின்னையா, பூங்கொடி ராஜரட்ணம், பாக்கியம் கந்தசாமி, மாதுரிதேவி கணேசதுரை, சிவரஞ்சினி பத்மநாதன், சிசிலியா ஜோக்கிம் போன்றவர்கள் சிறப்பாக யாழ் வழக்கு நாடகங்களிலும்,

ஸ்ரீதர் பிச்சையப்பா, குயின்ரஸ் ஜீவன், ஜவஹர் பெர்னாண்டோ, ஜீ.போல்அன்ரனி, ராஜா கணேசன், M.K.ராகுலன், பூதரன் பேர்னாண்டோ, B.விஜயராஜா, ரஞ்சித் பெர்னாண்டோ, ரவிசங்கர் சண்முகம், வசந்தி சண்முகம், இந்திராணி ஜோர்ஜ் பெர்னாண்டோ, நித்யகல்யாணி காராளபிள்ளை, ரி.புஷ்பலீலா, உமாசந்திரா முத்தையா, அம்பிகா சண்முகம் போன்றோர் மலையக வழக்கு நாடகங்களிலும் தம் நடிப்பாற்றலை வெளிப்படுத்தினர்.




**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

எஸ்.எழில்வேந்தன், M.சர்வானந்தா, டேவிட் ராஜேந்திரன், S.விக்னேஸ்வரன் போன்றோர் கிராம சஞ்சிகை நாடகங்களில் தம் பங்களிப்பை வழங்கினர். S.ஜேசுரட்ணத்தின் 'முகத்தார் வீடு' மண்வாசனை சுமந்து கூவில் கள்ளுப்போல நேயர்களைக் கிறங்கிக் கிளுகிளுக்க வைத்தது.

இரா.பத்மநாதன், மாஸ்டர் சிவலிங்கம் ஆகிய மூத்த கலைஞர்களுடன் எம்.கந்தசாமி, கௌரி, சிவகலா கந்தசாமி, T.அமரசிங்கம், ஜெயந்திமாலா, செல்வநாயகம், போன்றோர் மட்டுவழக்கு நடிகர்களாகத் தெரிவான போதிலும் மட்டுவழக்கு நாடகங்கள் மிக அருந்தலாகவே ஒலிபரப்பானதால் அவர்கள் திறனும் வெளிப்பட பெரிதாக வாய்ப்புகள் ஏற்படவில்லை.

82 காலப்பகுதியில் பி.விக்னேஸ்வரன் ரூபவாஹினியைச் சரணடைய நாடகப்பகுதிப் பொறுப்பானது ஜோர்ஜ் சந்திரசேகரனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு எழுத்தாளராகக் கால்பதித்து பின் செய்தி அறிவிப்பாளராக மாறிய ஜோர்ஜ் நடிகராக, தயாரிப்பாளராக வானொலியில் பணிபுரிந்து அதன் நுட்பங்களை, சாதக பாதகங்களைப் புரிந்து கொண்டவர். சுமார் ஒரு தசாப்த காலம் அவரது கட்டுப்பாட்டின் கீழ் வானொலி நாடகத்துறை வளர்ச்சி கண்டது.

அவரது காலகட்டத்தில் அதிகளவு நாடகங்களை எழுதிக் குவித்தவர் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை அராலியூராரின் நாடகங்கள் பெரும்பாலும் அன்றாடக் குடும்ப நிகழ்வுகளை அக் காலகட்டப் பின்னணியில் மெல்லிய எள்ளலுடன் நாசூக்காக கூறுபவை. அவரது நாடகங்களில் சம்பவங்களைவிட உரையாடல் முக்கியத்துவம் பெறுவது வழக்கம்.

நீளமில்லாத சின்னச்சின்ன உரையாடல்கள் மூலம் நாடகத்தை நடாத்திச் செல்லும் அவரது உத்தியானது வானொலிக்குப் பொருத்தமாக அமைந்ததால் நீண்டகாலம் அவரையும் அது தக்க வைத்துக்கொண்டது.

ஜனகமகள் சிவஞானமும், ஞானசக்தி கந்தையாவும் எழுதிய தரமான நாடகங்கள் பல 82-84 காலப்பகுதியில் ஒலிபரப்பாகி நேயர்களின் அபிமானத்தை வென்றன. யாழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை, குறிப்பாக பெண்களுக்கேற்படும் பாதிப்புகளை உணர்வுபூர்வமாக இரத்தமும் சதையுமாக அவர்களின் நாடகங்கள் வடித்துத் தந்தன.

80களின் ஆரம்பத்தில் இரண்டாவது முறையாக வானொலி நாடகப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. பாமா ராஜேந்திரன் எழுதிய 'பந்தம்' என்ற நாடகம் முதற் பரிசீட்டியது.

84ல் ஒலிபரப்பான ஷிவானி (சியாமளா சிவகுருநாதன்) எழுதிய 'உறவுகள் ஊமையாகும் போது' எனும் நாடகம் குறிப்பிடத்தக்கது. ஒரு பெண்ணின் பிரச்சினையை உளவியல்ரீதியாக அணுகிய அந்நாடக வார்ப்பானது வித்தியாசமான நடையில் தமிழ் வானொலி நாடகத்துறையில் முன்னர் கையாளப்படாத வகையில் உருவாகியிருந்தது.

அக்காலகட்டத்துள் எழுதியவர்களுள் அ. பாலமனோகரன், இந்துமகேஷ், கலைநேசன்சிவம், யோகேந்திரநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

83 ஆடிக்கலவரம் காரணமாக ஆடிப்போய்விட்ட வானொலி நாடகத்துறை மீண்டும் 87 காலப்பகுதியில் புத்துயிர் பெற்றபோது அதற்கு உயிர்கொடுக்க உத்வேகமளித்தவர்களுள் அராலியூரார், ஜெயலீலா (லீலா ஜெயரட்னம்), R.பகவான், அருணா செல்லத்துரை, K.K.மதிவதனன், P.சந்தனம், குயின்ரஸ் ஜீவன், N.உதயகுமார் ஆகியோருடன் 'சானா' காலத்து மூத்த எழுத்தாளரான பாலாம்பிகை நடராஜாவும் இணைந்து கொள்கிறார்.

S.S.கணேசபிள்ளை, K.S.பாலசந்திரன், அஷ்ரப்கான், ஃபிராங் புஷ்பநாயகம் போன்ற உள்வீட்டு எழுத்தாளர்களும் முட்டுக் கொடுத்த போதிலுங்கூட இக் காலகட்டத்தில், குறிப்பிட்டுச் சொல்லும்படியான நாடகங்கள் உருவானதாகத் தெரியவில்லை.

மலையக எழுத்தாளர்கள் ஏனோ தெரியவில்லை வானொலி நாடகங்களில் அவ்வளவாக நாட்டம் காட்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

P.சந்தனம், குயின்ரஸ் ஜீவன், N.உதயகுமார் என்று மலையக வட்டார வழக்கில் எழுதுவோர் இக்காலகட்டத்தில் கொஞ்சம் மவுசு பெற்றார்கள்.

பாலாம்பிகை நடராஜா பழைய சினிமாப் பாணியில் பயணிப்பவர். அஷ்ரப்கானும் அவ்வாறே. ஜெயலீலாவும் மதிவதனனும் திருமலைத் தமிழில் தியானிப்பவர்கள்.

எஞ்சியவர்களின் பங்களிப்பும் யாழ் மக்களின் இதயத்துடிப்பை உணர்த்தப் போதுமானதயிருக்கவில்லை.

மட்டக்களப்புக்காரர் எதற்கும் முண்டியடிப்பதில்லை. அதனால் அவர்கள் குரலும் ஒலிக்கவில்லை. அதனால் ஒட்டுமொத்தமாக ஏதோ எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட காலகட்டமெனவும் திருப்திப்பட இயலாமற் போய்விட்டது.

ஜோர்ஜின் காலப்பகுதியில் தொடர் நாடகங்கள் பல ஒலிபரப்பாயின. C.சண்முகம், K.ஞானசேகரம், பில்ப்ஸ் ஜெகநாதன் ஆகியோர் இதில் பங்களிப்புச் செய்தனர்.

93இன் பிற்கூற்றில் ஒலிபரப்பான K.ஞானசேகரத்தின் 'பாதைகள் முடிவதெங்கே?' தொடர் நாடகம் முரண்பாடான பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளால் ஆவலைத் தூண்டும் வகையில் நகர்த்தப்பட்டிருந்தது. S.கணேஸ்வரன் தனது நடிப்பால் முத்திரை பதித்தார்.

93இன் நடுப்பகுதியில் எஸ். எழில்வேந்தன் வசம் நாடகப் பொறுப்பு வழங்கப்பட்டது. 45 நிமிடநேர நாடகங்கள் அப்துல் ஹமீத், ராஜேஸ்வரி சண்முகம் போன்ற மூத்த அறிவிப்பாளர்களிடம் விடப்பட்டது.




இவரது காலகட்டத்தில் (சன்மானத் தொகை சாமான்யமானதாக இருந்ததாலோ தெரியாது) எழுத்தாளர்கள் பலர் ஓய்ந்து போனார்கள். நடிகர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு. புலம்பெயர்ந்து போய்விட்டதாலும், நடிகைகள் சிலர் (குடும்ப பாரத்தால்?) ஒதுங்கி விட்டதாலும் நிலைமை கவலைக்கிடமானதாயிற்று. சுறுசுறுப்பும் செயற்றிறனும்மிக்க எழிலுக்குச் சோதனையான காலம்.

ஆயினும் அராலியூரார், ஜெயலீலா, என்.உதயகுமார் ஆகியோருடன் செ.குணரத்தினம், கே.ரி.சிவகுருநாதன் போன்றோரின் தயவால் முதலுக்கு மோசமில்லாமல் எழிலால் ஒப்பேற்ற முடிந்தது.

45 நிமிடநேர நாடகங்களுட்பட ஏழு நாடகங்களை எழுதி நீண்ட இடைவெளியின்பின் ஜி.பி. வேதநாயகம் வானொலி நாடக உலகில் மீள்பிரவேசம் செய்தது இவரது காலகட்டத்திலேயே.

இவரது காலத்தில், 94இல் நடத்தப்பட்ட நடிகர்கள் தேர்வில் பல புதியவர்கள் அறிமுகமானார்கள். அவர்களுள் R.யோகராஜன், ஜெயரஞ்சன் யோகராஜ், தம்பியையா தேவதாஸ், R.ரவீந்திரன், ஜெயகிருஷ்ணராஜா, K.M.சித்தானந்தன், V.K. ராஜேந்திரா, V.N.S. உதயச்சந்திரன், K.T.சிவகுருநாதன், S.அம்பலவாணர், K.சண்முகநாதன், A.M. ஜேசுரட்னம், S.குமாரவேல், B. வாமலோசனன், B.திருச்செந்தூரன், T.M.சாந்திலேகா, சுமதி பாலஸ்ரீதரன், பத்மாகுகபாலன், நாகராணி பேரின்பராசா, புஷ்பராணி சிவலிங்கம், சுபாஷினி ஞானசேகரம், குமுதினி ஜெகநாதன் போன்றோர் யாழ் வழக்கு நாடகங்களிலும்,

S.சிவசண்முகநாதன், M.N. ராஜா, P.சீதாராமன், லூக்கஸ் பெர்னாண்டோ, T.டக்ளஸ், S.P.டக்ளஸ், அம்பிகா சண்முகம், மகேஸ்வரிரட்னம், விஜயாம்பிகை ஞானமணி போன்றோர் மலையக வழக்கு நாடகங்களிலும் யமுனா சர்வானந்தா, மங்களகௌரி விராகநாதன், விமல்ராஜ் பாக்கியநாயகம், லோறன்ஸ் செல்வநாயகம், T.சுகிர்தராஜ் போன்றோர் மட்டு வழக்கு நாடகங்களிலும் பங்கேற்று நடித்தார்கள். (இவர்களிற் பலர் பகுதிநேர அறிவிப்பாளர்களாகவும் தெரிவாகி இருந்தார்கள்).


*எம். சர்வானந்தா*

96இன் ஆரம்பத்தில் 3வது தடவையாக வானொலி நாடகப் போட்டி நடாத்தப்பட்டது. அதில் K.K.மதிவதனன் (மனிதனும் தெய்வமாகலாம்), S.S.கணேசபிள்ளை (குருவிக்கூடு) அராலியூர் N. சுந்தரம்பிள்ளை (கல்வியா கனடா கல்யாணமா?) ஆகியோர் முதல் மூன்று பரிசுகளையும் பெற்றனர்.

97ல் எழில்வேந்தன் சக்திக்குப் புலம்பெயர்ந்துவிட நாடகப் பொறுப்பு R. யோகராஜன் வசமானது. 99ஆம் ஆண்டின் இறுதிக்குள் இவரின் தயாரிப்பில் சுமார் 100 நாடகங்கள் மட்டில் தயாரிக்கப்பட்டன. (இந்த 2001 இலும் தொடர்ந்து இவர் நாடகத் தயாரிப்பாளராக இருந்து வருகிறார்.)

இவற்றுள் வழமைபோல அதிகளவு நாடகங்கள் (சுமார் 18) அராலியூராருடையவை. அடுத்து செ.குணரத்தினம் (11) தனியொ


*ஆர். யோகராஜன்*

ருவராக மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் மண் வாசனை ஒலிக்கப் பாடுபட்டிருக்கிறார். G.P. வேதநாயகமும் 8 நாடகங்கள் மட்டில் எழுதியிருக்கிறார். K.T. சிவகுருநாதன் ஐந்தும், M. அஷ்ரப்கான் மூன்றும்.

இக்காலகட்டத்தில் மலையக வழக்கில் எழுதும் ஒரே எழுத்தாளராக S.P. டக்ளசும், மற்றும் M. மாசிலாமணி, சித்திராஞ்சனி தேவதாசன், ஆனந்தராணி நாகேந்திரன், தும்பளையூர் கலையரசு, பளையூர் சுந்தரம்பிள்ளை, S.S. வேதவனம், S. நடராஜா, S. இளையதம்பி போன்ற புதியவர்களும் பிரவேசித்தமையானது குறிப்பிடத்தக்கதும் நம்பிக்கையூட்டுவதுமாயிருந்தது.

இதே காலப்பகுதியில் கல்விச் சேவையில் எஸ். கணேஸ்வரனின் தயாரிப்பில் பல்வேறுபட்ட வானொலி நாடகங்களும் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பாயின.

கா.சிவத்தம்பி, சி.வி.ராஜசுந்தரம், வீ.ஏ.சிவஞானம், ஏ.ஈ.மனோ


*எஸ். எழில்வேந்தன்*

கரன்,டேவிட் ராஜேந்திரன், எம். வாசுதேவன், எம்.சர்வானந்தா, ஞானசேகரன் போன்றோரும் அவ்வப்போது நாடகத் தயாரிப்பாளர்களாக இருந்துள்ளனர்.

30 நிமிட நாடகம், 15 நிமிட நாடகம், தொடர் நாடகம், 30 நிமிட நேர கதம்பம் 45 நிமிட அல்லது 1 மணிநேர நாடகம் - மாதமொருமுறை என்றிருந்த வானொலி நாடகங்கள் இன்று வாரத்துக்கு ஒரு அரைமணி நேர நாடகமும் இரண்டு வாரங்களுக்கொரு கதம்பமும் எனக் குறுகிவிட்டன. தமிழில் நாடகங்கள் இன்றும்கூட உயிர்ப்புடன் பயிலப்படுவது இலங்கை வானொலி ஊடகமொன்றில் மட்டுமே. சம்பந்தப்பட்டவர்கள் இவ்வுண்மையை மனதிற்கொண்டு அதைப் போற்றிப் பேணி வளர்ப்பது நம் மக்களுக்கும் நாடகக் கலைக்கும் செய்யும் பணியும் தார்மீகக் கடமையும் ஆகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1925ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் திகதி இலங்கையில் ஒலிபரப்புச் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது அப்போதிருந்த தந்திக் கந்தோரிலேயே இயங்கத் தொடங்கியது.

பின்னர் இடவசதியின்மை காரணத்தினால் தோர்ஸ்டன் றோட்டில் இருந்த பல்கலைக்கழகக் கல்லூரியின் ஓர் அறைக்கு மாற்றப்பட்டது.

இதன் பின்னர் கொழும்பு நகர் குண்டுவீச்சுக்கு இலக்கானபோது கொட்டா ரோட்டிலுள்ள ஒரு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. இங்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி ஒலிபரப்புகளும் ஒரே அலைவரிசையில் ஒலிபரப்பப்பட்டன.

1950ஆம் ஆண்டிலேயே 'ரேடியோ சிலோன்', இன்றிருக்கும் சுதந்திர சதுக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது. லண்டன் பீ.பீ.சி. யிலிருந்து அனுப்பப்பட்ட ஜோன் லாம்சன் இலங்கை வானொலியின் முதற் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

அந்தக் காலகட்டத்திலேயே மும்மொழிகளுக்கும் தனித்தனி அலைவரிசைகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பல நிரந்தர உத்தியோகத்தர்கள் இலங்கை வானொலியில் நியமனம் பெற்றார்கள்.

இவ்வாறு 1951ம் ஆண்டு தமிழ் வானொலி நாடகத் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டவரே எஸ். சண்முகநாதன் (சானா). அவர் காலத்திலிருந்து தான் இலங்கைத் தமிழ் வானொலி நாடகங்கள் வேரூன்றத் தொடங்கின. அதற்குமுன்னர் வானொலிநிலையத்தில் கடமையாற்றிவந்த சிலரால், சிறு வானொலி நாடகங்கள் பரீட்சார்த்த அடிப்படையில் ஒலிபரப்பப்பட்டு வந்தபோதிலும், தமிழ் வானொலி நாடகங்கள் பூரண உருப்பெறத் தொடங்கியது சண்முகநாதன் முதலாவது வானொலி நாடகத் தயாரிப்பாளராக நியமனம் பெற்ற பின்னர் தான் என்றே கூறவேண்டும்.

தொடர்ந்து இருபது வருடகாலமாக தமிழ் வானொலி நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றிய சண்முகநாதன் மிகவும் கண்டிப்பானவர். அது அவரது தொழிலுக்கு மிகவும் தேவைப்பட்டது.

அவர் நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றத் தொடங்கிய காலத்தில் ஒலிப்பதிவு நாடாக்கள் புழக்கத்தில் வரவில்லை. எனவே மற்றெல்லா வானொலி நிகழ்ச்சிகளையும் போல அப்போது நாடகங்களும் உடனுக்குடன்(Live Broadcast) ஒலிபரப்பப்பட்டு வந்தன.

எனவே வானொலி நாடகங்களில் நடிக்கும் நடிகர்கள் ஓரெழுத்தேனும் பிழைவிடமுடியாது. அத்துடன் ஒத்திகைகளின்போது நடித்தபடி நடிக்க வேண்டும். இல்லாது போனால், ஒத்திகைகளின் போது எடுத்த நேரத்தை விடக் கூடியோ குறைந்தோ போய்விடலாம்.

எனவே சண்முகநாதன் அவர்களின் வேலை, பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் செய்யப்படவேண்டியதொன்றாயிற்று.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகநாதன் அவர்களிடம், யாழ்ப்பாண மொழி வழக்கில் சீரியஸான வானொலி நாடகங்களைத் தயாரிக்க முடியாதென்ற கருத்து ஆழப்பதிந்திருந்தது.

அவ்வாறு அவர் கருதுவதற்குக் காரணமாக இருந்தது தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. 1940களிலும், 1950களிலும் வெளிவந்த அனேகமான தமிழ்த் திரைப்படங்கள், புராண இதிகாசங்களையும், ராஜா ராணிக் கதைகளையுமே கருப்பொருளாகக் கொண்டிருந்தமையால் இத் திரைக் கதைகளுக்கான உரையாடல்கள் யாவும் இலக்கணச் சுத்தமான தமிழிலேயே எழுதப்பட்டன. நகைச்சுவைக் காட்சிக-ளில் அவ்வப்போது பேச்சுவழக்குத் தமிழ் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்த நிலை டைரக்டர் ஸ்ரீதரின் 'கல்யாணப்பரிசு' வரை நீடித்தது என்றே கூறவேண்டும்.

இதனாலோ என்னவோ சண்முகநாதன் அவர்களும் இலக்கணச் சுத்தமான தமிழில் அல்லது இந்தியப் பேச்சுத் தமிழில் தான் சீரியஸான நாடகங்களை ஒலிபரப்பலாம் என்றும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழில் நகைச்சுவை நாடகங்களை மாத்திரமே ஒலிபரப்பலாமென்றும் அசைக்க முடியாத நம்பிக்கையோடு செயற்பட்டார்.

எனவே யாழ்ப்பாண மொழி வழக்கை நகைச்சுவை நாடகங்களுக்கும், இந்தியத்தமிழ் மொழி வழக்கை சீரியஸ் நாடகங்களுக்கும் பயன்படுத்தி வந்தார். அதனால் இந்தியத் தமிழ் மொழி வழக்கே அன்று இலங்கை வானொலி நாடகங்களில் கொடி கட்டிப் பறந்தது. தென்னிந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய வானொலி நாடகங்கள் சிலவும் இலங்கை வானொலியில் அப்போது ஒலிபரப்பப்பட்டன.

ஒலிப்பதிவு நாடாக்கள் புழக்கத்திலில்லாத அந்தக் காலகட்டத்தில், உடனுக்குடன் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள், எந்தவிதத் தடயங்களையும் விட்டுச் செல்லாது காற்றுடன் கலந்து விடுவதே இயற்கையாயிற்று. ஆனால் அதற்கு மாற்றீடாக, தயாரிப்பாளர்களினால் சிறந்த நிகழ்ச்சிகள் என்று கருதப்பட்டவை பெரிய இசைத்தட்டுக்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. இப்படி 1950களிலும் 1960களிலும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட சில நாடகங்கள் இன்றும் கூட்டுத்தாபனத்தில் உள்ளன. பெரும்பாலான இவ்வானொலி நாடகங்களின் தரம் அன்றைய தென்னிந்திய தமிழ் திரைப்படங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன என்றே கூறவேண்டும்.

இந்த வானொலி நாடகங்கள் ஆழமற்றவையாக, இலங்கை வாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, கேட்போர் மனங்களைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் பாங்கில் அமைந்திருந்தன. ஆனால் அவற்றின் செய்நேர்த்தி பாராட்டுக்குரியது.

எஸ்.சண்முகநாதன் 1973ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

**இலக்கிய ஜாம்பவான்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வோர் எவரும் வானொலி நாடகம் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை. இது ஏன் என்றுதான் புரியவில்லை. வானொலி நாடகமென்பது இலக்கியத் தரமற்றது, வெறும் பொழுதுபோக்கு என்று நினைத்துவிட்டதே இதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகநாதன் ஓய்வு பெறுவதற்கு ஓராண்டுக்கு முன்னரே நாடகங்களைத் தயாரிக்கும் பொறுப்பு, அப்போது நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகக் கடமையாற்றி வந்த கே.எம்.வாசகரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கே.எம். வாசகர், 1979 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று அமைப்பாளராக வானொலிப் பயிற்சி நிலையத்திற்கு கடமையாற்றச் சென்றதும், அப்போது வர்த்தக சேவையில் தயாரிப்பாளராக இருந்த பி.விக்னேஸ்வரன் வானொலி நாடகத் தயாரிப்பாளரானார். அவர் சுமார் இரண்டு வருடங்களே நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றினார். 1982ஆம் ஆண்டு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் திறந்து வைக்கப்பட்டபோது, விக்னேஸ்வரன் தயாரிப்பாளராக அங்கே போய் விட்டதால், வானொலி நாடகங்களைத் தயாரிப்பதற்கு ஒரு தயாரிப்பாளர் இல்லாத நிலை ஏற்பட்டது.

1982ஆம் ஆண்டு முதல், பல தயாரிப்பாளர்களும் அறிவிப்பாளர்களும் நாடகங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். இவர்களில் நானும் ஒருவன். 1984ம் ஆண்டு முதலாம்தர (Grade-1) அறிவிப்பாளனாகக் கடமையாற்றி வந்த என்னிடம் நாடகத் தயாரிப்பு ஒப்படைக்கப்பட்டது.

1983 கலவரங்களுக்குப் பின்னான காலகட்டத்தில் வானொலியில் நாடகங்களைத் தயாரிப்பது மிகவும் கஷ்டமான காரியமாகவே இருந்தது. வானொலி நாடக எழுத்தாளர்களின் பற்றாக்குறை, அனுபவம் வாய்ந்த கலைஞர்களின் பற்றாக்குறையென்று பல சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

1984ஆம் ஆண்டு வானொலி நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றத் தொடங்கிய நான், 1993ம் ஆண்டு வரை பல இன்னல்களுக்கு மத்தியில் கடமையாற்றினேன்.

இத்தனை இன்னல்களுக்கு நடுவிலும் வானொலி நாடக வளர்ச்சி குன்றவில்லையென்றே கூற வேண்டும். இந்தக் காலகட்டத்தில், பல நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதிக்குவித்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை அவர்கள், தான் எழுதிய நாடகங்களுக்கு இலக்கிய அந்தஸ்துக்கோரும் முயற்சியாக, தான் எழுதி ஒலிபரப்பப்பட்ட வானொலி நாடகங்களில் சிலவற்றை நூலுருவில் வெளியிட்டார்.

இவரைத்தொடர்ந்து, 'அகளங்கன்' என்ற புனைபெயரில் எழுதி வரும் நா.தர்மராஜா அவர்கள், தனது ஐந்து வானொலி நாடகப் பிரதிகளையும் நூலுருவில் வெளியிட்டார்.

அருணாசெல்லத்துரை அவர்கள், தான் எழுதி ஒலிபரப்பப்பட்ட வானொலி நாடகப் பிரதிகளையும் ஒலிபரப்பப்படாத பிரதிகளையும், தனது தொலைக்காட்சி நாடகப்பிரதியையும் நூலுருவில் வெளியிட்டார்.

இதேபோல் சேவை இரண்டில், தான் எழுதி ஒலிபரப்பப்பட்ட வானொலித் தொடர்நாடகப் பிரதியை நூலுருவில் எஸ்.எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) வெளியிட்டார்.

இப்படியாக எதிர்காலத்தில் வானொலி நாடகப்பிரதிகள் நூலுருப்பெற வேண்டும். இதனால் இனிவரும் காலங்களில் எழுத விரும்பும் இளம் எழுத்தாளர்களுக்கு அவை முன்மாதிரியாக அமையலாம்.

ஆனால் தமது வானொலிநாடகப்பிரதிகளை நூலுருவில் வெளியிட விரும்பும் எழுத்தாளர்கள். வானொலி நாடகத் தயாரிப்பின் போது வெட்டப்படும் வசனங்கள், புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் வசனங்கள், அல்லது நீக்கப்படும் ஒலிக்குறியீடுகள் முதலியவற்றையும் தமது பிரதிகளில் குறிப்பிட வேண்டும். அப்போதுதான் இந்த நூல்களினால் இளம் எழுத்தாளர் பயனடைய முடியும். அத்துடன் வாசிப்போர் மனங்களிலும் அவை வானொலி நாடகங்களாகப் பதிய வாய்ப்பேற்படும்.

**வாராவாரம் ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி நாடகங்களை பத்திரிகைகளில் விமர்சிக்க விமர்சகர்கள் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் வானொலி நாடகம் பற்றிய தெளிவானதொரு சிந்தனையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும்.**

இலங்கை வானொலி தேசிய சேவையில் நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டு வந்த காலத்தில், வர்த்தக சேவையிலும் பல நாடகங்கள், விளம்பரதாரர்கள் கிடைக்கும்போதெல்லாம் அவ்வப்போது ஒலிபரப்பப்பட்டு வந்தன. அத்துடன் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும் நாடகங்கள் வாராவாரம் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. இவை மட்டுமல்லாது, தேசிய சேவையில் ஒலிபரப்பாகி வரும் 'சிறுவர் மலர்', 'கதம்பம்', 'உரைச்சித்திரங்கள்' முதலிய நிகழ்ச்சிகளிலும் சிறு நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

வாராவாரம் ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி நாடகங்களை பத்திரிகைகளில் விமர்சிக்க விமர்சகர்கள் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் வானொலி நாடகம் பற்றிய தெளிவானதொரு சிந்தனையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும். எதிர்காலத்தில் தரமான வானொலி நாடகங்கள் உருப்பெறவும் இது ஏதுவாக இருக்கும்.

இதுவரை ஒலிபரப்பப்பட்ட வானொலி நாடகங்களின் தரம் பற்றி மதிப்பீடு செய்வது ஆய்வாளர்களின் கடமையாகும்.



அந்நாள் இலங்கை வானொலி நிலைய ஒலிபரப்புக் கலையகத்தில் ஜோர்ஜ் சந்திரசேகரன்

நாடகம் என்றால் முரண்பாடு. முரண்பாடு இல்லாமல் நாடகம் இல்லை. இது யாவரும் அறிந்ததே. இந்த முரண்பாடுகளை வகைப்படுத்திப் பார்ப்போம்.

அரசியல் முரண்பாடு, பாலுணர்வு முரண்பாடு, மதங்களுக்கிடையிலான முரண்பாடு, இனங்களுக்கிடையிலான முரண்பாடு என முக்கிய முரண்பாடுகளை வகைப்படுத்தலாம்.

ஆனால், இந்த முரண்பாடுகள் அனைத்தையும் வானொலி நாடகங்களில் உள்ளடக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை நமக்குண்டு. வானொலி நிலையம் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இயங்குவதாலும், இலங்கையில் பல இன மக்கள் வாழ்வதாலும், வானொலி ஒரு வெகுஜனத்தொடர்பு சாதனமாக இருப்பதாலும், இந்த முரண்பாடுகளில் ஒன்றையேனும் தொடுவதற்கு எழுத்தாளர்கள் பின்னிற்கிறார்கள்.

அப்படி அவர்கள் எழுதினாலும், வானொலி நிலையம் அதனை ஏற்றுக்கொள்வதில்லை. இதனால் தான் வானொலி நாடக எழுத்தாளர்கள் காதல் முரண்பாடு, சீதன முரண்பாடென்று அரைத்த மாவையே அரைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இதனையும் மீறி இந்த முக்கிய முரண்பாடுகளில் ஒன்றிரண்டை நாசூக்காகத் தொட்டுச்சென்ற எழுத்தாளர்களும் இல்லாமலில்லை. இவர்கள் எழுதிய நாடகங்கள் வெகுசில ஒலிபரப்பாகியுள்ளன. இந்த முரண்பாடுகளைத் தொட்டு எழுதுவதற்கு புத்திக் கூர்மை வாய்ந்த எழுத்தாளர்கள் அவசியம். அத்துடன் அவற்றைத் தயாரிப்பதற்கு நடுநிலை நழுவாத தயாரிப்பாளர்களும் அவசியம்.

எதிர்காலத்திலாவது இப்படியான எழுத்தாளர்களும், தயாரிப்பாளர்களும் உருவாகவேண்டும். அப்போதுதான் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள் முதிர்ச்சி பெறமுடியும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம் பரிசுக் கதை**



இவர்கள் எல்லோரும் கடவுளாக இருக்க ஆசைப்படுகிறார்கள். எனக்கு கடவுளாக இருக்க வேண்டும் என்ற ஆசை இப்போது அறவே இல்லாமற் போய்விட்டது. ஒரு காலத்தில் நானும் கடவுளாக இருந்தவன்தான். அதுவும் சங்காரம் செய்யும் கடவுளாக இருந்திருக்கிறேன். என் பெயரைக் கேட்டாலே எல்லோரும் கைகட்டி வாய் பொத்தி நின்றார்கள்.

எவருக்கும் என்னையோ, என்னைச் சார்ந்த கூட்டத்தையோ எதிர்க்கும் வல்லமை அப்போதுமில்லை. இப்போதுமில்லை!.... தவிரவும் அவர்கள் கேள்வி கேட்காமல் இருப்பதையும் சுயமாகச் சிந்திக்காமல் இருப்பதையும் நாங்கள் கடவுள்களாக இருப்பதற்குரிய அடிப்படைகளாக வகுத்துக் கொண்டோம். இதனால் அவர்கள் எம்மை எதிர்த்து வினா எழுப்பாதவகையிலும், சுயமாகச் சிந்திக்கத் தலைப்படாத வகையிலும் நாங்கள் நடந்து கொண்டோம்.

அதைமீறியும் எவராவது எதிர்ப்புக்குரல் எழுப்பினால் அல்லது சுயமாகச் சிந்தித்து செயற்பட்டால் கடவுளரை நிந்தித்தவர் என இனங்காணப்பட்டு 'துரோகி' என்ற முத்திரையோடு தண்டிக்கப்படுவர். நான்கூட இதுவரை எத்தனை துரோகிகளைத் தண்டித்திருக்கிறேன். தண்டனை என்பது எங்கள் வார்த்தையில் எங்கள் முழுமுதற் தலைமைக் கடவுளுக்கு நரபலி கொடுத்தல் என்றே பொருள் கொள்ளப்படும்.

நான் தண்டித்தவர்கள் எவரும் என்னால் துரோகிகளாக இனங்காணப்பட்டவர்கள் அல்ல. எங்கள் எல்லோருக்கும் முழுமுதற் கடவுளாக இருக்க விருப்பப்பட்டவரால் துரோகிகளாக இனங்காணப்பட்டவர்களே.

எங்களது முழுமுதற் கடவுள் என போற்றப்பட்டவர் துரோகிகள் என்போரை பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தியிருந்தார்.

''எமது செயற்பாடுகள்பற்றி கேள்வி கேட்பவர்கள், எமது செயற்பாடுகள் தவறானவை என வாதிப்பவர்கள், எமது செயற்பாடுகளை எதிர்க்கத்துணிந்தவர்கள், எமக்கு எதிரானவர்களோடு கதைப்பவர்கள்; உறவு வைத்திருப்பவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் துரோகிகளாக இனங்காணப்படுவர்''

இத்துடன் துரோகிகளுக்கான தண்டனைக் கோவையும் அவரே யாத்திருந்தார். ''துரோகிகள் என சரியான முறையில் இனங்காணப்பட்டவர் எவராக இருப்பினும் அவர்களுக்குரிய ஒரேயொரு தண்டனை மரணதண்டனை மாத்திரமே''. இதுவே தண்டனைக் கோவையின் உள்ளடக்கமாக இருந்தது.

நானும் என் போன்றவர்களும் துரோகிகள் என்பதற்கான வரைவிலக்கணத்தையும் தண்டனைக் கோவையின் உள்ளடக்கத்தையும் எப்போதும் நினைவில் வைத்து தேவையான சந்தர்ப்பங்களில் சிரமேற்கொண்டு செயற்பட வேண்டியவர்களாய் இருந்தோம்.

***''நாளை மாலை 5.00 மணிக்கு அரசடி வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு வரும் 'அ' என்ற பெயருடைய துரோகிக்குத் தண்டனை வழங்கவும்''.*** எனக்கு தகவல் வந்திருந்தது.

அதுதான் எனது முதல் தண்டனை வழங்கல் அனுபவம். என் உடல் மெல்ல நடுங்கிற்று. எனது பொறுப்பை இன்னொருவனை ஏற்கும்படி கேட்டுக்கொண்டேன்.

அவன் சொன்னான்:

''உனக்கிடப்பட்ட பணி உன்னாலேயே நிறைவேற்றப்படல் வேண்டும். தவிரவும், துரோகிகளுக்குத் தண்டனை வழங்கும் பணி எல்லோருக்கும் இலகுவில் வழங்கப்படுவதில்லை....

இவ்விதம் உனக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை முழுமுதற் கடவுளாக இருப்பவர் உன் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்து விட்டதையும் உன்னை ஒரு வைரவராகவோ, முதலியாகவோ, அண்ணமாராகவோ அல்லது இவர் போன்ற சிறுகடவுளராகவோ இருப்பதற்கு அனுமதிக்கத் தீர்மானித்து விட்டார் என்பதையே காட்டுகின்றது.''

அவனது வார்த்தைகள் என்னை வேகப் பொருளாக்கின.

'வைரவரா'கவோ, 'முதலி'யாகவோ, அண்ணமாராகவோ அல்லது இவர் போன்ற சிறுகடவுளராகவோ இருப்பதற்கான ஆசை என்னுள் துளிர்விட்டு பின்னர் மெல்ல மெல்ல என்னைச் சிதைத்து பூதமாக உருவெடுத்து என்னைத் தன்னுள் விழுங்கி நின்றது.

அப்போது நான் யாரெனக் கேட்டேன்.

அமுது
NIPU
படைப்பாற்றல் போட்டி!
ரூபா 5,000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




''நீ சிறுகடவுள். முழுமுதற் கடவுளுக்கு அடுத்தபடியாக சர்வ வல்லமை படைத்தவன்'' என்று என்னை விழுங்கி நின்ற பூதத்திடமிருந்து பதில் வந்தது.

திடீரென என் கபாலத்தின் இரு புறத்திலிருந்தும் கொம்புகள் முளைத்தன. பற்கள் வெளித்தள்ளின. கண்கள் விரிந்தன. நான் சிரித்தேன்.

''ஆகா... ஆஹாஹ்கா.....''

என் சிரிப்பு என்னைக் கம்பீரப்படுத்திற்று. ஆயுதம் தரித்தேன். கடவுளரை நிந்திப்பவர் உயிர்குடிக்க உறுதி பூண்டேன். விரைந்து புறப்பட்டேன் என் முதலாவது பலியெடுத்தலுக்காக.

அவனைக் கண்டதும் என் கண்கள் சிவந்ன. மூச்சு அனலக்கி வெளிப்பட்டது.

'அடே! அற்பனே சர்வவல்லமை பொருந்திய கடவுளராகிய எங்களை நிந்திக்கத் துணிந்து விட்ட உனக்கு மன்னிப்பே கிடையாது..!' பற்களை நெறுமியபடியே ஆயுதத்தின் விசையைப் பலமாக அழுத்தினேன்.

துடித்துக்கொண்டு 'தொப்' என விழுந்தான் துரோகி. அவன் இரத்தம் எங்கும் சிதறியது.

நான் ஆயுதத்தைத் தூக்கிக்கொண்டு கம்பீரமாக நடந்தேன்.

எனக்கிடப்பட்ட கட்டளையை பிசகின்றி நிறைவேற்றியதற்காக முழுமுதற் கடவுளே என்னைச் சந்திக்க வந்தார்.

''என் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு நீதான் சரியான ஆள்!''

என்னை வாழ்த்திய கடவுளை நிமிர்ந்து பார்த்தேன். அவருக்கு என்னைவிட நீண்ட கொம்புகள் இருந்தன. கிரீடம் அணிந்திருந்தார். அவரைச் சுற்றி ஒளிவட்டம் இருந்தது. நான் மெய்மறந்து நின்றேன்.

அவரே தொடர்ந்து பேசினார்.

''கடவுளா'க இருக்க வேண்டுமாயின் நமக்கெதிரான எந்த நடவடிக்கைகளையும் முளையிலேயே இனங்கண்டு களைந்துவிடல் வேண்டும். எதையும் வளரவிட்டால் அழிப்பதென்பது கடினமாக காரியம்...

அதனால் நாம் ஒவ்வொருவரும் துரோகிகளை இனங்கண்டு தண்டனை வழங்குவதில் கருத்தாக இருக்க வேண்டும்...''

நான் பலமாகத் தலையாட்டினேன்.

என்னோடு கூடியிருந்தவர்களும் தலையாட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் கடவுள் என்னைச் சந்திக்க வந்ததில் பெரும் வியப்பு. கடவுள் திடீரென மறைந்துவிட்டார்.

அன்றிலிருந்து நான் சிறுதெய்வமானேன். என்னுடன் கூட இருந்தவர்கள் எல்லோரும் என்னைக் கைகூப்பி வணங்க வேண்டுமென விரும்பினேன். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் சிறுதெய்வமாகிவிடும் வெறி மேலோங்கி நின்றது.

என்னோடு இருந்தவர்கள் ஒவ்வொருவரும் துரோகிகளைத் தண்டிக்கும் கட்டளைகளுக்காகக் காத்திருந்தனர்.

ஆனால் துரோகிகளைத் தண்டிப்பதற்கான கட்டளைகள் எனக்கே வந்தவண்ணமிருந்தன.

கட்டளைகள் கிடைக்கப்பெற்ற போதெல்லாம் தயக்கமின்றி துரோகிகளை வேட்டையாடக்கூடியவனாக நான் மாறிப்போயிருந்தேன். தவிரவும் துரோகிகளை வேட்டையாடிவரும் போதெல்லாம் முழுமுதற் கடவுளால் வெகுவாகப் பாராட்டப்பட்டேன்.

துரோகிகளை அழித்தலைவிட மேலும் பிரத்தியேகமானதொரு பணி என்னிடம் முழுமுதற் கடவுளால் ஒப்படைக்கப்பட்டது. அது 'துரோகிகளைச் சித்திரவதை செய்தல்' என்பதாகும். அந்தப் பணியையும் நான் எதுவித தயக்கமும் இன்றி ஏற்றுக் கொண்டேன்.

துரோகிகளை அழித்தல் என்பதில் எவ்விதம் ஆண், பெண், முதுமை போன்ற பாகுபாடில்லையோ அதேபோல் துரோகிகளைச் சித்திரவதை செய்வதிலும் இத்தகைய பாகுபாடில்லை.

அப்போது துரோகிகளை வேட்டையாடுவதைக் காட்டிலும் அவர்களை சித்திரவதைக்குள்ளாக்குதல் என்பது எனக்கு ஆர்வம் தருவதாக இருந்தது.

சித்திரவதைகளின் போதென்றால்,

மண்டையுடையும், கைகால்கள் முறியும், ஆண்குறி நசுங்கும், முலைகளைப் பிடுங்கலாம் திருகலாம், யோனிக்குள் பெற்றோலை அடித்துத் துடிப்பதைப் பார்க்கலாம். மீசை, தாடி, கூந்தல் மற்றும் உரோமம் உள்ள இடங்களையெல்லாம் பிடுங்கிப் பார்க்கலாம். இப்படி இன்னும் பல புதுப்புது ஆராய்ச்சிகள்...

எல்லாவற்றையும் எழுதிக் கொண்டிருக்க முடியாது.

சித்திரவதை மேற்கொள்ளும்போது சிலர் இறந்தும் போவார்கள். இறந்துபோனவர்கள் இரவோடிரவாக பாய்களில் வைத்து சுற்றிக் கட்டப்பட்டு ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் புதைக்க வேண்டும்.

இறந்து போனவர்களைத் தேடி எவரும் வரமாட்டார்கள். அதையும் மீறி எவராவது வந்தால் அவர்களுக்கும் இதே நிலைமையே ஏற்படும் என்பதை எல்லோரும் அறிந்திருந்தார்கள்.

இதனால் நானும் என்னுடன் இருந்தவர்களும் தொடர்ந்தும் கடவுளர்களாகவே இருக்க முடியும் என்றே நம்பினோம்.

ஆனால் காலப்போக்கில் எனக்கிருந்த நம்பிக்கை குறைந்துவிட்டது. அவர்கள் இன்னமும் நம்பிக்கை வற்றாதவர்களாகவே இருக்கிறார்கள். என் சிந்தனையோட்டத்தில் அவர்களுக்கும் எனக்குமிடையிலான விலகலுக்கான காரணத்தைத் தெளிவாக உணரமுடிந்தது. நான் சுயமாக சிந்திக்க ஆரம்பித்திருக்கிறேன். என்னாலும் இவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு செயலுக்கும் அர்த்தம் தேடுவதில் முயன்று கொண்டிருக்கிறேன்.

இப்போதெல்லாம் என் மனதில் சில புறக்கணிக்கமுடியாத வினாக்களின் - தோற்றப்பாட்டினை உணரக்கூடியவனாக இருக்கிறேன்.

''இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஆயுதமேந்திய கடவுளராக இருக்க முடியும்?''

''என் எதிர்காலம் எவ்வாறிருக்கப் போகிறது?''

''எனதிந்த வாழ்க்கை, பிறரையும் அழித்து என்னையும் அழித்துக் கொள்வதற்காகவா?''

''இவர்கள் எல்லோரும் எப்போது சுயமாக சிந்திக்கப் போகிறார்கள்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சில தினங்களுக்கு முன் எனக்கு துரோகிகளை தண்டிப்பதற்கான கட்டளை ஒன்று வந்திருந்தது. கட்டளையைப் பார்த்து நான் பதறிப்போய்விட்டேன். அது எனக்கே புதிய அனுபவமாக இருந்தது. ஒருபோதும் நான் இவ்விதம் பதறியவனல்ல. ஆனால் இந்தக் கட்டளையில் இருந்தவரை பெயரை வாசித்தபோது நான் உண்மையில் நிலைகுலைந்து போனேன்.

என்னால் நிச்சயமாக அக்கட்டளையை நிறைவேற்ற முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டேன்.

அக்கட்டளையின்படி தண்டனை நிறைவேற்ற வேண்டியதினம் நேற்று நண்பகல் 12.00 மணி. ஆனால் இன்று நண்பகல் 12.00 தாண்டியும் நான் அசைவற்ற பொருளாக இருந்தேன்.

நான் இருந்த இடம் நோக்கி இருவர் வருகின்றனர். இருவரையும் உன்னிப்பாகக் கவனிக்கிறேன். ஒருவன் எனக்கு நன்கு பழக்கமானவன். மற்றவன் எனக்கு சற்றும் பழக்கமில்லாத புதியவன்.

அவர்கள் என்னை ஒரு அந்நியன்போல் உற்றுநோக்குவதை நான் உணரக்கூடியவ-னாக இருக்கிறேன்.

எனக்கு நன்கு பழக்கமானவன் என்மீது சீற்றங்கொண்டவனாய் வினா எழுப்புகிறான். "நீ நேற்று நிறைவேற்றவேண்டிய கட்டளையை ஏன் நிறைவேற்றவில்லை?"

"அந்தக் கட்டளையை என்னால் நிறைவேற்ற முடியாது" உறுதியாகச் சொல்கிறேன்.

"ஏன் உன்னால் நிறைவேற்ற முடியாது? முழுமுதற் கடவுளாக இருப்பவரால் அனுப்பப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்ட துரோகியை தண்டிக்க மறுப்பது துரோகச் செயல் என்பது உனக்கு தெரியுமல்லவா?"

என்னால் விரக்தியோடு சிரிப்பதைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. நான் என் விதியை நொந்து கொள்பவனானேன்.

என் வயதையொத்தவர்கள் எத்தனைபேர் இன்று வெளிநாடுகளில் நிம்மதியான, வசதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் கண்மூடித்தனமான, அர்த்தமற்ற கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவனாகி எனது எதிர்காலத்தைப் பாழடித்தவனாக, சுதந்திரச் செயற்பாடற்றவனாக, சுய சிந்தனையற்றவனாக இருந்திருக்கிறேன். இனிமேலும் என்னால் இவ்விதம் இருக்க முடியாது...!"

"நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் சிரித்துக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்." அவன் என்னை அதட்டுகிறான்.

"நடந்தவற்றை மறந்துவிட்டாயா? நீயும் நானும் இன்னும் சிலரும் எதிரிகளால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது எங்களைக் காப்பாற்றியவர் அவர். அவரை எப்படி?" நான் அவனிடம் புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சித்தேன்.

அவன் சீறினான் - "அந்த மனிதன் ஒரு மருத்துவர் என்ற ரீதியில் தனது கடமையைத்தான் செய்திருக்கிறான். ஆனால் நீ ஒரு கொள்கைவாதி என்ற ரீதியில் உனது கடமையாகிய துரோகியைத் தண்டித்தல் என்பதைச் செய்யத்தவறிவிட்டாய்...

இவனைப்பார்! முழுமுதற்கடவுளாக இருப்பவரால் துரோகியாக - இனங்காணப்பட்ட இவனது தந்தையையே தண்டித்தவன். நீயெல்லாம்..." தன்னுடன் நின்றிருந்த அந்தப் புதியவனைச் சுட்டிக்காட்டியபடியே சொன்னான்.

"இன்று மாலை 5.00 மணிக்கு முழுமுதற் கடவுளாக இருப்பவர் உன்னை அழைத்துவரச் சொன்னார். புறப்படத்தயாராக இரு"

அவனது வார்த்தைகள் என் முடிவு தீர்மானிக்கப்பட்டுவிட்டதை உணர்த்தின. ஆனால் நான் எதுவும் செய்யமுடியாதவனாக இருக்கிறேன்.

நான் மட்டுமல்ல என்போன்றவர்கள் எல்லோரும் சுயசிந்தனைக்குட்படும்போது அவர்களின் முடிவு தீர்மானிக்கப்படும். அவர்களால் எதுவும் செய்ய முடியாது.

## ஆம்... பெண்கள்..!

...திடீரென்று எழுந்து தீவிரத்துடன் அவள் மீது பரவினான். அவள் உடலின் மெல்லிய வெப்பம் பரவிய வளைவுகளுக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டான். மீண்டும் கருவறை புகுதல். சதையான ஒரு கோட்டைக்குள் ஆனந்தமான நித்திரை. மீண்டும் மீண்டும். உடல் எவ்வளவு பெரிய தடை. தடையல்ல இது. இதுவே ஊடகம். எல்லா ஊடகங்களுக்கும் தடை உண்டு. ஓர் எல்லை வரைதான் அவை கடத்தும். பின் இறுகித் தடையாக ஆகும். பெண்ணின் உடல் கருணையால் ஆக்கப்பட்டிருக்கிறது. அழுத்தமான திரண்ட தொடைகள், நடுவே யோனியின் வற்றாத கருணை. அதன் முடிவற்ற சிருஷ்டிகரம். இந்த மார்பகங்கள்தாம் எத்தனை மகத்தான உறுப்புகள். ஆத்மாவில் பொங்கும் கருணையை பௌதீகமாக வெளியேற்றும் ஊற்றுகள். மென்மையாக உயிர்த்துடிப்புடன் பிறரை அவள் அதில் அணைத்துக் கொள்ளலாம். ஏன் இவ்வுறுப்புகள் ஆணுக்கு இல்லை? கோட்டை மதில்போல தட்டையான மார்பு. வெறியெழுந்ததும் தாக்கத் துடிக்கும், ஊடுருவத் துடிக்கும் ஆண்குறி. பெண்கள் நடத்த வேண்டும் புரட்சியை. அது இடித்துத் தள்ளாது. கட்டி எழுப்பாது. பிறிதின் சாரத்தை உண்டு தன்னுள்ளிருந்து உதிரமும் உயிரும் தந்து புதிய ஒன்றை பிறக்க வைக்கும். ஆம்... பெண்கள்...

*- 'பின்தொடரும் நிழலின் குரல்' நாவலில்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் இருவர் ஓடும் ரெயிலில் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றனர். ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி காட்டுத்தீயையும் விட வேகமாக தலவாக்கலை எங்கும் பரவியபோது பாடசாலை ஆடித்தான் நின்றது.

எம். எச். பதி-யுஸ்-ஸமான்

## தீர்ப்புகள் திருத்தப்படவேண்டும்

பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள் தலவாக்கலைக்குப் படையெடுக்க ஆரம்பித்தனர். பாடசாலையில் பாலியல் துஷ்பிரயோகம். அதனை மாணவர்கள் தட்டிக் கேட்கப் போனதே தற்கொலைக்குக் காரணம் என்று தலைப்புச் செய்திகள்.

ஆசிரியர்கள் மிருகத்தனமாக மாணவர்களை தாக்கியதே தற்கொலையில் முடிந்தது என்று ஒரு கதை.

உப அதிபரின் கையாலாகாத்தனமே கட்டுமீறிப்போய் அநியாயமாக மாணவனின் உயிரைப் பலியெடுத்துவிட்டது என்று ஓர் அலசல்.

தலவாக்கலை தமிழ் வித்தியாலயத்தில் தற்கொலை வரிசையில் இது நான்காவது என்று ஓர் ஆய்வு.

அரசியல் பாடசாலையில் புகுந்து விளையாடியதற்கு இத் தற்கொலையே ஆதாரம் என்று ஒரு கண்டுபிடிப்பு.

உண்மையில் அங்கு என்ன நடந்தது?

பத்திரிகைகாரர்கள் என்றாலே சீறிப்பாயும் அதிபர் ஆர்.கே. துரைராஜா அமைதியாக சம்பவம் பற்றி கூறுகிறார்.

அன்று 23ம் திகதி. பாடசாலைக்குச் சென்றபோது அங்கு பதற்றம் நிலவியதை அவதானித்தேன். பாடசாலை சுவர்களில் தீந்தையினாலும், கோழிச் சாயத்தினாலும் சகல ஆசிரிய, ஆசிரியைகளையும் என்னையும் சம்பந்தப்படுத்தி சுலோகங்கள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன்.

வெளியார் எவரேனும் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் முதலில் எனக்கேற்பட்டது. A/L வர்த்தக, கலை மாணவர்கள் செய்திருக்கலாம் என்றும் எண்ணினேன். ஏனெனில் அவர்கள் அவ்வளவு குழப்படி. விஞ்ஞான மாணவர்கள் அமைதியானவர்கள். அவர்கள் மீது எனக்கு சந்தேகம் எழவில்லை. உடனே டிசிப்ளின் கொமிட்டியை அழைத்து எழுதியவர்களை கண்டுபிடிக்குமாறு கூறினேன்.

அப்போது அங்குவந்த வாட்ச்மேன் ரொஸரி (அவரைப் பற்றியும் சுலோகங்களில் குறிப்பிடப்பட்டிருந்தன) பக்கத்தில் மாணவர்கள் தங்கிப் படிப்பதால் தனக்கு சந்தேகமாக இருப்பதாக தெரிவித்தார்.

அந்த மாணவர்களை அழைத்து விசாரித்தபோது தமக்கு எதுவுமே தெரியாது என்று கையை விரித்து விட்டார்கள்.

அப்போது டிசிப்ளின் குழுவைச் சேர்ந்த சிவகுமார், செல்வதுரை, விஜயகுமார் மூவரும் மூன்று மாணவர்களின் மீது சந்தேகம் இருக்கின்றது அவர்களின் கைகளில் தீந்தை கோழிச் சாயம் பட்ட அடையாளம் இருக்கு. அதை மறைக்க ஐந்து விரல்களுக்கும் பிளாஸ்டர் ஒட்டியிருக்கிறார்கள் என்று கூறவே நான் அவர்களை அழைத்து வருமாறு கூறினேன்.

நவகாந்தன், மதன், குசலராஜா ஆகிய அந்த மூவரும் தாமே எழுதியதாக ஒப்புக்கொண்டார்கள். தம்முடன் இளைய கண்ணாவும் ஜெயகிருஷ்ணாவும் சேர்ந்தே எழுதியதாக இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவருமே காட்டித்தந்தனர். இன்னும் சிலர் இருப்பதாக முதலில் கூறிவிட்டு, பின்னர் மறுத்துவிட்டனர். அவர்கள் இருவர்மீதும் எனக்கோ ஆசிரியர்களுக்கோ சந்தேகமே ஏற்பட்டிருக்கவில்லை.



பாடசாலை அதிபர் ஆர்.கே.துரைராஜா

சுலோகங்களில் எல்லா ஆசிரியர்களைப் பற்றியும் தரக்குறைவாக கேவலமாக எழுதப் பட்டிருந்தது. சில ஆசிரியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் காதல் என்றும் வேறும் பல ஏசியும் எழுதப்பட்டிருந்தது.

யாரையும் யாராலும் கட்டுப்படுத்த முடியாத நிலை. தப்பித்தவறி ஆசிரியர்கள் கையை நீட்டிவிட்டால் அவர்களோடு நானும் கம்பியெண்ண வேண்டி வரும் என்று எண்ணினேன்: என்னை சீவன் இல்லாதவன், ஆக்ஷன் எடுக்கத்தெரியாதவர் என்று குறை சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதில் வெளியார் தலையீடும் இருப்பதாக எனக்கு சந்தேகம் ஏற்பட்டதால் என்னால்மட்டும் தீர்த்துவிட முடியும் என்று நான் கருதவில்லை.

ஆசிரியர்கள் வேறு தமது மானம், மரியாதை எல்லாம் போய்விட்டதாகவும், இவர்களின் மீது மானநஷ்ட வழக்கு போட இருப்பதாகவும் அதற்கு பொலீஸ் அறிக்கை தேவைப்படும் எனவே இவர்களை பொலீஸில் ஒப்படையுங்கள் என்றும் என்னை வற்புறுத்தினர்.

இரண்டு வருடங்களுக்கு முன், முன்னாள் அதிபர் இருந்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்து டிசிப்ளின் குழு விசாரித்து சுமுகமாக தீர்த்து வைத்த பின்னர் அந்த மாணவர்கள் பொலீஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்து அந்த ஆசிரியர்களையே கைதுசெய்யப்போனார்கள்.

அண்மையில் பக்கத்திலுள்ள மெராயா தமிழ் வித்தியாலயத்தில் ஒரு மாணவி தொடர்பான பிரச்சினையில், ஏன் மாணவியை பொலீஸில் ஒப்படைக்கவில்லை என்றே பெற்றோர்கள் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த கொந்தளிப்பான சூழ்நிலையில் மாணவர்களைப் பாதுகாப்பதற்கும், ஆசிரியர்கள் அநாவசிய சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளாமலிருப்பதற்கும் ஒரே வழி பொலீஸாரின் உதவியை நாடுவதே என்று தீர்மானித்தேன்.

முதலில் திருச்செல்வத்தையும், விஜயசுரேஷையும் பொலீஸாரை வந்து பார்க்கச் சொல்லுமாறு அனுப்பினேன். பொலீஸார் முறைப்பாடு எதுவும் பதிவு செய்யாமல் வர முடியாது எனச் சொல்லி விட்டார்களாம். எனவே அவர்கள் வேறுவழியில்லாமல் முறைப்பாட்டை பதிவு செய்துவிட்டு பொலீஸாருடன் வந்தார்கள். பொலீஸார் பாடசாலையைச் சுற்றிப்பார்த்து விட்டு மூன்று பேரிடமும் கேட்டபோது அவர்கள் தாம்தான் செய்ததாக ஒப்புக்கொண்டார்கள்.

இம்மூவருமே படுக்கையிலிருந்த மற்ற இருவரையும் எழுப்பி அழைத்து வந்தனர். பாடசாலைக்கு மீண்டும் வந்த பொலிஸார் ஐந்து மாணவர்களையும் பொலிஸ் ஜீப்பில் ஏற்றி பொலிசுக்கு கொண்டு செல்லப்போவதாக கூறினர்.

அதனை மறுத்ததுடன் நானே அழைத்து வருவதாக ஏற்றுக்கொண்டு வாடகை வேன் ஒன்றில் நானும் ஐந்து மாணவர்களும் சுரேஷும், திருச்செல்வமும் தலவாக்கலை பொலீஸ் நிலையத்திற்குச் சென்றோம்.

பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரித்தபோது அவர்கள் தாமே சுலோகங்களை எழுதியதாகவும் ஒப்புக்கொண்டனர்.



பாடசாலைச் சுவர்களில் எழுதப்பட்ட சுலோகங்கள்.. உதாரணத்திற்கு சில...



துரைராஜே, பள்ளிக்கூட பணத்தை திருடாதே!
கண்டீனில் சிகரட் விற்காதே!
ஜயந்தி, ஸ்கூல் சாமான்களை வீட்டுக்கு கொண்டு செல்லாதே!
இந்த ரூமில் அநாவசியமான செயல்களை செய்கிறாய் சுரேஷ்!
தனபால் முதல் டிரெக்டர் வரையிலும் புகைக்கிறார்கள்1
சுரேஷ்-நிருபா காதல்!
மாணவியரை ஸ்டேஷன் மாஸ்டருக்கு கூட்டிக் கொடுக்காதே!
மத்தியூ, பாடசாலை சாமான்களை வீட்டுக்கு கொண்டு போகாதே!
கம்பியூட்டர்களை மாணவர்களுக்கு கொடு!
டீச்சர் சாரி கலர் கலராக உடுக்காதே!
சூரி-வேணுகோபால் பெண்டாட்டிச் சண்டை!
ரொஸரி ஒழுங்கா காவல் பாருடா!
செல்லத்துரை நீயும் திருந்துடா!
சன்+கல்யாணி காதல்!
வேணு+சூரி=விஜயசுரேஷ் காசுவாங்கி கம்பியூட்டர்வகுப்பு நடத்தாதே!
ஆசிரியர் முதல் அதிபர் வரை புகைபிடிக்காதே!
விஜயசுரேஷ், ஸ்போட்ஸ் சாமான்கள் எங்கே!

திருச்செல்வம் மாணவிகளை அம்மா என்று அழைக்காதே!
மயில், விவசாயப் பொருட்கள் எங்கே?
துரைராஜா திருடன்!
ஸ்போர்ட்ஸ் ரூமை கிளப் ஆக்காதே!
நிருபமாவின் கற்பை சுரேஷிடமிருந்து காப்பாற்று!
திருச்செல்வம் பெட்டையன்!
அதிபர் நாயே! உனக்கு பாடசாலை லாயக்கு இல்லை!
மத்தியூ பாடசாலை சாமான்களை கொள்ளையடிக்கிறான்!
கற்பிக்க வந்தாயா? கற்பழிக்க வந்தாயா?
கொலை வெறி பிடித்த விஜயகுமார்!
டீச்சர்ஸ் கி.்.ப்ட் கணக்கை காட்டு!
மாணவிகளை தனிப்பட்ட டியூஷனுக்கு கொண்டு போகாதே!
டியூஷன் எடுக்கச் சொல்லி வற்புறுத்தாதே!
மாணவர்களுக்கு தூஷணம் சொல்லி உதைக்காதே!
பாடசாலையினுள் சாராயம் குடிக்காதே!
மலசலகூடம் கட்ட எடுத்த பணம் எங்கே?
அடையாள அட்டைக்காக எடுத்த 125/- எங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி, எப்போது, சம்பந்தப்பட்டவர்கள் யார் என்ற விபரங்களையும் தெரிவித்தனர். என்னிடமும் ஏனைய ஆசிரியர்களினதும் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டனர்.

அதன் பின்னர் பொலிஸ் அதிபர், நாம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவா, பெற்றோரை அழைத்து நீங்களாகவே சுமுகமாக தீர்த்துக்கொள்கிறீர்களா? என்று கேட்டார். சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம். புத்திமதி கூறி எம்மோடு அனுப்பி வைத்தால் போதும் நாம் பெற்றோரை வரவழைத்து சுமுகமாக முடித்துக் கொள்கின்றோம் என்று கூறி வேனிலேயே பாடசாலைக்கு மாணவர்களை அழைத்துவந்தேன்.

அவர்களுக்கு சில அறிவுரைகளை வழங்கி, நாளை பெற்றோரை அழைத்துவந்து லீவிங் சேர்ட்டிபிகேட், அட்மிஷன் கார்ட் என்பவற்றை வாங்கிச் செல்லுமாறும் கூறினேன்.

அப்போது சூரியகுமார் நவகாந்தனின் கழுத்தைப் பிடிக்கப் போனார். விஜயசுரேஷ் அடிக்க கையை ஓங்கினார். சிவகுமார் என்னைப்பற்றி ஏன் எழுதினாய் என்று கேட்டார். வேறு ஆசிரியர்களும் கேள்விகேட்க ஆரம்பித்தனர். பொலீஸ் விசாரணை நடைபெற்று மன்னிப்பும் கேட்டிருக்கிறார்கள், கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள் என்று ஆசிரியர்களுக்கு ஏசினேன்.

இதற்கு முன்னரும் ராகிங் பிரச்சினையில் நவகாந்தன், ஜெயகிருஷ்ணா, மதன் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு வந்ததால் விசாரணை நடத்தி எச்சரித்திருந்தோம்.

இந்த ஐந்து மாணவர்களும் போர்டிங் வீடுகளில் தங்கிப் படிப்பவர்கள். மூவர் பாடசாலைக்குப் பக்கத்திலும் ஏனைய இளையகண்ணனும் ஜெயகிருஷ்ணாவும் தேவசிரிபுரவிலும் இருப்பவர்கள்.

இதற்குமுன் தொடராகப் பல தற்கொலைகள் இடம்பெற்றதாகக் கூறப்படுவது அபாண்டமானது. அவை பாடசாலையுடன் சம்பந்தப்பட்டிருந்தால் தப்பிவிடமுடியுமா? விஷயம் பொலீஸுக்கு போயிருக்கும். கல்வித்திணைக்களம், கல்வி அமைச்சருக்கு போயிருக்கும். தலை போயிருக்குமே?

பாடசாலையிலுள்ள டிசிப்ளின் குழுவிலுள்ள ஐந்து ஆசிரியர்களுமே திறமைசாலிகள், பாடசாலை நலனிலும் பிள்ளைகளின் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். அவர்களது பாடங்களில் மாணவர்கள் அதிக புள்ளிகள் பெற்றுள்ளனர்.

மாணவர்களின் ஒழுக்கத்தில் நன்னடத்தையில் இறுக்கமாக நடந்து கொண்டதால் தான் மாணவர்களுக்கும் இவர்களுக்கும் முறுகல்நிலை உருவாகியிருக்கின்றது என்று கருதுகின்றேன். இதுதான் முதல்நாள் பாடசாலையில் நடந்த சம்பவம் என்று கூறினார் அதிபர்.


இளையகண்ணன்


சேதமாக்கப்பட்ட வகுப்பறை

இச்சம்பவம் நடந்து முடியும்போது சுமார் 1.00 மணியிருக்கும் ஐந்து பேரும் பாடசாலையிலிருந்து வெளியேறினார்கள்.

இளையகண்ணனும் ஜெயகிருஷ்ணாவும் வீடுகளுக்குச் செல்லவில்லை. இளையகண்ணனின் வீடு டயகமவிலும் ஜெயகிருஷ்ணாவின் வீடு நுவரெலியாவிலும் இருக்கின்றது. இருவரும் தமது தேவசிரிபுரவிலுள்ள விடுதிக்குச் செல்லவும் இல்லை.

தற்கொலை செய்து கொள்ளப்போவதாக எவரிடமும் கூறவில்லை. ஹட்டன் நகருக்கு வந்திருக்கிறார்கள்.

ஹட்டனில் எந்த டியூஷன் வகுப்புகளுக்கும் செல்லவில்லை. லோயல் கல்லூரி உட்பட ஏனைய தனியார் கல்லூரிகளிலும் விசாரித்தபோது இருவரும் தமது கல்லூரியில் படிக்கும் மாணவர்களே அல்லர் என்றும் சம்பவதினம் காணவே இல்லை எனவும் அடித்துச் சொல்லிவிட்டார்கள்.

இறுதிக்கடிதம் ஹட்டன் வாசிகசாலையிலிருந்து 3.15க்கு எழுதப்பட்டதாக முகவரியிடப்பட்டிருக்கின்றது. ஹட்டன் பொதுநூல் நிலையத்தின் நூலகர் சுகுணம் மற்றும் உத்தியோகத்தர்களிடம் கேட்டபோது குறிப்பிட்ட மாணவர்களை தாம் காணவில்லை என்று கூறினர்.

எழுதிய கடிதத்தை சேர்ட் பொக்கற்றுக்குள் மடித்து வைத்துக்கொண்டு வாசிகசாலைக்கு முன்னுள்ள ரயில் பாதையூடாக சுமார் 2 கி.மீ நடந்து சென்றிருக்கிறார்கள். அப்போது சரியாக 108வது மைல் கல் சிக்னலுக்கு அருகில் சிங்கமலை சுரங்கத்திற்கு பக்கத்திலிருந்தே நாவலப்பிட்டியிலிருந்து நானுஓயாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரெயிலில் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்றனர். இளையகண்ணன் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டான். ஜெயகிருஷ்ணா தலையில் அடிபட்டதோடு தப்பிக் கொண்டான்.

இதுபற்றி ரெயில்சாரதி பீ.டீ.தீரசேகர கூறுகையில், சுரங்கத்திற்கு அருகிலிருந்து 16, 17 வயது மதிக்கத்தக்க வெள்ளைச் சீருடையணிந்த இருவர் பாய்ந்ததாகவும் மரணமானவர் முன் என்ஜினில் மோதுண்டதாகவும் காயமுற்றவர் பெட்டியில் தலைபட்டதாகவும் கூறியுள்ளார்.

பெயர் குறிப்பிட விரும்பாத பளிங்குமலைவாசி ஒருவர் தெரிவிக்கையில் சம்பவதினம் 3.30 அளவில் இரு மாணவர்களும் ஒரு மாணவியும் உரையாடியபடி ரெயில் தண்டவாளத்தில் நடந்து கொண்டிருந்தனர். திடீரென மாணவி அவர்களை விட்டுப்பிரிந்து ஸ்டேஷன் பக்கமாக ஓடுவதையும், அதைத்தொடர்ந்து ஒரு மாணவன் ரெயில் தண்டவாளத்தின் குறுக்கே தலையை வைத்து படுத்துவிட்டதையும் கண்டேன். அடுத்த மாணவன் இவரை இழுப்பதையும் இருவரும் மல்லுக்கட்டுவதையும் கண்டேன் என்று கூறினார்.

இதுபற்றி ஹட்டன் திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எச்.ஆப்தீனிடம் கேட்டபோது, இருவரும் ரெயிலின் முன் பாய்ந்திருந்தால் இருவருமே என்ஜின் முன் மோதுண்டு ஸ்தலத்திலேயே இறந்திருப்பர். ஆனால் இளையகண்ணனின் இடுப்பில் தொடங்கி ஒருபக்கமாக கை, தலை வெட்டிச் செல்லப்பட்டிருப்பதால் அவரது கால்கள் தண்டவாளத்திற்கு வெளியேயும் உடல் தண்டவாளத்தின் உள்ளேயும் இருந்திருக்க வாய்ப்புஉண்டு என்று உறுதிபட கூறினார். ஜெயகிருஷ்ணா தண்டவாளத்திற்கு வெளியே இருந்து இளைய


இளைய கண்ணனின் பெற்றோர், சகோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாவை இழுக்கும்போது பெட்டியில் தலைபட்டிருக்கின்றது என்பதற்கும் சாத்தியப்பாடுகள் உண்டு என்றார்.

ஹட்டன் தலைமையகப் பொலீஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு.அசோக்க வீரக்கொடி:

தலவாக்கலையில் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. உணர்ச்சிவசப்பட்டவுடன் பாய்ந்து தற்கொலை செய்ய ரெயிலும் தண்டவாளமும் தலவாக்கலையிலேயே இருக்கிறது. இருந்தும் பஸ்ஏறி ஹட்டன் வந்து, நூலகம் சென்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். கடிதமும் எந்தவிதமான பதற்றம், பரபரப்பு இன்றி மிகவும் நிதானமாக எழுத்துப்பிழைகள், வசனப் பிழைகளை அடித்துத் திருத்தி எழுதி இருக்கிறார்கள். ஹட்டனிலிருந்தும் பாய்வதற்கு 1-1/2 கிலோ மீட்டர் நடந்து சென்றிருக்கிறார்கள்.

பளிங்குமலைவாசி கூறியதை ஏற்றுக்கொள்ளலாமா, காதல் விவகாரமாக இருக்கலாமா என்று கேட்டதற்கு அதனை பத்திரிகையாளர்கள்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்றார்.

கிளங்கன் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் நிஹால் சில்வா:

தற்கொலை செய்பவர்கள் ரயிலின் முன் பாய்ந்தால் போதுமே. ஏன் நஞ்சு அருந்த வேண்டும். குறித்த மாணவியை பயம்காட்ட குடித்திருப்பார்களா, ஏன் நஞ்சுப் போத்தலை வீசாமல் பைக்குள் வைத்துக் கொண்டனர்? அந்த மாணவியின் முன் குடித்திருக்கலாமா என்று கேட்டதற்கு, நஞ்சு அப்போதுதான் குடித்திருக்க வேண்டும். இருவரும் நஞ்சு குடித்திருந்தனர் என்று உறுதிப்படுத்தினார்.

## தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம்

*தலவாக்கலை பசாரைத் தாண்டியவுடன் எதிர்ப்படும் தேயிலைத் தொழிற்சாலைதான் இன்று மகா வித்தியாலயமாக மாறி நிற்கிறது. தேசிய பாடசாலையாக தரம் உயர காத்திருக்கிறது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் பெரும் போராட்டத்திற்கு மத்தியில் பெற்ற பாடசாலை என்று தெரிவிக்கப்படுகிறது.*

*இப்போது சிரேஷ்ட, கனிஷ்ட என்ற இரு பிரிவாக இயங்கி வருகின்றது.*

*இந்த வலயத்திலுள்ள 42 பாடசாலைகளில் இதுதான் தலைமைப் பாடசாலை*

*இங்குமட்டும்தான் விஞ்ஞான உயர் வகுப்பும், கலை, வர்த்தகப் பிரிவுகளும் உண்டு.*

*இதுவே வெளியூர் மாணவர்கள் இங்குவந்து கல்விகற்க காரணம்.*

*52 ஆசிரியர்கள் பணி புரிகின்றார்கள்.*

*1998இல் உயிரியல் விஞ்ஞானத்தில் 80 வீதமான மாணவர்கள் சித்தி பெற்றிருக்கின்றார்கள். கலைப் பாடங்களில் நூற்றுக்கு நூறு.*

*இங்கிருந்து பல வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள் மற்றும் சிறப்புத் தொழில் துறையினர் உருவாகியுள்ளனர்.*

*நுவரெலியா மாவட்டத்திலும் மத்திய மாகாணத்திலும் பல சிறப்புக்களைப் பெற்ற முன்னணிப் பாடசாலையாக இது திகழ்கின்றது.*

இளையகண்ணனின் மரணத்திற்கு பாடசாலை சம்பவம் காரணம் அல்ல. வேறு காரணமும் இருந்திருக்க வேண்டும். என்றே நினைக்கத் தோன்றுகிறது.

ரெயிலில் மோதியது தற்செயலாக நடந்த செயலாகவே தெரிகிறது. கடிதத்தில் தாம் ரெயிலில் பாயப்போகின்றோம் என்று குறிப்பிடவில்லை.

ஒரு விஷயம் புரிகின்றது. இவர்கள் சுவரில் எழுதியதை ஒரு 'ஜோக்'ஆகவே செய்திருக்கிறார்கள். அடுத்தநாள் லீவோடு மாறி விடுவதற்கே எண்ணியிருக்கிறார்கள்.

இதில் ஆழமான நோக்கங்களோ, தீர்வு கண்டே ஆக வேண்டும் என்ற நெருக்கடிகளோ இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. அவர்கள் மூன்று இடங்களிலும் கூறியிருக்கிறார்கள். இந்தப் பாடசாலையில் இதற்கு முன் இப்படியொன்றும் நடக்கவில்லை அதனால் செய்தோம் என பொலீசில் கூறியிருக்கிறார்கள்.

அங்கு செய்த கலாசாரத்தை இங்கு அறிமுகப்படுத்திவிட்டோம். எமக்கு ஐடியா இருக்கவில்லை. ஆசிரியர்கள் எம்மை தூண்டிய போதுதான் செய்யத் தீர்மானித்தோம் என்றும், அதைவிட ஜெயகிருஷ்ணா தனது கடிதத்தில், இவ்வளவு பாரதூரமாகப் போய் விடும் என்று நான் கனவிலும் எண்ணியிருக்கவில்லை என கூறியுள்ளார்.

ஆகவே, இது முழுக்க முழுக்க மாணவர்களின் இயல்பான வேகமும், கிளர்ச்சி மனப்பான்மையும்தான் என்றே கருதவேண்டியிருக்கிறது.

ஆசிரியர்களுக்கும் இந்த மாணவர்களுக்கும் இடையில் பகைமை எதுவும் இருக்கவில்லை.

முதலில் அவர்கள்தான் ஆசிரியர்களிடம் இப்படி சுவரெல்லாம் சுலோகங்கள் வரையப்பட்டுள்ளன என்ற செய்தியை கூறியிருக்கின்றார்கள்.

இன்னும் பத்து நிமிடங்கள் கழிந்திருந்தால் யாரும் அகப்பட்டிருக்க மாட்டார்கள். தடயங்களை அழித்திருப்பார்கள். தப்பியிருப்பார்கள். தற்கொலையில் இருந்தும்தான்.

இங்கு சகல ஆசிரியர்களையும் சம்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் நிதி விவகாரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன் மூலம் ஆசிரியர் ஒருவர் பின்னணியில் இருக்கின்றார் என்பதும், மாணவர்கள் ''நாம் செய்ய எண்ணியிருக்கவில்லை, அந்த ஆசிரியர் சொன்னபிறகுதான் செய்தோம்'' என்று எழுதியிருப்பதிலிருந்து உறுதியாகின்றது. அந்த ஆசிரியர் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமாகவே இருக்கிறது.

பிரைமரி செக்ஷனைப்பற்றி சுலோகங்களில் எதுவும் வரவில்லை. கண்டீனைப் பற்றியும், வாட்ச்மேன் ரொஸரியைப் பற்றியும் பீடி சுருட்டு பற்றியும் குறிப்பிட்டதிலிருந்து 'ஜொலி'க்கு செய்த வேலை விபரீதமாகி விட்டது என்றே உறுதியாகின்றது.

ஊடகங்களில் நீண்டகால முறுகல் நிலை என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருப்பது பற்றி உயர் வகுப்பு ஆசிரியையான திருமதி தேவகி அவர்கள் கூறும்போது,

''இந்த வருடம் பெப்ரவரி மாதம் பாடசாலை தினம் கொண்டாடப்பட்டது. இல்ல



இளையகண்ணனின் தாய்

விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அதைவிட மாணவர்கள் அனைவரும் என்றுமில்லாதவாறு மிக விமரிசையாக ஆசிரியர் தினத்தை கொண்டாடினர். சகல ஆசிரியர்களுக்கும் பரிசுப்பொருட்களை வழங்கி கௌரவித்தனர். குறிப்பிட்ட ஐந்து மாணவர்கள் தான் முன்னின்று நடத்தினர். நவகாந்தன் தான் அறிவிப்பாளராக கடமையாற்றினான். ஆகவே இப்பாடசாலையில் ஆசிரியர்-மாணவர்களுக்கு இடையில் நீண்டகால முறுகல் நிலை அதுதான் தற்கொலைக்கு காரணம் என்பதெல்லாம் சுத்த அபத்தம்'' என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

தலவாக்கலை பொலீஸ்அதிபர் திரு. சந்தனகமகே கூறும்போது, மாணவர்கள் தம்மிடம் பத்திரிகைகளில் காணப்படுவது போன்ற குற்றச்சாட்டுக்கள் எவற்றையும் சுமத்தவில்லை என்று குறிப்பிட்டார்.

நுவரெலியா கல்வித்திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு.பாலேந்திரன் கூறுகையில், பத்திரிகைகளில் விபரிக்கப்பட்டுள்ள எந்த சம்பவமும் அங்கு நடந்ததாக மாணவர்களோ பெற்றாரோ, வேறு அமைப்புக்களோ எமக்கு எப்போதும் முறைப்பாடு செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

நுவரெலியா கல்வித்திணைக்களப் பணிப்பாளர் திரு.ஜே.எம்.ஜயசேகரவிடம், ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படுவதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றதே, அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளனவா என்று கேட்டோம்.

ஆசிரியர்கள் வெளியே தலைகாட்ட முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது. ஆசிரியர்களை கொல்லப் போவதாக மாணவர்கள் கத்தி, தடி, அசிட்டுடன் அலைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைக்கு நுவரெலியா கல்விக் காரியாலயத்திற்கே அவர்களால் வரமுடியாமல் போனதால் மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் அவர்களின் வீடுகளுக்குச் சென்றே வாக்குமூலங்களை பதிவு செய்து கொண்டனர் என்றார்.

ஐந்து மாணவர்களும் பாடசாலையிலிருந்து வீட்டுக்குச் சென்றதோடு விடயம் முடிந்துவிட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். அப்போதுதான் அந்த அதிர்ச்சிகரமான செய்தி அதிபருக்கு எட்டியது. அந்த அதிர்ச்சியிலிருந்து அதிபரும் ஆசிரியர்களும் விடுபடுவதற்குமுன் மாணவர்கள் பாடசாலைக்குள் வந்துவிட்டார்கள். நவகாந்தன், மதன், குசலராஜா மூவரும் சுண்ணாம்பு, வாளி, தும்புத்தடியோடு வந்தார்கள்.

ஆறுமணிச் செய்தியில் இளையகண்ணனின் தற்கொலை தொடர்பாக அறிவிக்கப்பட்டதுடன் பி.சந்திரசேகரன் எம்.பி.யினதும், மாகாணசபை உறுப்பினர் மு. சிவலிங்கத்தின் பேட்டியும் இடம்பெற்றதாக அங்கு வந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த இருவரும் பேட்டியில், முழுத் தவறும் ஆசிரியர்கள் மீதுதான் என்று தெரிவித்தனராம். அதுவே எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்ததாக ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டினர்.

வந்த மாணவர்கள் இளையகண்ணா இறந்துவிட்டார். நாங்கள் அனுதாபம் தெரிவிக்கப் போகின்றோம் என்றனர். அதிபரும் அதற்கு அனுமதி வழங்கினார்.

அப்போது அங்கு திலகேஷ், கல்யாணி ஆகிய இருவரும் கோபாவேஷம் கொண்டு அதிபரின் அறைக்குள் பிரவேசித்து ''இந்த ஸ்கூலில் என்னதான் நடக்கின்றது?'' என்று அதட்டினார். இத்தனைக்கும் அவர்களின் பிள்ளைகள் எவருமே அங்கு படிக்கவில்லை. அவர்களுக்கிருந்த ஒரே சம்பந்தம் கன்டினை நடத்துவதற்கு கேட்டு, ஆனால் அது டென்டரில் கொடுக்கப்பட்டதால், அந்த ஆத்திரம் தான் இப்படி வெளிப்பட்டது என்பதை புரிந்துகொள்ள யாருக்கும் அதிக நேரம் எடுக்கவில்லை.

நவகாந்தன், மதன், குசலராஜா ஆகிய மூவரும் பாடசாலைச் சீருடை அல்லாத ஆடைகளை அணிந்தவர்களாக வெள்ளை வேனில் (56-9486) வந்து இறங்கியுள்ளனர்.

மூவரும் வந்த பின்னர் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய பாடங்கள் எழுதிவைக்கப்பட்டிருந்த ''பிரிஸ்டல் போட்'' அட்டைகளை கழற்றி அதில் அதிபர் ஆசிரியர்களைப்பற்றி மிகவும் கேவலமாக ஆபாச வார்த்தைகளில் எழுதியுள்ளனர்.

மாணவர்கள் வகுப்பறைகளில் நுழைந்து கதிரை மேசைகளை தூக்கி அடித்து உடைத்ததோடு கதிரைக் கால்களால் ஈட்டிகளைப்போல் செய்து வைத்துக் கொண்டார்கள்.

இதற்கிடையில் பரீட்சைக்காக வழங்கப்பட்ட வினாத்தாள்கள் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டன. ஆசிரியர்கள் அதிபரின் அலுவலகத்திற்கு வந்துவிட்டனர்.

அதற்குள் நகரிலுள்ள ஆட்டோ சாரதிகள், நடைபாதை வியாபாரிகள், பழைய மாணவர் சங்கம், மற்றும் அரசியல் கட்சிகள், இயக்கங்கள் என்று சொல்லிக் கொண்டு ஏராளமானோர் திரண்டுவிட்டனர்.

மாணவர்கள் தளபாடங்களை மட்டுமின்றி ஜன்னல் கண்ணாடிக் கதவுகளையும் உடைத்து நொறுக்கி விட்டனர்.

'பாடசாலை நிர்வாகத்தைக் கையேற்று விட்டோம் பாடசாலையை எமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டோம்' என்று அறிவித்துள்ளனர்.



தலவாக்கலை பொலிஸ் நிலைய அதிபர் சந்தன கமகே

பிரச்சினை புதுவடிவம் பெற்றது இரண்டாம் நாள் பிரச்சினையோடுதான்.

அதிபரின் அறையில் ஆசிரியர்கள் சிறை வைக்கப்பட்டனர். அந்த ஐந்து ஆசிரியர்களையும் எம்மிடம் ஒப்படையுங்கள், அவர்களை கொல்ல வேண்டும் என்று மாணவர்களும் மற்றவர்களும் கர்ஜித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களின் கைகளில் கம்பு, தடி, அசிட், கதிரை காலில் செய்த ஈட்டி என்பன இருந்தன.

சில மாணவர்கள் கூரையைப் பிய்த்துக் கொண்டு அதிபரின் அறையில் இறங்க முயன்று கொண்டிருந்தனர்.

கற்கலாலும் மாறி மாறி அலுவலகத்தை தாக்கிக் கொண்டிருந்தனர்.

ஐந்து மாணவர்கள்தான் ஏனைய மாணவர்களை வழிநடத்திக் கொண்டிருந்தனர்.

மாணவர்கள் கத்திக் கூச்சலிட்டார்கள். அதிபரை நோக்கி '50 நிமிடத்தில் முடிவைத்தா' என்று கத்தினார்கள். 50 நிமிடம், 40, 30, 20 நிமிடம் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஆசிரியர்களின் வேலையை நிறுத்து, அந்த ஐந்து பேரையும் எம்மிடம் ஒப்படை, நாம் முடிவு தருவோம். அவர்களை பொலீசில் ஒப்படை என்றெல்லாம் அவர்கள் கூச்சலிட்டனர்.

மேற்படி ஆசிரியர்களை காப்பாற்றி அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கும் சுமுக நிலையைத் தோற்றுவிப்பதற்காக தலவாக்கலை கோட்டக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் சரவணபிரகாஷ் வந்து, பேச்சுவார்த்தை நடத்த மாணவர் தரப்பில் ஐந்துபேரை வரச் சொன்னார். அவரையும் பிடித்து வகுப்பறையில் அடைத்து விட்டார்கள் மாணவர்கள்.

இதற்கிடையில் நுவரெலியா கல்விக் காரியாலயத்திலிருந்து திருமதி கமலா ரத்நாயக்க. திரு.நாகலிங்கம், திரு.பாலேந்திரா மூவரும் பாடசாலைக்கு வருகை தந்தனர்.

இவர்களும் சகல மாணவர், ஆசிரியர் அதிபர் ஆகியோரைக் கொண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

மாணவர்கள் அந்த கல்வி அதிகாரிகளிடம், அவன் செத்ததுபோல ஆசிரியர்களும் சாக வேண்டும் என்றுதான் கேட்டனர்.

மேலும் அந்த ஐந்து ஆசிரியர்களும் மாணவர்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். அதுவரை மூன்று ஆசிரியர்களின் பெயர்களே அதாவது சூரியகுமார், திருச்செல்வம், விஜயசுரேஷ் ஆகியோரே சம்பந்தம் என்று சொல்லப்பட்டது. இங்கு வைத்துத்தான் ஏனைய இருவருமான செல்லதுரை, சன்குமார் ஆகியோரின் பெயர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வர்த்தகப்பிரிவில் படிக்கும் விஜய மாணிக்கம் பலாத்காரமாக அதிபரின் காரியாலயத்தில் நுழைந்து தீந்தை, பிரஸ் என்பவற்றுடன் ஒலிபெருக்கியையும் எடுத்துச் சென்றார். பழைய மாணவர்களும் இங்கு வந்து மாணவர்களுக்கு பக்கபலமாக இருந்தனர்.

இச்சம்பவம் பற்றி திருமதி கமலா ரத்நாயக்கவும் இதர அதிகாரிகளும் நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் திரு.பெ.சந்திரசேகரனை சந்தித்து விபரித்தனர்.

மாணவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல் ஏற்படப்போகின்றது.

பொலிசார் சுட்டால் பல மாணவர்கள் பலியாகலாம். உடனடியாக வந்து நிலைமையைக் கட்டுப்படுத்த உதவுமாறு அவர் மாகாண கல்வி அமைச்சர் திரு.ராதாகிருஷ்ணனுக்கு அறிவித்தார். அவர் 30ம் திகதிவரை பாடசாலையை மூடிவிடும்படி அறிவிக்கச் சொன்னார்.

மாணவர்கள் ஜீப்பில் கொண்டு செல்லப்பட்ட ஆசிரியர்கள் எங்கே? ஏன் கொண்டு சென்றீர்கள்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூச்சலிட்டனர். எமக்கு அவசர முடிவு வேண்டும், மரண வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றும் கூச்சலிட்டனர்.

''ஐந்துபேர் மீதும் நடவடிக்கை எடுப்போம்'' என்று எம்.பி அறிவித்த பின்னர்தான் மாணவர்கள் கலைந்து சென்றனர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சிறுகதை:**

**உக்குவளை அக்ரம்**

பகலிலும் இருண்டிருந்தது வானம். சாரி சாரியாய் எறும்புகளும் கூட்டம் கூட்டமாய் பறவை இனங்களும் தம் இருப்பிடங்களுக்கு விரைந்து கொண்டிருந்தன...

மதினி முன்னறையை சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

சிதறி... ஆங்காங்கே ஒழுங்கின்றிக் கிடந்த அலங்கார பொருட்களை உரியிடத்தில் வைத்து அழகு பார்த்தார்.

சின்னத் தங்கை ரிஸ்னா, முற்றத்தை துப்புரவு செய்துகொண்டிருந்தாள்.

உம்மா கோப்பையையும் 'ட்ரே' வகைகளையும் எடுத்து தயாராக்கினார்.

வாப்பா இருப்புக் கொள்ளாமல் குசினிக்கும் வராந்தாவிற்கும் ஆஸ்துமா நோயாளியாய் உலாவிக் கொண்டிருந்தார்.

தம்பி எதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் கேசட்டில் பிடித்த பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

''ளுஹர்'' தொழுகைக்காக ஊர்ப் பள்ளியிலிருந்து பாங்கு ஒலி கேட்டது. ''நஸீரா, தொழுகை முடிந்தவுடன் மாப்புள்ள வூட்டுக்காரங்க வந்துருவாங்க. எல்லாத்தையும் ரெடியாக்கி வைங்க. நான் தொழுதுட்டு வாரேன்''.

''ரிஹானா ரெடியாகலியா...? கெதியா குளிச்சுட்டு தயாராகிடுங்க'' உம்மா கூறி நகர்ந்தார்.

பதினோராவது தடவையாக பெண் பார்க்க வாராங்க.. ஒவ்வொரு தடவையும் அலங்கரித்து அறிமுகமில்லாதவர்களுக்கும் புன்னகைத்து, பிறகு ஒவ்வொருத்தரா ரூமுக்கு வந்து... அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு... எல்லோரும் கூடி ஓர் பட்டிமன்றம்.

அழகுராணிப் போட்டியில் கலந்து கொண்ட பெண்ணுக்கு புள்ளியிடும் நடுவர்கள் போன்று அவர்களின் விமர்சனம்.

''பொண்ணு அழகா இல்ல...! பல்லு நெருக்கமா இல்ல, கொஞ்சம் குள்ளமா இருக்கா... கர்வம் பிடித்தவளாக இருப்பா வாக்கும்... நான் போனதும் சிரிக்காம முகத்த வேறு பக்கம் திருப்பிட்டா...?''

ஒவ்வொருத்தரா குற்றப்பத்திரிகை வாசிப்பார்கள். மாப்பிள்ளையா வந்தவன் தலையாட்டி பொம்மையாய்... சகலத்தையும் கேட்டுவிட்டு ஒரு புன்னகை... பின்னர் முகத்தை இறுக்கமாக வெச்சதப் போல் ஓர் பாவனை.

**பெண்கள் முதலில் யாரோடு மோதணும், குடும்பத்தோடா..? மதங்களோடா..?**

சம்பந்தமில்லாமல் சில சுயவிபர விளம்பரம்...!

வயிறு புடைக்க சாப்பிட்டுட்டு ''புரோக்கர்ட்ட எங்கட முடிவ சொல்லி அனுப்புறோம். நாங்க போயிட்டு வாரோம்...''

இப்படி பல மனித உருவங்கள் சமூகத்தில், வைரஸ் கிருமிகளாக உலா வருகின்றனர்.

இன்றைக்கும் அதே பல்லவிதான்... மனதில் எண்ணியவ-ளாக தயாரானாள்.

வந்தார்கள் - பார்த்தார்கள் - சாப்பிட்டார்கள் - பேசினார்கள் சிறிது இடைவெளி விட்டு...

''பொண்ண எல்லோர்க்கும் - புடிச்சி இருக்கு. புரோக்கர்ட்ட சில விபரங்களை சொல்லியிருக்கோம், அதுக்கும் நீங்க சரின்னிட்டா... கல்யாண திகதியையும் குறிச்சிடலாம்...''

நிபந்தனைகளை விதித்து விட்டு ஊர்ந்தது கூட்டம். என் மனத்திரையில் படம் ஓடியது.

மாப்பிள்ளைகளின் சுயவிபரங்களோடு தகுதி, எதிர்பார்க்கப்படும் சீதனம், தேவையான மணமகள் தகமைகள் போன்றவற்றை கழுத்தில் தொங்க விட்டால்... பெண்ணைப் பெற்றவர்களும் சிரமமின்றி... கடைத்தெருவுக்கு சென்று அவர்களின் தகுதிக்கேற்ப ஒரு மணமகனை வாங்கிக் கொண்டு வரலாம். அதவிட்டுட்டு பெண்பார்க்கும் படலமென்று... பெண் வீட்டாரையும் - அவள் ஆசைகளையும், உணர்வுகளையும் சித்திரவதை செய்து...

என் வீட்டார் முகங்களில் அமாவாசையில் நிலவைக்கண்ட சந்தோஷம். ஆளாளுக்கு, ''புடிச்சிருக்கு...'' ''நல்ல சம்பந்தம் விட்டுரக்கூடாது...'' உறுதி கொண்டார்கள்.

''மணப்பெண் என்னிடம் யாரு கேட்டா...? திருமணம் முடிக்கப் போவது அவர்களா..? நானா..? மார்க்கம் சொல்லுது 'மணப்பெண்ணின் விருப்பமில்லாமல்.. திருமணம் முடித்துக்கொடுக்கக் கூடாதுன்னு'... தொப்பி போட்டு ஐவேளை தொழும் வாப்பாவும், முக்காடிட்டு பயபக்தியோடு குர்ஆன் ஓதும் உம்மாவும் மார்க்கம் சொன்னதை விட்டு, அவர்களின் விருப்பத்திற்கு முடிவு எடுப்பது என்ன நியாயம்ன்னு வௌங்கல''.

கறுத்த குண்டான உருவம். அடிக்கடி சிகரட் தேடும் உதடு.. பூமிக்கு முத்தம் கொடுக்கத் துடிக்கும் பற்கள்...

. மாப்பிள்ளைக்கு உள்ள ஒரே தகுதி ஜப்பானில் ஐந்து வருடம் வேலை செய்ததால், பல நகரங்களில் கடைகள் ஏராளம். பணக்காரர் என்பது மட்டும், மற்றைய எல்லாத் தகுதிகளையும் மறைத்து விட்டிருந்தது என் குடும்பத்தாருக்கு...

திருமண நாள் அண்மித்தது. ரெஜிஸ்டர் சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது. பள்ளிவாயிலின் பேஷ் இமாம் கேட்டார் ''கைக்கூலி எவ்வளவு கொடுக்கிறீங்க''

வாப்பா சொன்னதும் எழுதிக் கொண்டார்.

எனக்குள் எறும்பு கடித்தது. ஒவ்வொரு ஜும்மா நாட்களிலும் சீதனத்தை அக்கு வேறு ஆணி வேறாக மார்க்க தீர்ப்புப்படி உபதேசம் செய்யும் இந்த இமாம், தனக்கு சில நூறுகள் கிடைப்பதற்காக... மார்க்க சட்டத்தின்படி எதிர்க்கத் திராணியற்று... இது கூடாது என்று சொல்ல வேண்டியவர்... கேட்டு விசாரித்துப் பதிந்து கொள்வதை எந்த மார்க்கம் கற்று கொடுத்தது. கடைப்பிடிக்க வேண்டிய இவர்களே..! குருடர்களாக உலாவும்போது, மிம்பர் பிரசங்கமெல்லாம் காற்றிழந்த பலூன்களாக உண்மையிழந்து போவதில் வியப்பில்லைதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாண்டு காலம் குடும்ப வாழ்வு என்பது, அவன் விதைகள் வீங்க, பெண் வடிகாலாக வேண்டும். இயந்திரமாய் அவனுடம்பு வியர்க்க வியர்க்க அவள் மரக்கட்டையாக தாங்கணும்... அவன் ஆசை, உணர்ச்சிகள் தீர்ந்ததும் குப்புறப்படுக்க... மனைவியானவள் உணர்வுகள் நெகிழ்ச்சியில்லாமல் தீய்ந்து போகணும். அவன் ஆண்மையை நிரூபிக்க இவள் நிலமாக நிழலாக...

சமனிலை பேணாது ஆண் வர்க்கத்தினருக்கு மாத்திரம் குடை சாய்வது எவ்வகையில் நியாயம்? மாக்கத்தின் பெயரால் பெண்ணை முக்காடிட்டு இருட்டு சிறைக்குள் சிறை வைக்கத் துடிக்கும் இவர்கள் மார்க்க தீர்ப்புகளை கசடற கற்றவர்களா..? சொல்லாததையும், இல்லாததையும் விளக்கமின்மையால், அரைகுறை விடயதானத்தோடு கடைப்பிடித்து... வாழ்க்கையை உண்மையாக வாழ்பவர்கள் என்று பொய்த் தம்பட்டம் அடிப்பதில் என்ன பெருமை.

பெத்த கடனுக்கும், கடமையை சரிவர செய்தார்கள் என்று சமூகம் சொல்வதற்கும், புகழ்வதற்கும்...

என் உணர்வுகள் - ஆசைகள் - எதிர்பார்ப்புகள் இவர்களுக்கு முக்கியமில்லை. அந்தஸ்துள்ள ஒருவன் வந்தால் நான் தலை நீட்டணும். விரும்பாத ஒருவனுடன் வாழ்க்கை பூராவும் நடிக்கணும், திருமணத்தின் பின்னர் அவனை அறிந்து வாழ்க்கை நடத்தணும்.

'வெளங்கல ஒண்ணுமே எனக்கு...'

நெளிவு சுழிவுகளை அறிந்து அவனுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள முயற்சிக்கும்போது நான் கிழடு தட்டிவிடுவேன். என் ஆசைகளைப் புதைத்துவிட்டு அவன் விருப்பு வெறுப்புகளுக்காகவும் அவன் காமத்தின் வடிகாலாகவும் நான் ஒரு சுமைதாங்கியாய் நிலமாக பொறுமையாய் வாழனும்...

என்னை சாகடித்து விட்டு பிறருக்காக வாழ்ந்தால்... 'நல்ல பொண்ணு, குடும்பத்துக்கேற்ற மருமகள்' என்று பொய்களை அங்கீகரிக்கும் சமூகம்...


உண்மைகளை, உரிமைகளை நியாயமா கேட்டு பொங்கியெழுந்தா சினம் கொள்வதேன்? பெண்கள் முதலில் யாரோடு மோதணும், குடும்பத்தோடா? மதங்களோடா?

சிந்தனைச் சிதறல்கள் நாலாபக்கமும் தெறித்து விழுந்தாலும், மீண்டும் ஆரம்பத்திற்கே வந்து நின்றாள். அதிகமான பெண்கள் கஷ்டங்களையும் சகித்து வாழப் பழகிவிட்டதால் சில குரல்கள் ஓங்கி ஒலித்தாலும், கிணற்றுத் தவளையின் கதறல் போல் எவருக்கும் வெளங்காமலே போய்விடுவது தான் யதார்த்தம்.

உள்ளக் குமுறல்களை தனக்குள்ளே மூட்டைகட்டி வைத்தவளாக, எதிர்வரவிருக்கும் சவால்களை முகம் கொடுக்க தயாரானாள் ரிஹானா. ●

**சுரேஷின் கண்டுபிடிப்பு**

"இந்த நாட்டில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் யுத்தமுனையில் நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசியேஆகவேண்டும். அவர்களுடன்பேசினால் இப்பிரச்சினையை எப்படித்தீர்க்கலாம் என்று உங்களுக்கு அவர்கள் கூறுவார்கள்.."



*- சுரேஷ் பிரேமச்சந்திரன் (முன்னாள் EPRLF எம்.பி.)வீரகேசரி 08.08.*

**ஆதவனின் ஆதங்கம்**

"ஒற்றையாட்சி என்ற சிந்தனைத் தளத்திலிருந்து ஒருபோதும் விட்டுவிலகத் துணிவில்லாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டிப் போயிருக்கும் தமிழ் கட்சிகள் நோக்குவது எதைத்தான் என்று யாருக்காவது தெரியுமா?"

*- ஆதவன் 05.08.2001*

**புதிய வெளிச்சம்**

"இந்த அபிப்பிராய வாக்கெடுப்பில் விளக்கிற்கு வாக்களிப்பது சந்திரிகாவை வெற்றியடையச் செய்வதற்கல்ல. அரசியலமைப்புச் சபையொன்றை ஏற்படுத்திக்கொள்ளும் தேவைக்காகவே வாக்களிக்கின்றோம்."

*- கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன (ஆதவன் 05.08.2001)*

**வயித்தெரிச்சல்**

"அரசாங்க எதிர்ப்பு நிறுவனமாக மாறியுள்ள ராவய பத்திரிகையிலும் கலாநிதி விக்கிரமபாகுவுக்கு செல்வாக்கு இருந்தது... அது இனித் தொடருமோ தெரியாது... ஏரிக்கரை நிறுவனத்திலிருந்து யாருமே தேடி வாசிக்காத எத்தனை தமிழ் ஏடுகள் வருகின்றன. அவற்றில் அவருக்கு நிச்சயமாக இடம் இருக்கும்."

*- தினக்குரல் 26.08.2001*

**அதிசயத்துக்கு அச்சுறுத்தல்**

"உலக ரீதியான சீடர்களைக் கொண்ட-தன்னைக் கடவுளின் அவதாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ள சத்யசாயிபாபாவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை கர்னாடகப் பொலீஸார் மீள்பரிசீலனை செய்துள்ளனர். தமிழர்களுக்கெதிரான ஈவிரக்கமற்ற யுத்தத்தை மேற்கொண்டு வரும் சிங்களத் தலைவர்களுடன் சாயிபாபா நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளதாக எல்.ரி.ரி.ஈ குற்றம்சாட்டியுள்ளது. தமிழர்கள் சாயிபாபாவை வழிபடக் கூடாது என எல்.ரி.ரி.ஈ தெரிவித்துள்ளது.

*- டெய்லி மிரர் 08.08.2001*

**தட்டிக்கேட்க ஆளில்லை**

"யாராவது புலிகளை நிச்சயமாக அழித்துவிடுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினால் - அவர்கள் யாராக இருந்தாலும் - மக்கள் புலிகளை எதிர்க்க ஆரம்பிப்பார்கள். அந்த நம்பிக்கை இன்னும் யாராலும் வழங்கப்படவில்லை. புலிகள்,அவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையில் உயிர் வாழவில்லை. மாறாக புலிகளை முற்றாக அழித்துவிடக் கூடியவர்களை மக்கள் காணாததாலேயே மக்கள் மத்தியில் புலிகள் இன்னமும் உயிர் வாழ்கிறார்கள். புலிகளை ஆதரிப்போர் பலரும் அந்த அடித்தளத்திலேயே ஆதரிக்கிறார்கள்".

*- முன்னாள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள்*

**ஹக்கீமுக்கு புரியுமா?**

"அரசுக்கு எதிராகவே அரசியல் நடத்துவதென்பது இலங்கை முஸ்லிம் மக்களுக்கு ஒரு புதிய விடயமாகும். தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஓர் அலை ஆரம்பமாகியுள்ளது. இந்த அலை ரவூப் ஹக்கீமின் அரசியலைக் காப்பாற்றுமா மாட்டாதா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்".

*- 'கண்ணோட்டம்' கேள்வி-பதில் பகுதியில்.*

**யாழ். பல்கலைக்கழகம்!**

"யாழ் மாவட்டத்தில் இதுவரை எயிட்ஸ் நோய்க்கு இலக்காகியவர்களின் எண்ணிக்கை பதினைந்தாக உயர்ந்துள்ளது. இவர்களில் ஒருவர் சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்தவர். மற்றொருவர் யாழ்.பல்கலைக்கழக மாணவியாவார்".

*- வீரகேசரி 09.08.2001*

**தங்கமான பேச்சு**

"என்னைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளல்லர். அவர்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை".

*- யாழ் மாவட்ட SLFP அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா தினக்குரல் 13.08.*

**சோழியன் குடுமி**

"இந்தியாவுடன் நல்லுறவைப் பேண வேண்டும். அவர்களும் ஈழப்பிரிவினையை ஆதரிக்கவில்லை. புலிகளுக்கும் அரசுக்குமிடையே யுத்தம் நடந்து கொண்டிருப்பதையே அவர்களும் விரும்புகிறார்கள்".

*- ஜே.வி.பி. விமல்வீரவங்ச எம்.பி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழிலக்கிய யானைக்கு கொம்பு முளைத்தது



ஈழத்து தமிழ் இலக்கியம் இன்று யானை பார்த்த குருடர் கதையா-கத்தான் இருக்கின்றது போல் தோன்றுகின்றது.

சுதந்திரத்திற்கு முன்னரும் ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு கணிசமான ஒரு வரலாறு இருந்தபோதிலும் அதன் பின்னரே நவீன தமிழ் தேசிய இலக்கியம் வீச்சுப் பெற்றது. சுதந்திரத்திற்கு முன்னர் இருந்த பக்தி இலக்கியம், மரபு இலக்கியம், அழகியல் இலக்கியம் என்பன ஒரு சமூக நோக்கோடு மக்கள் இலக்கியமாகப் பரிணமித்தது 1948ம் ஆண்டின் பின்னரே எனலாம்.

> **“கொலைகாரர்கள் பற்றி எனக்கு பயமில்லை. அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டவர்கள். மற்றவர்கள்தான் எந்த நேரமும் ஒரு கொலையாளி ஆவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதுதான் என்னை பயமுறுத்துகிறது.”**
>
> *- ஜோர்ஜ் லூயி போர்ஹே*

பின்னர் வந்துபோன ஐந்து தசாப்தங்களும் மக்கள் இலக்கியப் போராட்ட அரை நூற்றாண்டுக் காலம் என பொதுவாக நாம் குறிப்பிடலாம். ஆனால் ஒவ்வொரு தசாப்தத்திலும் எதிரோட்டங்களும் இல்லாமல் இல்லை. அவற்றை நாம் பின்வருமாறு வகைப்படுத்துவது பொது ஓட்டத்தில் இருந்த வளைவு சுழிவுகளைப் புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

1950களின் ஆரம்பத்தில் ஈழத்து தமிழ் இலக்கியம் பெரும்பாலும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கங்களையும் ஓரளவு இலங்கையின் சுதந்திர உணர்வுகளையும் மண்வாசனையையும் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அத்தசாப்தத்தின் பிற்பகுதி தேசிய மறுமலர்ச்சியின் (குறிப்பாக சிங்கள மக்களின்) எழுச்சியும் அதேவேளையில் தமிழ்-சிங்கள இன ஐக்கிய உறவின் சிதைவும் நிகழ்ந்த காலம். அதன் பிரதிபலிப்பாக தமிழ் தேசியவாதிகளின் தேசிய அவநம்பிக்கை இலக்கியங்களும், முற்போக்கு எழுத்தாளர்களின் தேசிய ஒருமைப்பாட்டு இலக்கியங்களும் முகிழ்ந்த காலம். இந்தக் காலத்தின் எதிர் இலக்கியவாதிக-ளாக பழம் தமிழ் இலக்கியப் பண்டிதக் கூட்டம் திகழ்ந்தது.

அடுத்த 1960களின் காலம் தமிழ் தேசிய இலக்கிய விருட்சத்தின் மீது முற்போக்கு இலக்கியம் தீவிரமாகக் கிளை பரப்பிய காலம். 1961ம் ஆண்டு தமிழ் தேசியவாதிகள் ஆரம்பித்த சத்தியாக்கிரக வெகுஜனப் போராட்டம் தோல்வி கண்டு தென்னிலங்கை சிங்களப் பிற்போக்கு சக்திகளுடன் ஆட்சிப் பங்கு ஏற்ற சூழலில், வடக்கில் ஏற்பட்ட தீண்டாமைக்கெதிரான வெகுஜன எழுச்சிகளும், நாடுபரந்த தொழிலாளர் போராட்டங்களும், அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிரான வியட்நாம் மக்களின் வீரப் போராட்டமும், உலகளாவிய மாணவர் கிளர்ச்சிகளும் ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புரட்சிகர வீச்சை அளித்த காலம் இதுதான். இந்தக் காலத்தில் மரபுவாதிகளுடன் இன இலக்கியவாதிகளும் முற்போக்கு இலக்கியத்தை வழிமறித்து எதிர்த்த காலமுமாகும்.

1970கள் மீண்டும் தமிழ் தேசிய வாதம் துளிர்விடத் தொடங்கிய காலம். இக்காலம் இன இலக்கியமும் முற்போக்கு இலக்கியமும் சமாந்தரக் கோடுகளில் செல்லமுற்பட்ட காலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் 1977 இன வன்செயலைத் தொடர்ந்து முற்றுமுழுதாக தமிழ் தேசியவாத இலக்கியம் பற்றிப்பரவியது. இந்தக் காலத்திலும் மரபுவாதிகளே எதிரோட்டக்காரராக இருந்தனர்.

1980களைப் பொறுத்தவரை முற்பகுதி தமிழ் தேசிய வாதம் தேசிய விடுதலை வாதமாகவும் பிற்பகுதி ஜனநாயக மறுப்பு அராஜகவாதமாகவும் வளர்ந்த காலம். இந்தக் காலத்தில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டமே தமிழ் இலக்கியத்தின் பிரதான பேசுபொருளாயிற்று. ஆயினும் சிலசில அராஜக எதிர்ப்பு இலக்கியங்களும் முளைவிட ஆரம்பித்த காலமும் இதுவே. இக்காலத்தில் மரபுவாதிகளினதும் முற்போக்குவாதிகளினதும் வீச்சுக் குறைந்து போயிற்று. மரபுவாதிகள் காலத்திற்கு எதிரானவர்களாகவும், முற்போக்குவாதிகள் காலத்தால் பின் தங்கியவர்களாகவும் இருந்ததே இதற்குக் காரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990கள் ஈழத்து தமிழ் இலக்கிய அரங்கைப் பொறுத்தவரை துயர்படிந்த காலமாகும். தமிழர் அரசியலில் ஏற்பட்ட அராஜகப் போக்கு முற்றுமுழுதான ஜனநாயக மறுப்பு நிலையை அடைந்து முழுமையான பாஸிசப் போக்காக வடிவம் எடுத்த காலம் இந்தத் தசாப்தமே. அனைத்துவகையான இலக்கியக் கோட்பாடுகளைப் பின்பற்றியவர்களும் வாய் அடைக்கப்பட்டு 'விடுதலை' என்ற போர்வையில் தமிழ் இராணுவவாத இயக்கத்தையும், அதன் தலைவனையும், அவர்களது துப்பாக்கிகளையும், அத்துப்பாக்கிகளின் மிலேச்சத்தனங்களையும் போற்றிப் புகழ்ந்து கதைகளும், கவிதைகளும், நாடகங்களும் இயற்ற வைக்கப்பட்ட காலம். மனச்சாட்சியுள்ள எழுத்தாளர்களும், கலைஞர்களும், புத்திஜீவிகளும் தமது சொந்த தமிழ் மண்ணிலேயே கொலை செய்யப்பட்டும், சிறைவைக்கப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும், நாட்டைவிட்டு ஓடியும் நலிவுற்ற காலம். ஜனநாயக மூச்சு விடுவதற்கான இடைவெளி சிறிதும் இல்லாததால் எதிர் ஓட்டம் பெரிதும் இல்லாத காலம். இருப்பினும் புலம்பெயர் நாடுகளிலும், வடக்கு கிழக்கிற்கு வெளியேயும் பாஸிச எதிர்ப்பு இலக்கியங்கள் துளிர்விடத் தொடங்கிய காலம். இந்த மனிதவிரோதப் போக்கை தமிழ் தேசியம் என்ற போர்வையில் இனம் கண்டு மரபுவாதிகள் இராணுவ இலக்கியத்திற்குத் துதிபாட ஆரம்பித்த காலமும் இதுவே. இவற்றின் தொடர்ச்சியாக புதிய மில்லேனியத்தில் ஆரம்பமாகியுள்ள புதிய தசாப்தம் ஒரு புதிய வரலாறு படைக்கும் நம்பிக்கை ஒளி பிரகாசிக்கும் காலமாக மலர்ந்துள்ளதை உணரவும் காணவும் முடிகின்றது.

தமிழ் தேசத்தை கடந்த அரை நூற்றாண்டாக அடக்கி அழிக்க நினைக்கின்ற சிங்கள பெருந் தேசிய மேலாதிக்கவாதத்தை மட்டுமின்றி அத்தேசத்தை உள்ளிருந்தே செல்லரிக்கின்ற கறையான்களாக, புற்றுநோயாக அழிவு செய்கின்ற தமிழ் பாஸிச சக்திகளுக்கெதிராகவும் அரசியல் அரங்கில் மட்டுமின்றி இலக்கியக் களத்திலும் ஒரு புது எழுச்சி தோன்றி வருவதைக் காண முடிகின்றது. பாஸிசத்தின் கொடூரங்களுக்குப் பயந்து அந்நிய நாடுகளில் புகலிடம் தேடியவர்கள் மட்டுமின்றி, வடகிழக்கிற்கு வெளியே வாழுபவர்கள் மட்டுமின்றி, வடக்கு கிழக்கிலும் ஏன் வன்னியிலும் வாழுகின்றவர்களே வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பாஸிசஎதிர்ப்பு ஜனநாயக மீட்பு இலக்கியங்களைப் படைக்கத் துணிந்துவிட்டதை நாம் காணமுடிகின்றது.

இந்தப் புதிய போக்கின் வரவையோ வளர்ச்சியையோ எழுச்சியையோ யாரும் தடைசெய்துவிட முடியாது. எவ்வாறு தமிழ்தேசிய விடுதலை இலக்கியம் தடைகளைத் தாண்டி எழுந்ததோ அதேபோல பாஸிச எதிர்ப்பு தமிழ் இலக்கியமும் எழுந்தே தீரும். அதன் தீர்க்கமான, தீவிரமான பிரவேசத்தின் காலப்பரப்பு இந்தத் தசாப்தமே. ஆனால் இன்று ஈழத்துத் தமிழ் இலக்கிய பரப்பில் உலாவருகின்ற பிரபல எழுத்தாளர்களும் கவிஞர்களும், பேராசிரியர்களும், ஊடகவியலாளர்களும் இந்தப்போக்கை பார்க்கவும் ஏற்கவும் மறுக்கின்றனர். பண்டைய தமிழிலக்கிய மரபுவாதிகள் எதிரோட்டம் ஓடியதுபோல புதிய வருகையை எதிர்த்து 'சிங்கள தேசிய ஒடுக்குமுறை' என்ற ஒற்றைத் தண்டவாளத்தில் ஓடித் தடம் புரளுகின்றனர்.

ஈழத்தமிழ் இலக்கியம் என்ற மாபெரும் யானையின் 'தமிழ் தேசியம்' என்ற தும்பிக்கையைத் தடவி இதுவே யானையின் முழுமை என்கின்றனர். யானையை முழுமையாகப் பார்க்க மறுப்பது போலவே இந்த மாபெரும் யானைக்கு 'பாஸிச எதிர்ப்பு இலக்கியம்' என்ற கொம்புகள் முளைத்து வருவதையும் பார்க்க மறுக்கின்றனர்.

ஆனால் இவர்கள் என்னதான் கண்களை இறுக மூடி உண்மைகளைப் பார்க்க மறுத்தாலும் இந்த கொம்பன் யானை எதிர்வரும் காலங்களில் 'ராஜநடை' போடுவது தவிர்க்க முடியாத நிகழ்வாகப் போகின்றது. இந்த ஜனநாயக கொம்புகள் பூரண வளர்ச்சி அடையும்போது அதனுள் இயல்பாகவே சமதர்மம் என்ற முத்துக்களும் பவளங்களும் கூட உருவாகக் கூடும்.

எமது வருங்கால தமிழ் இலக்கியக் குழந்தைகள் அப்போது, ''எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது; அது பவளக் கொம்பன் முத்துக் கொம்பன் யானையாகவும் இருந்தது'' என்று பாடவும் கூடும்.

**- பூதவராயன்**

(தமிழ்நாட்டில் கும்பகோணத்தைச் சேர்ந்த வே.மு.பொதியவெற்பன் ஈழவிடுதலைப் போராட்டத்தை ஆதரித்து மிகத் தீவிரமாக அங்கே செயற்பட்டு வந்தவர். அவர்களிடம் இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தைச் சொல்லும் ஓர் உதாரணம், தனது பொன்விழா மலரில் பொதியவெற்பன் எழுதியுள்ள இந்தக் கவிதை. எல்லாம் சரி, இங்கு புலிவாலைப் பிடித்தவர்களுக்குத்தான் இன்னும் சுடலை வெளிக்கவில்லை!

## நீங்களுமா...? நீங்களுமா...?

களத்தூன்றிப் போராடிக்
காத்துநிற்கும் பேரரணும்
புலம்பெயர்ந்த சோதரன்மார்
புரிந்துவரும் ஆதரவும்
மரணத்துள் வாழுமந்த
மக்களுக்கே பக்கபலம்
வரலாற்றின் பக்கங்களில்
வசந்தத்தின் இடிமுழக்கம்

பகைமுகத்தின் பாதையெலாம்
கண்ணிவெடி பாவிவைத்துக்
களையெடுத்தே பயிர்காத்தே
கணக்குகளைத் தீர்க்கின்றீர்

அத்தனையும் சத்தியமே
ஆனாலும் ஒரு கேள்வி
இத்தனைக்கும் மத்தியிலே
என்னுள்ளே ஊடுருவி
சங்கத்துப் புலவனவன்
சந்துசெயப் பாடவந்த
சதுரப்பாட்டுடன் நான்
இங்கிருந்தே பாடுகின்றேன்.

சீசருக்காய்ப் பேசவந்த
அந்தோணிப் பேருரைபோல்
கொந்தளிக்கும் என்னெஞ்சக்
குமுறல்களைப் பாடுகின்றேன்

புகலிடத்தின் விலையெனவே
சுதந்திரத்தைத் தர மறுத்தீர்
புகல்நீரே என்றவர்க்கும்
சுதந்திரத்தை மறுக்கலாமோ?

நரவேட்டைச் சுடுகாட்டில்
காடையரின் ராணுவமோ
துரோணர்களின் அடிச்சுவட்டில்
வித்தைவிரல் வாங்கியது

அறைபோன துரோகத்தை
அடையாளப் பறைசாற்றி
ஆட்காட்டி விரலெல்லாம்
தூக்கிலே தொங்கவிட்டீர்

களையெடுக்கும் அவசரத்தில்
களைக்கொல்லி ஆகிநின்ற
கலையூடு பயிர்களையும்
தடையிடப் போமோ?

சமூகமான சாட்சிகளாம்
மகத்தான கலைக்குரல்கள்
உமைநோக்கி விமர்சிக்க
சுட்டுவிரல் நீட்டியதால்
கராக்கிர கத்துழன்று
காணாமற் போவதுவோ?
தீராப்பழி சுமந்தீர்
தினந்தினமும் உங்களது

தியாகத்தின் குருதியிலும்
பகைரத்தக் களரியிலும்
தொடர்ந்தெழுதும் வரலாற்றில்
துரோகத்தின் கறையேறவா?

ஹிட்லிஸ்டின் பட்டியலில்
சுட்டுவிரல் பட்டடங்கும்
ஹிட்லர்களின் பாதையிலே
நீங்களுமா...? நீங்களுமா...?

**- பொதிகைச்சித்தர்**

☆ சொல்லாத சேதி எல்லாம் சொல்லிச் சொல்லி
இல்லாமற்போன செல்விக்கும்-
புதியதோர் உலகம் செய்யப் புதையுண்ட கோவிந்தனுக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாதனை மேடையா? சம்பாதிக்கும் களமா?

இன்றைக்கு நடிகர்களாகும் விருப்பத்தோடு அலைந்து கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் தொகை மிகப்பெரிது. காரணம் சமூகத்தின் மற்றெந்தத் துறையையும் விட அதிகளவு பிரபலமும், புகழும் பணமும் கிடைக்கும் நபர்களாக சினிமா நடிகர்கள் இருப்பதுதான்.

இதனால் பணமும் புகழும் பெறும் அதீத ஆர்வத்தோடு நடிக்க வருகிறவர்கள் அதிகரித்திருக்கிறார்களே தவிர, நடிப்பை ஒரு கலையாக எண்ணி, அந்தக் கலை வடிவத்துக்குத் தம்மைப் பொருத்திக் கொள்ளுகிறவர்கள் அரிதாகி வருகிறார்கள்.

இரண்டு தலைமுறைக்கு முந்திய மூத்த நடிகர்கள் சிறுவயது முதலே நாடகக் குழுக்களில் சேர்ந்து, நடிப்புக் கலையை குருகுலக் கல்வியாகக் கற்று நடிப்புத் துறைக்கு வந்தார்கள். எனவே அந்தத் தலைமுறை நடிகர்களுக்கு நடிப்பு என்பது அர்ப்பணிப்புடன் கூடிய கலையாகவே இருந்தது. எம்.ஜி.ஆர்., சிவாஜி, பாலையா, எம்.ஆர். ராதா, எஸ்.வி.சுப்பையா, மனோரமா உள்ளிட்ட பல அந்தக்கால நடிக நடிகையரிடம் நடிப்பின் மீது பயபக்தியுடனான ஈடுபாட்டைக் காண முடிந்தது.

கட்டபொம்மன், ராஜராஜசோழன், வ.உ.சி, கர்ணன் போன்ற... நாம் உருவ தோற்றத்தை அறிந்திராத அவர்களின் பெயர்களை கேட்ட மாத்திரத்திலேயே நடிகர்கள் திலகம் சிவாஜியே நம் மனக்கண்ணில் வருவார். அவ்வாறான வீரர்களின் பாத்திரத்திற்குத் தோதாக பரந்த மார்பையும் உறுதியான தோள்களையும் கொண்டிருந்த சிவாஜி, 'திருவருட் செல்வரில்' அந்த உடலைக் கூனிக்குறுக்கி 'அப்பராக'வும் நம் நினைவில் பதிந்தார்.

அதேபோல சுப்பிரமணியபாரதி என்றாலே எஸ்.வி.சுப்பையா தான் நம் நினைவில் வருவார். சமீபத்தில்தான் சாயாஜி ஷிண்டே என்கிற மாராட்டிய நடிகர் அந்த பழைய பாரதி உருவைக் கொஞ்சம் புதுப்பித்துக் காட்டினார். இவரும் நாடக மேடைகளில் நடிப்பைக் கற்று, நடிப்புக் கலைக்கு தன்னை அர்ப்பணிக்கும் ஈடுபாடு மிகுந்தவராயிருந்ததாலேயே 'பாரதி'க்கு உயிர்கொடுக்க முடிந்தது என்பதில் சந்தேகமில்லை.



நடை, உடை, பாவனை, வசன உச்சரிப்பு, ஏற்ற இறக்கங்கள், பாத்திரத்திற்குள் தம்மைப் புகுத்திக் கொள்ளும் சிரத்தை போன்றவற்றில் பயிற்சியும், உலகளாவிய ரீதியில் சிறந்த நடிகர்களின் படங்களைப் பார்த்துக் கிரகித்துக் கொண்ட ஞானமுமே அவர்களை நடிப்புக் கலைஞர்களாக நம்முன் நிறுத்தியது.



சி
னி
மா

நடிப்பு என்பதற்கப்பால், சினிமா என்பதன் சகல உபதுறைகளிலும் இருந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும் காரணமாகவே எம்.ஜி.ஆர். இன்றும் பேசப்படுபவராக நிலைத்தார். ''இந்தக் கதையில் நான் நடிப்பதைவிட சிவாஜி நடித்தால்தான் நல்லது'' என்று சொல்லக் கூடிய தெளிவும் பெருந்தன்மையும் கூட எம்.ஜி.ஆரிடம் இருந்தன.

இன்றைய ரஜினிகாந்திடமும் நாம் இதை அவதானிக்கிறோம். ரஜினியும் நடிப்புப் பயிற்சிக் கல்லூரியில் முறையாக நடிப்பைப் பயின்றவர். கே.பாலசந்தரால் அறிமுகப் படுத்தப்பட்டவர். சாதாரண மக்கள் எதை ரசிப்பார்கள் என்பதை இனங்கண்டு தன் ஒவ்வொரு படத்தையும் வெற்றிப்படமாகத் தரமுடிகிறது அவரால். தன் முகத்துக்காக மட்டுமே படம் ஓடுகிறது என்றோ, வசூல் குவிகிறது வருஷத்துக்கு மூன்று படம் நடித்துப் பணத்தை அள்ளிவிடலாம் என்றோ தப்புக்கணக்கில் இறங்காமல் நிதானமாக இருந்து தன் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமல் ஆறு வயதிலிருந்தே சினிமாவில் வாழ்ந்து வருபவர். உதவி இயக்குனராக, உதவி நடன இயக்குனராக எல்லாம் இருந்து சினிமாவின் பரிமாணங்களை அறிந்து கொள்வதில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர். தொடர்ந்தும் அந்தத் தேடலில் தீவிரமாக உழைப்பவர். நவீன மேக்கப் முறைகளுக்காகவும், திரைக்கதை அமைக்கும் உத்திக்காகவும் ஹொலிவூட் கலைஞர்களிடம் சென்று பயிற்சிபெற்று வந்து தன் தரத்தையும் தமிழ்ப் படங்களின் தரத்தையும் உயர்த்துவதில் முனைப்புடனிருப்பவர். நான்குமுறை தேசிய விருதுகளையும் வாங்கியிருக்கிறார்.

இந்த அளவுக்கு இன்றைய முன்னணி இளம் நடிகர்களிடம் தங்கள் துறை குறித்த அர்ப்பணிப்பும் ஈடுபாடும் இருக்கிறதா என்பதே கேள்வி. எல்லோரும் எம்.ஜி.ஆர்., ரஜினி போல வந்துவிடுவதற்குப் பிரயத்தனமும் பேராசையும் கொண்டிருக்கிறார்களே தவிர, எம்.ஆர்.ராதா, டி.எஸ். பாலையா போன்றோரின் இடத்தை ஈடுசெய்ய முயற்சிக்கிறவர்களைக் காணோம்.

ரகுவரன், நாசர், பிரகாஷ்ராஜ் போன்றோர் இருக்கிறார்கள்தான். ஆனால் அவர்களது உழைப்பும் இங்கே ஹீரோக்களாலேயே அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஹீரோவாக இல்லாததால் பிரகாஷ்ராஜ் போன்றவரெல்லாம் இரண்டுமுறை தேசிய விருது பெற்றதும் பலருக்குத் தெரிய வராமல் போயிருக்கிறது.



அஜீத் சமீபத்தில் 'சிட்டிஷன்' படத்தில் ஒன்பது வேடமேற்றதும், ஒரு மேக்கப்புக்காக நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட்டதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இத்தகைய அசுர பிரயத்தனங்கள் பாராட்டப்பட வேண்டியதுதான். நடிப்பில் காட்டப்படும் ஈடுபாடு வரவேற்புக்குரியதுதான். ஆனால் அதற்குரிய விளம்பரங்கள் நடிப்பின் மீதான ஈடுபாட்டை விட பிறபலன்களை முன்னிட்ட முயற்சிகளா இவை என்ற சந்தேகத்தையே அதிகப்படுத்துவதாயுள்ளன.



மௌனப் படமான 'பேசும் படம்' கதையை அதன் இயக்குனர் சிங்கீதம் சீனிவாசராவ் கமலிடம் சொன்னபோது ''வசனம் பேசாமல் முகத்தில் நடிப்பை வெளிப்படுத்துமளவுக்கு என் முகத்தில் இன்னும் முதிர்ச்சி வரவில்லை. பிறகு பார்க்கலாம்'' என்று மறுத்துவிட்டாராம் கமல். பின்னர் எட்டு வருடங்கள் கழித்துத்தான் அந்தப் படத்தில் அவர் நடித்தார் என்பதையும் இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.



எப்படி இருந்தாலும் ''நடிக்க வாய்ப்பு இல்லாவிட்டால் நான் செய்துவந்த ஏற்றுமதி வியாபாரத்தைக் கவனிக்கப் போய்விடுவேன்'' என்று சொல்லி வந்த அஜீத், இன்றைக்குத் தேசிய விருது பெறவேண்டும் என்று நினைப்பதே நடிப்பின்மீது அவருக்கு ஏற்பட்டிருக்கும் பிடிப்பைக் காட்டுகிறது. இது ஆரோக்கியமாகத் தொடர வேண்டும்.

அதேபோல் விஜய், தாம் நடிகனாகியே தீரவேண்டும் என்று இயக்குனரான தன் தந்தையிடம் போராடி இந்தத் துறைக்கு வந்தவர்தான். ஆனால் நடிப்பில் அவருக்கு ஏதேனும் இலக்கு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. 'படம் கலகலப்பாக இருக்க வேண்டும்; வெற்றியடைய வேண்டும்' என்று நினைப்பது மட்டுமே இலக்காகி விடாது. சவாலான வேடங்களையும், சாதனைகளை நோக்கிய முன்னேற்றமும்தான் சரித்திரப் பக்கங்களுக்கு ஒரு நடிகரை இட்டுச் செல்லும்.

அடுத்து, நடிப்புக்காகத் தன்னை நிரம்ப வருத்திக் கொள்பவராகப் பேசப்படுபவர் விக்ரம். 'சேது' படத்திலிருந்துதான் இவரது பேட்டிகள் பரபரப்பு பெற ஆரம்பித்தன. ஆனால், அடுத்த படமான 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' இவரைச் சொதப்பலாக வேகாட்டியது. கேட்டால் ''நல்ல இயக்குனர்தான் என்னிடம் நடிப்பை வாங்க முடியும்'' என்றார். அப்படியென்றால், இயக்குனர் சரியாக இல்லாவிட்டால் இவரால் நடிக்கவே முடியாது என்றல்லவா ஆகிவிடும். பின்னர் வந்த 'தில்' படத்திலும் இவரது உழைப்பு பெரிதாகத் தென்படவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





இன்றைய இளம் நடிகர்கள் எவரைக் கேட்டாலும் தாங்கள் நல்ல கதையைத் தேர்ந்தெடுப்பதிலேயே அதிகசிரத்தை காட்டுவதாகக் கூறுவர். அது வரவேற்கப்படவேண்டியதுதான். ஆனால் நல்ல கதை மட்டுமே வெற்றியைத் தந்துவிடும் என்றால், அதில் யார் வேண்டுமானாலும் நடித்துவிடலாம் என்பதுதானே உண்மை ஆகிவிடுகிறது.



ஆகவே நல்ல கதை, நல்ல இயக்குனர், நல்ல கம்பனி என்பதில் மட்டுமில்லாது 'நாமும் நன்றாக நடிப்பதற்கு வேண்டிய பயிற்சிகளும் முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும் என்பதை இன்றைய நடிகர்கள் உணர வேண்டும்.


ஹீரோவாக வேண்டும், அழகான நங்கையருடன் டுயட் பாட வேண்டும், ரசிகர் வெள்ளத்தில் நீந்த வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதற்கும் மேலாக நடிப்பின் மேலும் ஆசையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய நடிகர்களின் மேலோட்டமான போக்கைப் பார்க்கும்போது நடிப்பைவிட நடிப்பதினால்வரும் பிற பயன்கள்தான் இவர்களை இந்தத் துறைக்கு இழுத்து வந்திருக்கிறதோ, இன்னமும் பிடித்து வாட்டுகிறதோ என்றே சந்தேகப்பட வைக்கிறது.

இதை மாற்றுவதற்கு இவர்களுக்குத் தேவை நல்ல கதையோ, நல்ல தொழினுட்பங்களோ, விளம்பரங்களோ அல்ல நடிப்பின் மீதான இவர்களது **'அர்ப்பணிப்பு'** மட்டுமே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உண்மைக் காதலர்கள்

'சப்தம்' படத்தில் நாயகன் நாயகியாக நடிக்கும் ரிஷியும் ரித்திகாவும் உண்மையிலேயே காதலர்கள்தானாம். இவர்கள் இருவரும் ஆபாவாணனின் அடிமைகள் படத்தில் புதுமுகங்களாக அறிமுகமாயிருந்தவர்கள். அந்தப் படம் பாதியிலேயே நின்றுவிட்டது. ஆனால் அறிமுகப் பார்வையிலேயே பற்றிக்கொண்டுவிட்ட ரிஷி, ரித்திகா ஆகியோரின் காதல் தொடர்ந்தது. இப்போது 'சப்தம்' படத்தில் ரித்திகாவுக்கு முதலில் வாய்ப்புக் கிடைத்தது. அவர் தன்னுடன் நடிப்பதற்குத் தன் காதலரை சிபாரிசு செய்ய, படத்தின் ஹீரோவாகியிருக்கிறார் ரிஷி.

## மச்ச மச்சினியே!



ஜோதிகா சிம்ரன் தவிர்ந்த ஏனைய கதாநாயகிகளுக்கு இணையான சம்பளம் வாங்கும் ஒரே உப நடிகை மும்தாஜ்தான். 'சாக்லேட்' படத்தில் கதாநாயகியை விடவும் அதிக காட்சிகளில் நடித்து கலக்கியிருக்கிறார் இவர். ம்... உடம்பெல்லாம் மச்சம்தான். மச்சம் என்றதும் இந்த முக்கியமான செய்தியைச் சொல்லியே ஆகவேண்டும். மும்தாஜுக்கு உண்மையிலேயே நடுமுதுகின் இடப்பக்கத்தில் ஒரு குட்டி மச்சமிருந்தது. மச்ச சாஸ்திரப்படி அந்த இடத்தில் மச்சம் இருக்கக்கூடாது என்று பிரபல ஜோதிடர் சொல்ல உடனடியாகவே பிளாஸ்ரிக் சேர்ஜரி மூலம் அதை அகற்றியிருக்கிறார். தன்னிடமுள்ள மச்சங்களையெல்லாம் ரசிகர்களுக்கும் காட்டிவிடும் எண்ணத்தில் படத்துக்குப் படம் ஆடையின் நீள அகலங்களைக் குறைத்துக் கொண்டே வரும் மும்தாஜுக்கு சங்கடமான ஒரு நிலமை ஏற்பட்டிருக்கிறது பாக்கியராஜ் படத்தில். 'ரொம்பப் படிச்சவங்க' படத்தில் முழுக்க முழுக்க சேலை அணிந்து நடிக்க வேண்டும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டாராம் பாக்கியராஜ். சேலை கட்டுவதை மறந்துவிடாமல் இருக்க மும்தாஜ்ஜுக்கு இது உதவும் என்பது நல்லதுதான். அது சரி, பாக்கியராஜுக்கு என்ன ஆயிற்று...?

## மற்றொரு ராதிகா!



'ஜூன் ஜூலை'யில் அறிமுகமாகும் அபர்ணா மும்பை மொடலாக இருந்தாலும் தாய் மண் கேரளா. இயற் பெயர் ராதிகா மேனன். ஏற்கனவே நக்மாவின் ஒரு தங்கை ராதிகா 'ரோஷினி' ஆனது போல, 'அபர்ணா' ஆகியிருக்கிறார் இந்த ராதிகா.

சிம்ரன், ஜோதிகா, லைலாவால் ஓரங்கட்டப்பட்டுவிட்ட ரம்பா புதிய அவதாரம் எடுக்கிறார். தன்னை நிலைநிறுத்திக் கொள்ள 'த்ரீ ரோஸஸ்' என்ற பெயரில் படம் ஒன்றைத் தயாரிக்கிறார். துணைக்கு ஜோதிகா, தேவயானி ஆகியோரையும் சேர்த்துக்கொண்டு தானும் நடிக்கிறார் ரம்பா.



'அழகான நாட்கள்' படத்தில் ரம்பா



## 'இளையகான' வில்லன்

அப்பா பாணியிலேயே நடிகராகவும் ஆகிவிட்டார் எஸ்.பி.பி.சரண். கதாநாயகனாக நடித்த இரண்டொரு கன்னடப் படங்கள் வெற்றி பெறாததால் தற்போது ஐந்து படங்களில் வில்லனாக நடித்துக் கொண்டிருக்கிறார் இந்தப் பாடகர் மகன். அமெரிக்காவில் எம்.பி.ஏ படித்து முடித்த சரண், சென்னையில் பாடகராகவும் பெங்களூரில் நடிகராகவும் கொழும்பில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் ஓய்வின்றி ஓடித்திரிகிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஃபெயார் பிளஸ்' விளம்பரத்தில் வந்து புருவ உயர்த்தலில் கிறங்கடிக்கும் சாந்தலி சின்ஹா சினிமாவுக்கு வந்துவிட்டார்.







பூவெல்லாம் உன் வாசம் படத்தில் ஒரே ஒரு பாட்டுக்கு ஆட வந்தார் யுக்தா முகி. ஐந்து நாட்களாக பாடலை எடுத்தார்கள். இந்த ஐந்து நாள் பழக்கத்திலேயே அஜித்தை ரொம்பப் பிடித்துவிட்ட தாம் முகிக்கு. படப்பிடிப்பு சமயத்தில் கணவர் அஜித்துக்கு ஷாலினி கொண்டுவந்த முருங்கைக்காய் சாம்பாரின் சுவையை மறக்கமுடியாமல் இப்போதும் நாவூறுகிறாராம் உலக அழகி.

தன்னை அறிமுகப்படுத்திய டைரக்டர் சூர்யாவிடம் இப்போதும் அடிக்கடி போனில் ஆலோசனைகள் கேட்டு வருகிறாராம் ஜோதிகா. புத்திசாலித்தனமான இயக்குனரிடம் ஆலோசனை கேட்டால் என்ன தப்பு என்கிறார். சரிதான், பூமிகா வாழ்க்கையில் புயலடிக்காமல் இருக்கவேண்டுமே!

## கைவசம் திறமை!

'திருநாள்' படத்தில் சத்யராஜிக்கு ஜோடியாக அறிமுகமாகிய பூனம் வண்ணத்தமிழ் பாட்டு, ஆனந்தம் போன்ற படங்களிலும் வந்தவர். மும்பை வரவான இவர் குண்டுப் பெண்மணிகளை விரும்பும் தமிழர்களுக்காக நிறைய சாப்பிட்டு, நிறைய தூங்கி கஷ்டப்பட்டுக் குண்டாகியதாக சொல்கிறார். நிறையப் பணம் சம்பாதிப்பதற்காகவே சினிமாவுக்கு வந்தேன் என்று வெளிப்படையாகப் பேசும் பூனம் கரம்போர்ட் விளையாட்டில் பலே கில்லாடி. படப்பிடிப்புகளின் போது சத்யராஜ் பிரபு போன்றோர் இவருடன் விளையாடி மூக்குடைபட்டிருக்கிறார்கள். மும்பைப் பாடசாலைகளுக்கிடையிலான கரம் போட்டியில் கலந்துகொண்டு ஐந்து முறை பட்டம் வென்றிருக்கிறார் பூனம். தன்னுடைய காரில் சின்ன கரம்போர்ட் ஒன்றை எப்போதும் வைத்திருக்கிறார். உட்கார்ந்து விளையாடினால் குண்டாக என்ன தடை?



சத்யராஜுடன் நடிக்கும் 'ஆண்டான் அடிமை' படம் முடிந்தவுடன் சின்னத்திரைக்கு வருகிறார் சுவலட்சுமி. சன் டி.விக்காக அந்த டெலிபிலிமை இயக்குவது 'காலமெல்லாம் காதல் வாழ்க' இயக்குனர் பாலு.



மூன்றாவது தங்கையுடன் சிம்ரன்

## தங்கைக்காக...


நட்சத்திர உணவு விடுதியொன்றில் ராஜுசுந்தரத்தோடு டின்னர் சாப்பிட சிம்ரன், மோனல் இருவரும் சென்றிருக்கிறார்கள். ஒரு பெங்காலி உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ராஜுவிடம் ''எப்படியிருக்கிறது? டேஸ்ட்டாக இருக்கிறதா?'' என்று மோனல் கேட்க, ''சாப்பிட்டுப் பாரேன்'' என்று ஊட்டிவிட்டாராம். சிம்ரன் கடுப்பாகிவிட்டார். வெளிப்படையாக கண்டிக்கவும் செய்திருக்கிறார். ராஜுசுந்தரம் இதை சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் மோனல் முகத்தை திருப்பிக்கொண்டு உடனேயே எழுந்து சென்றுவிட்டாராம். இப்போது இருவரும் தனித்தனி மானேஜர் வைத்துக்கொள்ளுமளவுக்கு விரிசல். சொந்தத் தங்கையை முன்னுக்கு கொண்டுவருவதற்காக எல்லோரிடமும் சான்ஸ் கேட்டு அலைந்த அக்கா சிம்ரன் இப்போ கூட்டித்திரிவது மூன்றாவது கடைக்குட்டித் தங்கையை. அது ஒருபுறமிருக்க, ராஜுசுந்தரமும் சிம்ரனும் சேர்ந்து நடிக்கும் 'ஐ லவ் யூடா' படத்தில் இதுவரை யாருமே செய்யாத புதுவித நடனக் காட்சிகளையெல்லாம் ஆடியிருக்கிறார்களாம். படமே ஆடல் பாடல் கும்மாளம்தானாம். படத்தில் மற்றொரு விஷேசம் கிரிக்கட் வீரர் கபில்தேவ் தமிழ் பேசி நடிக்கிறார்.

காதலர் முத்தம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுக்கவிதை அல்ல கதை

# 'அந்த' விசேஷம்

ச. சாரங்கா — சங்கத்தானை

எனக்கு நான் கனக்கும் பொழுது.

மந்தாரம் மனதுள் நுழைந்த உணர்வு.

எட்டிப்பார்த்தேன்.

இதய இருக்கை வெறுமாய்க் கிடந்தது.

தேடினேன்.

சேலை பிடித்து அல்லது விரல் சூப்பிச் சினந்து சிணுங்கும் குழந்தையாய் முடங்கிக் கொண்டிருக்கக் கூடும்.

வானொலி தட்டினேன்.

'வாடா வாடா வாடா' என 'பையனை' அழைத்தது. கர்ண கடூரம்.

'சடக்'கெனத் திருப்பினேன்.

'நான் பாத்துக்கிட்டே தான் இருப்பேன்' என்றது. சேர்ந்து பாட வரக் காணோம்.

சொல்லாமல் கொள்ளாமல்..... என்ன இது? சலித்தேன்.

பாதரசம் போலும் என் மனம்.

நேற்றைய நாளில் நாளேடு சொன்ன 'நடவடிக்கை' இழப்புக்கள் அறிகையில் தானும் துண்டுபட்டது.

சிதறி ஓடிற்று.

பின்னால் ஓடிப் பொறுக்கிச் சேர்த்தேன். அந்தக்'கனதி'யில் அமைதி ஆயிற்றோ?

சற்றுமுன்தான் விழிக்குள் சிக்கிய ஒரு இளைஞனை 'அழகென' வியந்திருந்தேன்.

வருங்கால புருஷத்துவத்துக்கு இழைத்துவிட்ட ஏதோ ஒருவகைப் பிறழ்வாய் தலைகுனிந்து நிற்கிறதோ?

அல்லது பஸ் பிரயாணத்தில் துவளும் எழுபதிற்கு இடங்கொடாத குற்றவுணர்வில் குறுகி நிற்கிறதோ?

கேள்விகள். கேள்விகள். கேள்விகள்.

பதிலற்ற வெளி.

சும்மா சொல்லக்கூடாது. சித்தார்த்த கனவுகளும் கொஞ்சம் உண்டு. சில நேரங்களில் மனதோரம் புனிதம் மின்னுவதுண்டு. ஞானசிந்தனை ஆற்றில் மனங்குளிக்கும்.

குளித்துத் தூய்மையாய் வந்து நிற்கத் தூசியாய் அதில் படியும் பாவசிந்தனைகள்.

பாவம் என்பது பாசம்.

பாசம் என்பது பற்று.

பற்றறுத்தல் பரிநிர்வாணப் பாதை.

மௌனம் அதன் முதற்படி.

அவ்வழி மௌனத்தில் ஆழ்ந்ததோ?

தேடினேன். கண்டுபிடித்தேன். காணவில்லை என்பதை.

மனுஷ ஜந்துக்களில் 'தேள்கள்' உண்டு. அவை தம் விமர்சனக் கொடுக்கு நீட்டும். கொட்டும்.

மனந்தான் அவற்றின் இலக்கு.

கொட்டிய புள்ளிவலி மனமெங்கும் விரியும்.

தனக்குள் பிணங்கி அழுது அவற்றை தோற்கடிக்க அல்லது மறக்க மனம் முயலும்.

சிலவேளை பயத்தில் ஓடி ஒளிந்து கொண்டு விடுவதுமுண்டு.

'கொடுக்குகள்' துழாவி விட்டு ஏமாந்து பின்னடையும்.

அவ்வேளையில் 'களுக்'சிரிப்போடு எட்டிப் பார்க்கும். மெதுவாய்.


நிமிஷக் கரைவுகள்.

'திரும்பத் திரும்ப' இதய இருக்கைமீதான என் தேடல்.

இதென்ன! ஒரு ஓரமாய் என்னுடையது என்னுடையதல்லாததானா வேறொரு மனத்துடன்... உல்லாசமாய்.

அட! ''அந்த'' விசேஷமா?

என்னிலும் நிகழ்ந்து விட்டதா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற

# மகிழ்வைக் கெடுக்கும் மலச்சிக்கல்

ச.குமுதினி
யாழ். மருத்துவ பீடம்

கண்ணன் அறைக்குள் நுழைந்தபோது தாத்தா சோபாவினுள் அசிரத்தையாய்க் கண்மூடிப் படுத்திருப்பது தெரிந்தது. என்றுமில்லாதபடி அவர் சோர்ந்திருப்பது அவனைக் குழப்பத்தில் ஆழ்த்திற்று. அருகே சென்று அவர் காதருகே குனிந்தான்.

''தாத்தா... தாத்தா...''

''ம்ம்...ம்...''

''எழும்பி வாங்கோ தாத்தா 'கரம்' விளையாடுவம்....''

''இல்லையப்பு... நான் இண்டைக்கு ஹொஸ்பிடலுக்குப் போகவேணும்...''

''ஏன் தாத்தா...?''

''ஒரு சின்னச் சிக்கல்...''

''என்ன தாத்தா...''

''நாலு நாளாப் போகேல்லை...''

''எங்க தாத்தா?...''

தாத்தா மௌனமாய்க் கைவிரல்களை நிமிர்த்தி 'இரண்டு' என்பதாய்க் காட்டினார்.

★★★

'வாழ்க்கையே சிக்கல்' என்பது பலரின் அபிப்பிராயமாக இருக்கிறது. மலச்சிக்கல் அப்படியொன்றும் மிகுந்த பிரச்சினைக்குரியது அல்லவெனினும் நாளாந்த வாழ்வில் அசௌகரியங்களை ஏற்படுத்துவதாலும், நோய்க்குரிய மனநிலையைத் தனிநபரில் ஏற்படுத்தவல்லதாயும் இது இருக்கின்றது.

இயல்பான மலங்கழித்தல் உடல், உள ஆரோக்கியத்தின் சுட்டியாகக் கருதப்படுகின்றது. இதனால் மலச்சிக்கல், நோயின் ஒரு அறிகுறியாகவோ, உளநெருக்கீட்டின் அடையாளமாகவோ, சமநிலையற்ற உணவுப்பழக்கங்களின் விளைவென்றோ மருத்துவ உலகில் தனிக்கவனம் பெறுகின்றது.

ஆரோக்கியமான ஒருவர் உட்கொள்ளும் உணவு, சில மணி நேரங்களுள் நீண்ட உணவுப்பாதையூடாக கடத்தப்பட்டு விடுகிறது. உணவுக்குழாயினூடான பயணத்தின் போது செரிக்கப்பட்ட பதார்த்தங்களில் தேவையானவை குருதியினால் உறிஞ்சப்பட்டு விட மீதக் கழிவுகள், அதிகத் திண்மமோ அதிகத் திரவமோ அல்லாத இளகிய மலமாக ஒருநாளிற்கு ஒரு தடவையாவது உடலின் வெளியே அகற்றப்படுகிறது.

இவ்வாறில்லாமல், கடினப்பட்ட திண்மமலம் ஆகக்குறைந்தது மூன்று நாட்களுக்கு (பெரியவர்களில்) அல்லது நான்கு நாட்களுக்கு (சிறியவர்களில்) ஒருதடவை மிகுந்த பிரயாசையோடு (Straining) கழிக்கப்படுதலே மலச்சிக்கல் எனப்படுகின்றது. மலங்கழிக்கும் போது நோ ஏற்படல், திரும்பவும் மலங்கழிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படுதல், வயிறு, குதப் பகுதிகளில் அசௌகரியம் (Discomfort) போன்றனவும் மலச்சிக்கலின் போது ஏற்படுகின்றன.

ஆண்களைவிடப் பெண்களே (குறிப்பாகக் கர்ப்பிணிகள்) மலச்சிக்கலுக்கு அதிகம் ஆளாகின்றனர்.

தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளில் புட்டிப்பால் அருந்தும் குழந்தைகளை விட மலச்சிக்கல் குறைவாகவே ஏற்படுகின்றது.

சிறுவர்களில் அநேகர் கூச்ச சுபாவம் காரணமாகவே மலச்சிக்கலை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். மற்றவர்கள் முன்னிலையில் 'மலங்கழிக்கப் போகவேண்டும்' என்று சொல்வதற்குக் கூச்சப்பட்டு, மலங்கழிக்க எழுகின்ற தூண்டலை புறக்கணிக்கின்றார்கள். நாளடைவில் உருவாகும் மலச்சிக்கல், குதப் பகுதிகளில் வலி என்பன அவர்களின் மலங்கழிக்கும் தூண்டலை மேலும் புறக்கணிக்கச் செய்ய வாய்ப்பை ஏற்படுத்தி மலச்சிக்கலைத் தீவிரமாக்குகிறது.

முதியவர்களில் போதிய உடற்பயிற்சியின்மையே மலச்சிக்கலை ஏற்படுத்தும் பிரதான காரணியாகும்.

போதிய அளவு நீர் அருந்தாமை, நார்ச்சத்துக்கொண்ட காய்கறிகள், பழவகைகளை உண்ணாமை, (நார்ச்சத்துள்ள உணவுகள் துடைப்பம் போல குடற்பாதையின் கழிவுப் படிவுகளை அகற்றிச் செல்கின்றன) இயந்திரமயமான அவசர வாழ்க்கையில் மலங்கழிப்பதற்குக் குறிப்பிட்ட நேரம் ஒதுக்காமை, இயற்கையாய் எழும் மலங்கழிப்பதற்கான தூண்டலை அலட்சியப்படுத்தல், உளநெருக்கீடுகள், மன அழுத்தங்கள் என்பன சில காரணங்களாகும்.

வேறு நோய்களின் பொருட்டு எடுக்கின்ற சில மருந்து வகைகளும் மலச்சிக்கலை ஏறபடுத்துகின்றன. (உ+ம்) மோபின் (morphine), கோடின் (codeine) அலுமினியம் உப்புக்கொண்ட அமில எதிர்ப்பு மருந்துகள் (antacids) இரும்பு, கல்சியம் மிகை நிரப்பிகள், குருதியமுக்கம் சீராக்கும் மருந்துகள் (diuretics) என்பன.

நீண்டநாட்களாய் தொடரும் மலச்சிக்கல் வேறுநோய்களின் அறிகுறிகளாகவும் இருக்க முடியும். பெருங்குடல் புற்றுநோய் (colonic carcinoma), நீரிழிவு (diabetes), குழாய்க் கிளை நோய் (diverticular disease) பாகின்சனியம் (parkinsonium), ஏசுப்பிறங்கின் நோய் (hirschsprung's disease) குருதியிரிதி (harmorrhoids - piles) மூளையக் கலத்தாக்கம் (cerebromascular accident) மந்த நிலை (depression) போன்றன அவ்வாறான சில நோய்களாகும்.

**மலச்சிக்கலை எவ்வாறு குணப்படுத்தலாம்?**

போதுமான அளவு காய்கறிகள், பழவகைகளை உண்ணுதல், நீரருந்தல், உடற்பயிற்சி செய்தல், மகிழ்ச்சியான மனநிலை என்பனவே மலச்சிக்கலிலிருந்து விடுபடப் போதுமானதாயிருக்கிறது. மலங்கழிக்கப் போதுமான அளவு நேரம் ஒதுக்குதல், இயல்பான தூண்டலை அலட்சியப்படுத்தாதிருத்தல், சிறுவர்களின் கூச்சத்தை விலக்குதல் என்பனவும் அத்தியாவசியமானவையாகும்.

வைத்தியர் உங்களுக்கு இளக்கிகளை சிபாரிசு செய்யக்கூடும்.

மலச்சிக்கலோடு பின்வரும் அறிகுறிகள் இருப்பின் நீங்கள் நிச்சயம் வைத்திய ஆலோசனையை நாட வேண்டும்.

- காய்ச்சல்,
- கீழ்வயிற்று நோ
- குதத்திலிருந்து ரத்தம் வடிதல், நோ, நிறைக்குறைவு.
- 2 வாரம் தொடரும் வயிற்றுவலி.
- முதிய/நடமாட முடியாத ஒருவரில் 1 கிழமைக்கு மேலாக.

★★★

இண்டைக்கு எப்படியும் உங்களோட 'கரம்' விளையாடுறதுதான்...'' கண்ணன் சொல்லிக்கொண்டிருக்க தாத்தா அவசரமாய் எழுந்தார். ''மலச்சிக்கல் எண்டு பழங்களையும் நிறையச் சாப்பிட்டு டலகோலக்ஸையும் குடிச்சு விட்டன், இப்ப படுறபாடு....'' தாத்தாவின் அவசர நடையோடு குரலும் தேய்ந்து கொண்டு சென்றது.... கொல்லைப்புறமாய். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு: மல்லிகைப் பந்தல்
201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13.
பக்கங்கள் - 101
விலை - 110.00

## முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள்

**- டொமினிக் ஜீவா**

நாடறிந்த எழுத்தாளரும் 'மல்லிகை' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு.டொமினிக் ஜீவா அவர்கள் ஐரோப்பிய பரீஸ்-பேர்லின்-லண்டன் ஆகிய மூன்று முக்கிய நகரங்களுக்கு இலக்கியப் பயணம் மேற்கொண்டு வந்த அனுபவங்களினதும் பார்வையினதும் தொகுப்பாக இந்நூல் வந்துள்ளது.

பரீஸில் நடைபெற்ற 27வது இலக்கியச் சந்திப்பில் பிரதம பேச்சாளராக அழைக்கப்பட்ட நேரத்திலேயே மற்றைய இரு நகரங்களுக்கும் ஜீவா சென்று இலக்கிய ஆர்வலர்களை மட்டுமின்றி பல்வேறுபட்ட நண்பர்களையும் சந்தித்து வந்துள்ளார்.

சமூகத்தின் கீழ்மட்டத்திலிருந்து வந்து முற்போக்கு அரசியலை தன் வழிகாட்டும் தத்துவமாக ஏற்றுக்கொண்டு இலக்கியப் பணியையே தன் வாழ்வாகக் கொண்டு உழைத்து வருகின்ற திரு.டொமினிக் ஜீவாவை புலம்பெயர் ஈழத்து தமிழ் இலக்கியவாதிகள் அழைத்து கௌரவித்தது அவருக்கு மட்டுமின்றி அழைப்பாளர்களுக்கும் கௌரவம் என்று தான் கூறவேண்டும்.

தனது 75வது பிறந்த தின பவளவிழா நேரத்தில் இத்தகைய ஒரு பெறுமதியான அனுபவங்களை இந்நூலின் வாயிலாக ஈழத்து வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டிருப்பது காலத்திற்கேற்ற சாலப்பொருத்தமே.



வெளியீடு: சாரல் வெளியீட்டகம்
7, பல கூட்டுத்தொகுதி
ரொசிட்டா கடைவீதி,
கொட்டகலை.
பக்கம் - 102
விலை - 130.00

## மனுஷியம் (சிறுகதைகள்)

**- மல்லிகை சி.குமார்.**

ஈழத்து தமிழிலக்கிய களத்தில் மலையகத் தமிழ் இலக்கியம் ஒரு தீர்க்கமான பங்கை வகித்து வருவதை வரலாறு நிரூபித்துள்ளது. 50களில் ஏற்பட்ட தேசிய மறுமலர்ச்சி எழுச்சியின் போது வடக்கு-கிழக்கு தமிழிலக்கிய அரங்கு புது மெருகுபெற்றது. அதன் பிரவாகம் மலையகத் தமிழிலக்கியத்தை 60களில் தான் வியாபித்துக் கொண்டது. அந்தப் பிரவாகம் அடித்துவந்த திரவியங்களில் ஒன்றாக மலையக யதார்த்த எழுத்தாளர் மல்லிகை சி.குமார் திகழ்கின்றார்.

1960களில் மலையகத்தில் ஏற்பட்ட புரட்சிகர அரசியல் விழிப்புணர்ச்சியின் சுவடுகள் மல்லிகை சி.குமார் அவர்களின் சிறுகதைகளில் படிந்திருப்பது இதனால்தான். இத்தொகுதியில் 13 சிறுகதைகளில் ஒன்றைத் தவிர ஏனையவை 80களுக்குப் பின் எழுதப்பட்டவையே.
பெரும்பாலும் தான் வாழுகின்ற சமூகமான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்வையும் போராட்டங்களையுமே அவரது கதைகள் சித்தரிக்கின்றன. அந்தச் சமூகத்தின் மனச்சாட்சியாக இக்கதைகளின் மூலம் ஆசிரியர் மிளிர்வதே அவரது கதைகளின் வெற்றியின் இரகசியமாகும்.




**- மாணிக்கவாசகன்**



வெளியீடு: சஹ்றா பப்ளிகேசன்
71, பஸீர் வீதி,
மாவடிச்சேனை,
வாழைச்சேனை.
பக்கங்கள் - 100
விலை - 110.00

## ஆண் மரம் (சிறுகதைகள்)

**- ஓட்டமாவடி அறபாத்**

கிழக்கிலங்கை மண்ணில் 80களின் பின் தோற்றம் பெற்ற சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ஓட்டமாவடி அறபாத்தின் 12 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு இது. வடக்கைப் போலவே கிழக்கிலும் உக்கிரமடைந்துள்ள தேசிய இனப் பிரச்சினையின் தாக்கமும் அதனால் எழுந்துள்ள மக்களின் அவல வாழ்வுமே பெரும்பாலும் இவரது கதைப் பொருட்கள்.

மக்களின் உள்ளார்ந்த அவலங்களை உணர்வூற்று இலக்கியச் சித்திரமாய் தீட்டுவதில் அறபாத்தின் செய்நேர்த்தி விதந்துரைக்கத்தக்கது. தமிழின் சர்வாம்ச செழுமையை மேலும் பட்டைதீட்டிப் பாவிக்க முடியும் என்பதை இவரது கதைகளை புனைந்து நிற்கும் தமிழ்சொற் பூக்கள் இதழ் விரித்துச் சொல்கின்றன. சம்பவங்களின் பாதிப்பும் மண் சூழலின் ஸ்பரிசமும் உணர்வாழ்ந்த ஈடுபாடும் அறபாத்தின் கதைகளைப் புடம் போட்டு தகதகத்துப் பிரகாசிக்க வைக்கின்றன.
வடக்கு கிழக்கு மண்ணில் அழியாத் தடங்களாகிப் போன அரச பயங்கரவாதம் என்ற ஆயுதப்படைகளின் சுவடுகளால் மட்டுமின்றி விடுதலைப் பயங்கரவாதம் என்ற தமிழ் ஆயுதக்குழுக்களின் வெட்டுக் கொத்துகளாலும் அன்னைபூமி காயம்பட்டுக் கிடக்கிறாள். அறபாத் இந்த மறுபக்கத்தையும் எழுதி முழுமைபெறும் நாள் அதிக தூரத்தில் இருக்காது என்பது அவரது எழுத்தையும் வளர்ச்சியையும் நேசிப்பவர்களின் எதிர்பார்ப்பாகும்.



## உலகத்து நாட்டார் கதைகள்

**தமிழில் மீள் மொழிவு - நீர்வை பொன்னையன்**

**வெளியீடு: மீரா பதிப்பகம்**
**191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை. கொழும்பு-06.**

ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளர்களில் இன்றும் சலிப்பின்றியும் இலட்சிய வேட்கையுடனும் இயங்கிக் கொண்டிருக்கின்ற நீர்வை பொன்னையனின் இந்நூல் 250 'கடுகு' கதைகளைக் கொண்டு வெளிவந்துள்ளது. 50 ஆண்டுகளுக்கும் மேலாக தான் கேட்டு, அறிந்து, வாசித்து, பார்த்து, ஆய்ந்து அறிந்த பல்வேறு நாடுகளின் நாட்டார் கதைகளை தமிழ் வாசகர்கள் - குறிப்பாக இளம் சிறார்களும் பாமர மக்களும் விரும்பிப் படித்து சுவைத்து புரிந்து கொள்ளும்படி பொன்னையன் மீள் மொழிவு செய்துள்ள பாங்கு சிறப்புற அமைந்துள்ளது. ஆசிரியரின் முன்னைய சிறுகதைத் தொகுதிகளில் உலவுகின்ற கதை மாந்தர்களான சாதாரண உழைக்கும் மக்களும் அவர்களின் இணைபிரியாத் தோழர்களான இயற்கையும் இதர ஜீவராசிகளும் இக் கதைகளிலும் அதே அர்த்தத்துடன் அநீதியையும் அடக்கு முறையையும் எதிர்த்துப் போராடுகின்ற மாந்தர்களாகவும் உயிரினங்களாகவும் வலம்வருகின்றனர்.
'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது போல தனது மக்கள் இலக்கியப் பணியின் நோக்கத்தை இந்த புதியவகை முயற்சியினூடாகவும் பொன்னையன் பரந்து விரிந்த மக்கள் பகுதிக்கு எடுத்துச் சென்றுள்ளார். குழந்தைகளின் உளவியல் மாண்பைச் செப்பனிட ஒவ்வொரு இல்லத்திலும் இவ்வழகிய நூல் இருப்பது பயன்மிக்கது. ***பக்கங்கள்: 351 விலை: 350.00***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சை குத்தி, தாய்வான் பாடகி மாவிஸ் ஃபான்



மூலிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட சாற்றைக் கொண்டு உடலில் பச்சை குத்திக் கொள்வது வட இந்தியப் பெண்களிடையே பிரபலமாகியிருக்கிறது. இதனால் அழகும், உடல் ஆரோக்கியமும் கிடைக்கிறதாம்.


# வண்ணங்களால் உடல் மறைத்து... வனப்பால் உயிர் வதைத்து...



வோஷிங்டனில் நடந்த 'காதல் ஊர்வலம்' நிகழ்ச்சியில் வண்ணங்களால் மட்டும் உடலை மூடிவரும் பெண்கள்.



சிட்னியில் அமெரிக்கர் இருவர் உடலில் சொ்ரிப் பழம் வரைந்து தங்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.



தலைவர் மாவோ சேதுங் உருவை கையில் பச்சை குத்தி வரும் சீனக் கல்லூரிப் பெண்.



மாட்ரிட்டில் நடைபெற்ற பச்சை குத்தும் விழாவுக்குச் சென்றிருந்த இங்கிலாந்துப் பெண்மணி.



தாய்வானில் இளைஞர் யுவதிகளின் இன்றைய ஃபாஷன் இப்படிக் கைகளிலும் உடலிலும் பச்சை குத்திக் கொண்டு வலம் வருவதுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தா விபரம்

## உள்நாட்டு சந்தா
(ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

## வெளிநாட்டு சந்தா
(அமெரிக்க டொலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.